


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

**உங்கள் நூலகம்**

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2048*

*மலர் - 9 இதழ் - 9 - டிசம்பர் - 2017*



கௌரவ ஆசிரியர்

முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்

பதிவு எண் : 21/2005/ 11/2/2005

16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014

ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in

இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00 அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**

**உங்கள் நூலகம்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


# பொருளடக்கம்


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் – 4

பௌத்தமும் பெரியாரும்
அ.மார்க்ஸ் – 13

பசுமண் கலத்துப் பெய்த நீர்
ஆ.கார்த்திகேயன் – 23

அறிவியல் தமிழுக்கு தனித்தமிழ் இயக்கம் ...
டாக்டர் சு.நரேந்திரன் – 25

பாரதி காலம்
நா.வானமாமலை – 35

கம்யூனிசம் - ஒரு நூற்றாண்டு வளர்சிதை மாற்றங்கள்
சி.ஆர்.ரவீந்திரன் – 39

சோசலிசத்திற்கு ஓர் அறிமுகம்
க.காமராசன் – 47

தேய்ந்து வரும் ஒரு நெடுங்காலக் கலை
பொன்னீலன் – 53

மானுடம் பாடிய மக்கள் கவிஞர்
ம.பழனி – 57

கற்பனையின் உச்சம் : கம்போடிய இராமாயணம்
இராமசாமி வெங்கடேசன் – 61

சாதியச் சமூகம் : குடிப்பிள்ளை (சாதிப்பிள்ளை)...
தீ. ஹேமமாலினி – 67

இதிகாச மறுவாசிப்புகள்!
சித்தார்த்தன் சுந்தரம் – 72


**அட்டைப் படம் :**

இலங்கையின் பொலனறுவா
என்னும் ஊரிலிருக்கும்
பௌத்த விகாரையில் உள்ள
புத்தர் புடைப்புச் சிற்பம்

நூல் பிரதி கிடைக்குமிடம்:

Louis Sabinien Dupuis Research Centre
IMMACULATE GENERALATE
19, St. Therese Street,
Pondicherry - 605 001

# படித்துப் பாருங்களேன்...

ஆ. சிவசுப்பிரமணியன்

The First Catholic Bible in Tamil and Louis Sabinien Dupuis at Pondicherry - (2017)

S. Jeyaseela Stephen

பதினெட்டு, பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் தமிழ் விவிலிய மொழிபெயர்ப்புகள்



எஸ். ஜெயசீல ஸ்டீபன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஜெர்மானியர்களான சீகன்பால்க், குருண்டவர் ஆகியோரின் கடின உழைப்பால் அச்சு வடிவம் பெற்ற தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பு முற்றுப்பெறாப் பணியாக அவர்களுக்குப் பின்னரும் தொடர்ந்தது. 'கத்தோலிக்கம்', 'சீர்திருத்தக் கிறித்தவம்' என்ற இரு கிறித்தவப் பிரிவுகளைச் சேர்ந்த அய்ரோப்பியக் குருக்களும், இவ்விரு பிரிவுகளைச் சேர்ந்த தமிழ்க் கிறித்தவர்களும் இப்பணியில் ஈடுபட்டனர். மொழி என்பதன் அடிப்படையில் சிரிலங்காவின் தமிழ்க் கிறித்தவர்களும் அங்குப் பணியாற்றிய அய்ரோப்பியக் குருக்களும் இதில் அடங்குவர்.

தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பில் பரவலாக அறிமுகமானவர்களை மட்டுமின்றி அவ்வளவாக அறியப் படாதவர்களையும் இந்நூல் அறிமுகம் செய்கிறது.

பிரான்சிஸ்கோ-டி-பொன்சேகா என்ற யாழ்ப் பாணத் தமிழ்க் கிறித்தவர் மத்தேயூ எழுதிய நற்செய்தி ஏட்டை போர்ச்சுக்கீஸ் மொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 17-ஆம் நூற்றாண்டில் வெளியான இம்மொழிபெயர்ப்பு இலங்கைத் தமிழர் களால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கி.பி.1736-இல் டச்சு நாட்டினர் சிரிலங்காவில் அச்சாக்கத்தை அறிமுகம் செய்தனர். அடால்ப் கிராமர்

என்பவர் புதிய ஏற்பாட்டின் சில பகுதிகளை 1732-இல் தமிழில் மொழி பெயர்த்திருந்தார். டச்சு ஆளுநரின் ஆதரவு இவருக்கு இருந்தது. தரங்கம்பாடியில் சீகன்பால்க் அச்சிட்ட தமிழ் விவிலியத்தை இப்பகுதியில் பயன்படுத்தி வந்தனர். கிரேக்க மொழி மூலத்தைத் தழுவியே கிராமரின் மொழிபெயர்ப்பு இருந்தது. டச்சு ஆளுநரின் வேண்டுதலின் பேரில் தரங்கம்பாடியில் இருந்து அச்செழுத்து வார்ப்பவர் ஒருவர் கொழும்பு நகருக்கு 1737-இல் வந்து புதிய அச்செழுத்துக்களை உருவாக்கித் தந்தார். இவ்வெழுத்துக்களைப் பயன்படுத்தி 28 ஏப்ரல் 1739-இல் மன்றாட்டு நூல் ஒன்று அச்சானது.

1741-இல் கிராமர் மொழி பெயர்த்திருந்த மத்தேயூ நற்செய்தி 120 பக்கங்களாக கொழும்பு நகரில் டச்சு நாட்டினர் நிறுவியிருந்த அச்சகத்தில் அச்சானது. தரங்கம்பாடியில் அச்சான புதிய ஏற்பாட்டை ஓரளவுக்கு ஒத்திருந்த இந்நூலின் தலைப்பு டச்சு மொழியில் இருந்தது. தமிழிலும் தலைப்பு அச்சிடப்பட்டிருந்தது.

தரங்கம்பாடியில் அச்சான விவிலியத்தில் வசனங்களின் தொடக்கத்தில், வசனஎண் இடம் பெற்றிருந்தது. கொழும்பு நகரில் அச்சான விவிலியத்தில் வசனங்களின் இறுதியில் வசனஎண் இடம் பெற்றிருந்தது. (தரங்கம்பாடியில் தொடக்கத்தில் அச்சான புதிய ஏற்பாட்டிலும் இம்முறையே பின்பற்றப்பட்டிருந்தது.) வடமொழித் தாக்கம் இம் மொழிபெயர்ப்பில் மிகுந்திருந்தது. சான்றாக தரங்கம்பாடி மொழிபெயர்ப்பில் 'பிறந்தார்' என்றிருப்பது கொழும்பு நகரில் வெளியான மொழி பெயர்ப்பில் 'செனிப்பித்தார்' என்றிருந்தது. யகோவா என்பது 'யகோவாகிய சர்வேஸ்வரன்' என்று குறிப்பிடப் பட்டிருந்தது. இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்ற வகையில் தரங்கம்பாடிப் பதிப்பு மாறுதல் செய்யப்பட்டிருந்தது.

வீரமாமுனிவர் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்கள் இப்பதிப்பில் பின்பற்றப்பட்டிருந்தது. (இந்நூலின் ஒரு படி கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ளது).

பிலிப்பிஸ்-டி-மெல்லா என்ற யாழ்ப்பாணத் தமிழர் கொழும்பு நகரில் இருந்த டச்சு ஆளுநரிடம் பணி யாற்றியவர். இவர் ஹீப்ரு, கிரேக்கம், லத்தீன், டச்சு, போர்ச்சுக்கீஸ், தமிழ் ஆகிய மொழிகளில் புலமைமிக்க வராய் இருந்தார். அத்துடன் கொழும்பில் இறையியல் பயின்றார். இதன் அடிப்படையில் லீடன் நகரில் மறைக் கல்வி பயின்று இலங்கையின் மறைப்பணியாளராகும் வாய்ப்பைப் பெற்று ஹாலந்து திருச்சபையின் முதல் உள்நாட்டுக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

கிரேக்க மொழியில் இருந்து பழைய ஏற்பாட்டின் பதிமூன்று சங்கீதங்களை இவர் மொழிபெயர்க்கத் தொடங்கி 1755-இல் யாழ்ப்பாணத்தில் இதை அச்சிட்டார். நூலின் தலைப்பு டச்சு மொழியிலும், தமிழிலும் அச்சிடப்பட்டது. **இராச தீர்க்க தரிசியாகிய தாவிதுனுடைய சில சங்கீதங்கள்** என்று தமிழில் தலைப்பு இடப்பட்டிருந்தது. மொத்தம் 112 பக்கங்களைக் கொண்ட இந்நூல், மூலநூலில் உள்ளபடியே கவிதை வடிவில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. அய்ரோப்பிய இசைக்கு ஏற்ப இவற்றைப் பாடமுடியும். இந்நூலின் மறுபதிப்பு 1776-இல் வெளியானது.

தரங்கம்பாடியில் அச்சான தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பு, பிலிப்ஸ் - டி - மெல்லாவுக்கு நிறை வளிக்காத நிலையில் புதிய ஏற்பாட்டை கிரேக்க மூலத்தைப் பின்பற்றி மொழிபெயர்க்கலானார்.

1746-இல் அவர் தொடங்கிய இப்பணி முற்றுப் பெற்று டிசம்பர் 1759-இல் அச்சு வடிவம் பெற்றது. டச்சு மொழி பேசுவோரின் உதவியால் அச்சிடப்பட்ட இந் நூலின் தலைப்பு டச்சு மொழியிலும் அமைந்திருந்தது. தற்போது வெளியாகும் விவிலியப் பதிப்புகளைப் போன்றே ஒவ்வொரு பக்கமும் இரண்டு பத்திகளாக (காலம்) பகுக்கப்பட்டிருந்தது.

புதிய ஏற்பாடு என்றே தமிழில் தலைப்பிடப்பட்ட இந்நூல் 256 பக்கங்களைக் கொண்டிருந்தது. இலங் கையில் அச்சான முதல் தமிழ்ப் புதிய ஏற்பாடு இதுதான்.

புதிய ஏற்பாடு அச்சாக்கத்தை அடுத்து டச்சுக் காரர்கள் பழைய ஏற்பாடு அச்சாக்கத்தில் ஈடுபாடு காட்டலாயினர். தரங்கம்பாடியில் 1723, 1726, 1727, 1728-ஆம் ஆண்டுகளில் அச்சிடப்பட்ட 'பழைய ஏற்பாடு' குறைபாடுடையதாகக் கருதப்பட்டது. சிறிலங்காவிலும், தமிழகத்தின் கடலோரப் பகுதிகளிலும் ஆதிக்கம் செலுத்திய டச்சு நாட்டினர் இப்பகுதிகளில் வாழும் தமிழ்க் கிறித்தவர்களுக்காக பழைய ஏற்பாடு நூலின் திருத்திய வடிவத்தை அச்சாக்க விரும்பினர்.

இதை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்கனவே விவிலிய மொழி பெயர்ப்பில் ஈடுபட்டிருந்த பிலிப்ஸ்-டி-மெல்லாவிடம் ஒப்படைத்தனர். அவரும் ஹீப்ரு மொழியில் இருந்து சில பகுதிகளை மொழிபெயர்த்தார். இம் மொழிபெயர்ப்பு தொடர்பாகத் தரங்கம்பாடியில் இருந்த கிறித்தவ மறைப்பணியாளர்களுக்கும், கொழும்பில் இருந்த டச்சு நாட்டு அதிகாரிகள், மறைப்பணியாளர் களுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன.

19 ஆகஸ்டு 1790-இல் டி-மெல்லோ இறப்பதற்கு முன் அவரது மொழிபெயர்ப்புப் பணி நிறைவடைந்து விட்டது.

ஜோனான் பிலிப்ஸ் பெப்ரிஷியஸ் (1711-1791) என்ற ஜெர்மானியர், ஹாலே நகரில் இறையியல் கல்வி பயின்றவர். 1740-இல் தரங்கம்பாடி வந்த இவர் அங்கு சிலகாலம் மறைபரப்புப்பணி மேற்கொண்டு வந்தார். 1743-இல் ஆங்கில அதிகாரத்தில் இருந்த சென்னை நகருக்கு இடம்பெயர்ந்தார்.

சென்னை நகரில் முத்து என்ற தமிழ் அறிஞரின் துணையுடன் சீகன் பால்குவின் தமிழ் விவிலிய மொழி பெயர்ப்பை, திருத்தி அமைக்கும் பணியில் ஈடுபட்டார். சீகன்பால்குவின் தமிழ் மொழிபெயர்ப்பு ஹீப்ரு மொழி மூலத்தை அடிப்படையாகக் கொண்டது. இவர் கிரேக்க மூலத்தை அடிப்படையாகக் கொண்டு திருத்தி எழுதும் பணியில் ஈடுபட்டார். இப்பணியில் முப்பது ஆண்டுகள் செலவிட்டார்.

இறுதியாகச் சென்னை வேப்பேரி அச்சகத்தில் நான்கு நற்செய்தி ஏடுகளையும், அப்போஸ்தலர் நடபடிக்கைகளையும் உள்ளடக்கிய புதிய ஏற்பாட்டின் தமிழ் மொழிபெயர்ப்பு 1772-இல் ஆயிரம் படிகள் அச்சிடப்பட்டு வெளியானது. இந்நூலின் பின்னிணைப்பில் முக்கிய கிறித்தவப் பண்டிகைகளின் பட்டியல் இடம் பெற்றிருந்தது. இந்நூலின் தலைப்பு **நமது கர்த்தரும் இரட்சகருமாகிய யேசு கிறிஸ்துவினால் உண்டான கிருபையின் உடன்படிக்கையாகி புதிய ஏற்பாடு** என்பதாகும்.

ஹீப்ரு மொழியில் வெளியான விவிலியத்தின் பழைய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியிலும் பெப்ரிஷியஸ் ஈடுபட்டார். இதற்காக அவர் இருபதுஆண்டுகள் செலவிட்டுள்ளார். இம் முயற்சியில் ஏற்கனவே தரங்கம்பாடியில் வெளியான பழைய ஏற்பாடு தமிழ் மொழிபெயர்ப்பைப் பயன் படுத்திக் கொண்டாலும், அதை அப்படியே பின் பற்றாமல் சுயேச்சைத் தன்மையுடன் செயல்பட்டார். அவரது மொழிபெயர்ப்பு கடலூரில் இருந்த மறைப் பணியாளர்களுக்கு, கருத்தறியும் நோக்கில் அனுப்பப் பட்டது. அவர்கள் அதைப்படித்து டேனிஷ் அரசின் தமிழ் மொழிபெயர்ப்பாளராக இருந்த டேனியல் பிள்ளையிடம் அனுப்பினார்கள். இவர்கள் செய்த திருத்தங்கள் பெப்ரிஷியசின் மொழிபெயர்ப்பைச் செழுமைப்படுத்தின.

தமிழை நன்கறிந்த ஜோனான் பீட்டர்ராட்லர் என்பவரின் சிறப்பான மேற்பார்வையில் தரங்கம்பாடியி லுள்ள மறைத்தள அச்சகத்தில் நான்கு தொகுதிகளாக 367 பக்கங்களில் அச்சிடப்பட்டது. அச்செழுத்துக்கள் பெரிய அளவில் இருந்தமையால் அச்சிடும்போது பக்கங்கள் கூடின. இக்காரணத்தால் நான்கு தொகுதி களாக அச்சானது. முதல் தொகுதி 1777-இல் **மனுஷசாதி ரட்சிக்கப்படுவதற்காக சர்வோகத்தய பராபரனான கர்த்தர் அருளிச் செய்த சத்திய வேதம் முதலாம் பங்கு** என்ற தலைப்புடன் வெளியானது. நூலின் தலைப்பு இலத்தீன் மொழியிலும் அச்சாகியிருந்தது.

இரண்டாவது தொகுதி 1782-இல் தரங்கம்பாடியில் 320 பக்கங்களில் வெளியானது. மூன்றாவது தொகுதியும், நான்காவது தொகுதியும் அதே தரங்கம்பாடி அச்சகத்தில் முறையே 1791, 1796-ஆம் ஆண்டுகளில் அச்சாயின. முதல் தொகுதியைப் போன்றே, ஏனைய மூன்று தொகுதி களுக்கும் ஒரே தலைப்பு இடப்பட்டிருந்தது. மூன்றாவது தொகுதி 130 பக்கங்களையும் நான்காவது தொகுதி 287 பக்கங்களையும் கொண்டிருந்தன.

பெப்ரிஷியசின் மொழி குறித்தும் இலக்கணப் பிழைகள் குறித்தும் சில விமர்சனங்கள் வெளிவந்தன. ஆயினும் மூல மொழியை அவர் நன்றாகப் பின்பற்றி யுள்ளார் என்பதைப் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கல்கத்தா அருகிலுள்ள சிராம்பூரில் டேனிஷ் மறைத்தள அச்சகத்தில் புதிய ஏற்பாடு தமிழ் மொழி பெயர்ப்பு 1813-இல் அச்சானது. இதே அச்சகத்தில் கிறிஸ்டியான் டேவிட் என்பவர் மொழிபெயர்த்த 'சங்கீதங்கள்' 1818-இல் வெளியாகியுள்ளது. சென்னையில் பணியாற்றிய ஜோனான் பீட்டர்ராட்லர் என்பவரும் 'சங்கீதங்கள்' பகுதியை மொழி பெயர்த்தார். 1819-இல் சென்னையில் இது வெளியாகியுள்ளது.

* * *



புதுவையி லெழுந்தருளியிருக்கும் மகாகனம்
பொருந்திய ஆண்டவராகிய கிளெமேன்சுபொனு
ந் துரிசிப்பாரொன்னும் மேற்றிராணியாரவர்க
ள் தமது விசாரணைக்குட்பட்டிருக்கிற சகலகிறீஸ
துவர்களுக்கும் ஆசீர்வாதங்கொடுத் தறிவிக்கிற
தாவது:
விசுவாசப்பிரமாணிக்கமுள்ள அப்போஸ்தொ
லிக்குக்குருக்களிற் சிலரால் நாலுசுவிசேஷங்களு
ம் அப்போஸ்தலர்களுடைய நடபடிகளுந் தமிழ்
ப்பாஷையிற் சுமுத்திரையாய் மொழிபெயர்க்கப்
பட்டதென்று நிச்சயித்துக்கொண்டு இவற்றின்
மொழிபெயர்ப்பைஏற்றுக்கொண்டோம். இதனை
த்தக்கபத்தி விசுவாசத்தோடே வாசிப்பவர்கள் உ
லகவிரட்சகராகிய சேசுகிறீஸ்துநாதருடையதிவ்
வியபோதனைகளையுஞ்சுகிர்தமாதிரிகைகளையுங்கற்
றுக்கொண்டநுசரிப்பதினால் மிகுந்த ஞானப
லனை யடைவார்களென்றுநம்பி யிதனைநமதச்சு
க்கூடத்திற்பதிப்பித்து வெளிப்படுத்தவுத்தரவுத
ந்தோம்.
புதுவையில் ௲அ௱௰எம் ௵ மேமீ-௨௰௳

† CL. Ev. De Drusipare

V. A.

தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் ஆங்கிலக் காலனியம் நிலைபெற்ற பின்னர் ஆங்கில மொழியில் விவிலியத்தை மொழிபெயர்க்கும் பணி நடைபெற லாயிற்று. யாழ்ப்பாணத்தில் செயல்பட்ட மெதாடியஸ்ட் மறைத்தளத்தைச் சேர்ந்த பீட்டர் பெர்சிவல் என்ற ஆங்கிலேயக் குரு ஆங்கிலத்தில் இருந்து தமிழில் விவிலியத்தை மொழிபெயர்த்துள்ளார். இம்மொழி பெயர்ப்புப் பணியில் அழுத்தமான சமயவாதியான ஆறுமுக நாவலர் என்பவரை உதவியாளராக அமர்த்தி யிருந்தார்.

1840-இல் இம் மொழிபெயர்ப்புப் பணித் தொடங்கியது. மெதாடியஸ்ட் பிரிவு இப்பணியை மேற் கொண்டிருந்தாலும், ஆங்கிலிகன் திருச்சபையையும் இணைத்துக் கொண்டது. 1611இல் வெளியான அதிகாரப்பூர்வமான ஆங்கில மொழிபெயர்ப்பையே சொல்லுக்கு சொல் அப்படியே பின்பற்றவேண்டும் என்றும் மரபுச் சொற்களும், நிறுத்தற்குறியீடுகளும் கூட மாறாதிருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது.

1850-இல் அச்சான இம் மொழிபெயர்ப்பை, இங்கிலாந்து & வெளிநாட்டு விவிலியச் சங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை.

மூலநூலைப் பின்பற்றவில்லையென்றும் இந்தியத் தமிழ் நடையானது யாழ்ப்பாணத் தமிழ் நடையில் இருந்து வேறுபட்டது என்றும் அவ்வமைப்பு சுட்டிக் காட்டியது. அத்துடன் ஏராளமான வடமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளதையும் கூறியது.

### விவிலியக் கருவி நூல்கள்

விவிலிய மொழி பெயர்ப்பையொட்டி விவிலிய அகராதிகள் சிலவும் உருவாயின. விவிலிய மொழி பெயர்ப்பின்போது அவர்கள் உருவாக்கிப் பயன்படுத்திய விவிலியச் சொற்களை அடிப்படையாகக் கொண்டு அகராதிகளை உருவாக்கியுள்ளனர்.

பெஞ்சமின் சுவோட்ஸ் என்பவர் 1728-இல் தமிழ், தெலுங்கு மொழிகளுக்கான புதிய ஏற்பாடு அகராதியை உருவாக்கி உள்ளார். 1722-இல் வெளியான புதிய ஏற்பாடு தமிழ் நூலில் பயன்பட்ட சொற்களை தமிழர்கள் புரிந்துகொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்டது. ஜெர்மனியின் ஹாலே நகரில் உள்ள ஃபிராங்கே ஃபவுண்டேஷன் ஆவணக்காப்பகத்தில் இந்நூலின் படி ஒன்றுள்ளது.

இதே ஆசிரியர் 1728-இல் பழைய ஏற்பாட்டிற்கான அகராதி ஒன்றைத் தயாரித்து வெளியிட்டுள்ளார்.

பல நூல்களைத் தொகுத்து உருவாக்கப்பட்டதே விவிலியம். இவ்வாறு தொகுக்கும்போது சில பகுதிகளை நீக்கியுள்ளார்கள். இப்படி நீக்கியுள்ள பகுதி அப்போ கிரைபா எனப்பட்டது. இது சராசரிக் கிறித்தவர்களின் பயன்பாட்டிற்குரியதல்ல. கிறித்தவக் குரு மாணவர்கள் மற்றும் குருக்கள் பயன்பாட்டிற்குரியதாக மட்டுமே அப்போகிரைபா விளங்கி வருகிறது. ஆயினும் இதற்கும் அகராதி தயாரித்து 1728-இல் வெளியிட்டுள்ளார்கள். பிலிப்-டி-மெல்லா விவிலியத்தில் வரும் பொருள் விளங்காச் சொற்களை அகரவரிசைப்படுத்தி அகராதி போன்று தமது தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பில் அச்சிட்டிருந்தார். இது 1790-இல் வெளியானது.

தமிழ் விவிலியத்தில் பயன்படுத்தப்பட்ட கலைச் சொற்களின் உண்மையான பொருளை உணர்ந்து கொள்ளும் வகையில் **வேத அகராதி** என்ற பெயரில் அகராதி ஒன்றை 1841-இல் ஹென்றிபவர் வெளியிட்டார்.

இதுவரை அறியாத சமய, இறையியல் சொற்களின் அறிமுகம் விவிலிய மொழிபெயர்ப்பினால் தமிழ் மொழிக்குக் கிட்டியது. இச்சொற்களுக்குப் பொருத்த மான பொருளை அறிய மேற்கூறிய அகராதிகளின் உருவாக்கம் நிகழ்ந்துள்ளது.

### கத்தோலிக்கர்களின் விவிலிய மொழிபெயர்ப்பு

அய்ரோப்பாவில் உள்ள கத்தோலிக்கத் தேவாலயங் களில் வழிபாட்டின்போது விவிலியம் உரக்க வாசிக்கப்படும். போர்ச்சுக்கீசியர்களால் தமிழ்நாட்டில் அறிமுகமான கத்தோலிக்கத்திலும் இம்முறையே கடைப் பிடிக்கப்பட்டது. கிறித்தவ சகாப்தத்தின் தொடக்கத்தில் மக்களால் பேசப்பட்ட இலத்தீன் மொழியிலேயே விவிலியம் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. தமிழ்நாட்டிலும் போர்ச்சுக்கீசியர் இலத்தீன் விவிலியத்தையே பின் பற்றினர்.

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் அவர்கள் ஆதிக்கம் செலுத்தியபோது அவர்களால் கத்தோலிக்க ராக்கப்பட்ட மக்களுக்கு விவிலியத்தை அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாயம் அவர்களுக்கிருந்தது. தமிழ் மொழி மட்டுமே அறிந்திருந்த மக்களுக்கு விவிலியத்தில் இருந்து தேர்ந்தெடுத்த சில பகுதிகளை மட்டுமே லத்தின் விவிலியத்தில் இருந்து தழிழில் மொழி பெயர்த்துக் கற்றுக் கொடுத்தனர்.

இம்முயற்சியில் யேசுவின் சீடர்களில் ஒருவரான மத்தேயூ எழுதிய நற்செய்தி ஏட்டில் இடம்பெறும் ‘பரலோக மந்திரம்’ (மத்தேயூ: 9-13) எழுத்து மொழி பெயர்ப்பாக **‘கார்த்தியா’** என்ற தலைப்பில் 1554-இல் போர்ச்சுக்கல் நாட்டு லிஸ்பன் நகரில் அச்சானது. இதனையடுத்து சேசுசபைத் துறவியர் விவிலியத்தில் இருந்து தேர்ந்தெடுத்த பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்து பனை ஓலைச் சுவடிகளில் எழுதி, புதிய கத்தோலிக்கர்களிடம் சுற்றுக்கு விட்டனர். அண்ட்ரிக் அடிகளார் என்ற சேசுசபைத் துறவி புதிய ஏற்பாட்டில்

இருந்து சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து தமிழில் மொழிபெயர்த்து, அவர் அச்சிட்ட நூல்களில் இடம் பெறச் செய்தார். 1578-இல் அச்சிட்ட 'தம்பிரான் வணக்கம்' என்ற நூலின் இறுதியில் மத்தேயூ நற்செய்தி ஏட்டில் இடம்பெறும் யேசுவின் மலைப்பொழிவில் இருந்து சில பகுதிகள் இடம் பெற்றுள்ளன.

1586-இல் அண்ட்ரிக் அடிகளார் அச்சிட்ட அடியார் வரலாறு என்ற நூலில் புதிதாகக் கிறித்தவத்தைத் தழுவிய தமிழர்களுக்குப் பயன்படும் நோக்கில், யேசுவின் பிறப்பு தொடங்கி அவர் சிலுவையில் அறை யுண்டது வரையிலான நிகழ்வுகளை எழுதியுள்ளார். இப்பகுதிகள் புதிய ஏற்பாட்டைத் தழுவியே எழுதப் பட்டுள்ளன. போர்ச்சுக்கீசிய மொழிச் சொற்களை எழுத்துப் பெயர்ப்பாக இம் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியுள்ளார்.

இவரையடுத்து வந்த சேசுசபைத் துறவிகள் சிலரும் விவிலியத்தில் இருந்து தேர்வு செய்த சில பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். தத்துவ போதகர் என்றழைக்கப்படும் தே.நோபிலி 'நித்திய ஜீவன சல்லாபம்' என்ற தலைப்பில் விவிலியத்தின் சில பகுதிகளை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலில் போர்ச்சுக்கீஸ், லத்தீன், வடமொழிச்சொற்கள் இடம் பெற்றுள்ளதுடன், கத்தோலிக்க வழிபாடு கத்தோலிக்க இறையியல் என்பனவற்றை மையமாகக் கொண்ட புதிய கலைச்சொற்களையும் உருவாக்கிப் பயன்படுத்தியுள்ளார்.

இவரை அடுத்து, இம்மானுவேல் மார்டின் (1597-1656) என்ற சேசுசபைத் துறவி உரைநடை வடிவில் விவிலியச் செய்திகளைக் கற்பிக்கும் சல்லாபச் சுவடி களை (சல்லாபம் - உரையாடல்) தே. நொபிலியைப் பின்பற்றி எழுதியுள்ளார். 'பத்து சல்லாபம்', 'உபதேச சல்லாபம்', 'சிலுவையின் விசேஷ சல்லாபம்'. 'சத்திய லட்சண சல்லாபம்' என்ற சுவடிகளை, புதிய ஏற்பாட்டைத் தழுவி எழுதியுள்ளார். வினா-விடை வடிவில் எழுதப் பட்ட இச்சல்லாபச் சுவடிகள் விவிலியத்தை மையமாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளன. சான்றாக, மத்தேயூ நற்செய்தியில் (5:23-24) இடம்பெறும்,

> ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்போது உங்கள் சகோதரர், சகோதரியர் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினை வுற்றால் (23) அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் அவரிடம் நல் உறவு ஏற்படுத்திக் கொள். திரும்பிவந்து உன் காணிக்கையைச் செலுத்து (24)

என்ற விவிலியத் தொடர்கள் வினாவிடையாக மாற்றப் பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். 23-வது வசனம் வினாவடிவில் அமைக்கப்பட்டு 24-ஆவது வசனம் விடைவடிவில் இடம்பெற்றுள்ளது.

விவிலியம் என்பது குறித்த செய்திகள் தொடக்க காலத் தமிழ்க் கத்தோலிக்கர்களுக்கு சல்லாபச் சுவடிகள் வாயிலாகவே கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. சல்லாபச் சுவடி ஒன்றில் விவிலியம் என்றால் என்ன? என்ற வினாவும் விடையும் இடம் பெற்றுள்ளன.

மேலும் தேவாலயங்களில் ஞாயிறு வழிபாட்டின் போது விவிலியம் வாசிக்கப்பட்டுள்ளது. இது லத்தின் மொழியில் இருந்து மட்டுமே மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. பனை ஓலைச்சுவடியில் எழுதப்பட்ட விவிலியச் சுவடிகள் சல்லாபம் என்ற சொல்லை தலைப்பின் இறுதியில் கொண்டுள்ளன. கத்தோலிக்கர் களால் மொழிபெயர்க்கப்பட்டு கத்தோலிக்கர்களிடம் புழக்கத்தில் இருந்த விவிலிய மொழிபெயர்ப்புகளை, சீர்திருத்தக் கிறித்தவ மறைப்பணியாளர்கள் நன்கு அறிந்திருந்தனர். அவர்கள் அறிந்திருந்த சுவடிகள் வருமாறு:

1. பழைய ஏற்பாட்டின் வேதப் புத்தகங்கள் கோர்வைப்படுத்தி உத்தமமாய் விஸ்தரிக்கப் பட்டது.
2. மத்தேயூ சுவிஷேசம் : தெக்கத்தி பாஷை.
3. லூக்கா சுவிஷேசம்
4. யோவான் சுவிஷேசம்
5. அப்போஸ்தலர்களுடைய நடபடிக்கைகள்
6. திருநாட்களிலே வாசிக்கப்படுகிற சுவிஷேசங்கள்

1725இல் லத்தீன் மொழியில் இருந்து தமிழ் மொழி பெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாடு 'தேவ அருள் வேத புராணம்' என்ற தலைப்பைக் கொண்டிருந்தது. இதன் தொடக்கத்தில் 'சர்வேஸ்ரயா நம' என எழுதப் பட்டிருந்தது.


இவ்வாறு விவிலிய மொழிபெயர்ப்பில் கத்தோலிக் கர்கள் பங்காற்றியிருந்தாலும் அவர்களுக்குப் பின்னால் வந்த சீர்திருத்தக் கிறித்தவ மறைப்பணியாளர்கள் விவிலிய மொழிபெயர்ப்பில் மட்டுமின்றி அதை அச்சாக்கம் செய்வதிலும் வேகம் காட்டினர். இவர்கள் அச்சிட்ட விவிலிய நூல் கத்தோலிக்கர்களிடமும் அறிமுகமாயிற்று.

புதுச்சேரியில் செயல்பட்டு வந்த அந்நிய வேதபோதகச் சபையினர் இது குறித்துக் கவலை யுற்றனர். 1844 இல் புதுச்சேரியில் கூடிய மறை மாவட்ட மாமன்றம் (சினாடு) கத்தோலிக்கர்களின் பயன்பாட்டிற்காக விவிலிய மொழிபெயர்ப்பு நூலை அச்சிடுவது குறித்து விவாதித்தது. தரங்கம்பாடியில் அச்சான விவிலிய மொழிபெயர்ப்பு கத்தோலிக்கர்

களிடம் பரவுவதைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் தமிழ் விவிலியத்தை அச்சிட முடிவெடுத்தனர்.

இதை நிறைவேற்றும் நோக்கில் லூயிஸ் மாரே முசோர் (1808-1888) என்ற குருவை இப்பணியை மேற்கொள்ளும்படி புதுச்சேரி ஆயராக இருந்த கிளாமண்ட் பொன்னான்ட் கூறினார். இப்பணியில் இவருக்கு உதவ அருளா என்ற தமிழ்க் குருவை நியமித்தார். இரு குருக்களும் இணைந்து இப்பணியைத் தொடங்கினர்.

இவ்விருவரது முயற்சியால் நான்கு நற்செய்தி ஏடுகளும் அப்போஸ்தலர் நடவடிக்கைகளும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ் அறிந்திருந்த லூயிஸ் சவேனியன் துபயிஸ் என்ற பிரெஞ்சு நாட்டுக் குரு புதுச்சேரியில் இயங்கிவந்த கத்தோலிக்க அச்சகத்தின் மேலாளராக இருந்தார். இம்மொழிபெயர்ப்பைச் சரிபார்க்கும் பணியை அவர் மேற்கொண்டார். பின்னர் 1859இல் புதிய ஏற்பாட்டின் அச்சுப்படி புதுச்சேரியில் இருந்து வெளியானது.


இத்திருச்சுவிசேஷங்களைத்

தமிழில் மொழிபெயர்த்தவர்களால்

முகவுரை.

சுவிசேஷமென்பது சுபசெய்தி அல்லது நல்லசமாச்சாரமென்றர்த்தமாம். மனிதனுயவதரித்த சுதனுகியசர்வேசுரன் தாம்வாய்மலர்ந்து மனுமக்களுக்குப் பிரசங்கித்த அருள்வேதத்துக்குக் கட்டளையிட்டருளிய சிறந்தபெயரிதுவே. ஆதலாலித்திவ்வியநாதர் பிறந்தாச்சரியத்துக்குரிய வகையுஞ்செய்துகாட்டியவுத்தமபுண்ணியமாதிரிகைகளும் பண்ணின அதிசயத்துக்குரிய வற்புதங்களும் போதித்தவேதகற்பனை யுபதேசங்களும் மனிதருண்டாய் விரக்ஷணியத்துக்கண்டைந்த கடின நிர்ப்பந்தமரணமு மறுபடியுயிர்த்தெழுந்தருளிய நிகரற்றவல்லபமகிமையு மனுக்குலமீடேறவதற்கு விசுவசித்தநுசரிக்க வேண்டியசத்தியசுகிர்த ஒழுக்கமு மிவைமுதலியவிசேஷங்களும் அருள்வேதப்பொருளா யடங்கியவேதாகமங்களுக்கும் இத்திருப்பெயரேயுண்டாயிற்று.

இஸ்பிரீத்துசாந்துவினற் படிப்பித்து நடத்தப்படுகிற திருச்சபையானது அப்போஸ்தலர்களின்கையால் நான்குசுவிசேஷங்களைப் பற்றிக்கொண்டு பாரம்பரியமாயவைகளை யிந்நாள்வரைக்குங் காப்பாற்றிக்கொண்டுவருகின்றது. அவைகள் ஒரேசுவிசேஷப்பொருளடங்கிய நாலுபிரிவுகள் போலேயாம். பரமகர்த்தாவுக்குச் சித்தமானால் அவைகளிலடங்கிய வர்த்தமானமெல்லாம் ஒரு

மொத்தம் மூவாயிரம் படிகள் அச்சிடப்பட்டன. நூலின் தலைப்பில் இவ்வாறு அச்சிடப்பட்டு இருந்தது:

> சேசு கிறிஸ்து நாதருடைய பரிசுத்த சுவிஷேசம்: இது அந்நிய தேசத்து போதகர் சபையிலுள்ள அப்போஸ்தலிக்கு குருக்களில் சிலரால் மொழி பெயர்க்கப்பட்டு புதுவையில் எழுந்தருளியிருக்கும் மகாகணம் பொருந்திய ஆண்டவராகிய கிளமென்சு பொன்னான்ட் துருசிபேர் என்னும் நாமத்தைக் கொண்டிருக்கிற மேற்றிராணியார் - ஆயர் அனுமதியில் ரோமாபுரியினின்று வந்த உத்தரத்தின் படி 1857-ஆம் வருஷம் புதுவையிற் சென்மராக்கினி மாதா கோயிலைச் சேர்ந்த அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

இந்நூலின் முன்னுரையில் உயரிய இலக்கியத் தமிழ் நடையில் அன்றி பொதுத் தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. விவிலிய வசனங்களுக்கு தமிழ் எண்களே இடப் பட்டிருந்தன. ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலும் அவ்வியலின் சுருக்கம் அய்ந்து அல்லது ஆறு வரிகளில் கொடுக்கப்பட்டிருந்தது. யேசுவின் திருமுழுக்கு, இறுதி விருந்து, கல்வாரிமலைக்கு யேசு சிலுவை சுமந்து செல்லல், சிலுவையில் அவரது மரணம் எனப் படங்கள் சில அச்சிடப்பட்டிருந்தன.

### விவிலிய மொழிபெயர்ப்பின் பயன்

ஐரோப்பாவில் இருந்து இங்கு பரவிய சமயம் கிறித்தவம். அவர்களது சமய நூலான விவிலியத்தை, தமிழில் மொழிபெயர்த்து புதிய கிறித்தவர்களுக்கு வழங்கியதென்பது அவர்களது சமயப் பணி சார்ந்தது தான். ஆயினும், விவிலியத்தைத் தமிழாக்கம் செய்து அச்சிட்ட அவர்களது செயல்பாடு தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க பணியாக அமைந்துள்ளது. ஏனெனில் கவிதை, செய்யுள், இலக்கண. இலக்கிய உரைகள் என்பனவற்றின் பயன்பாடே தமிழ் இலக்கிய உலகில் மிகுந்திருந்தது. இத்தகைய அறிவுச் சூழலில் தமிழ் உரைநடை வளர்ச்சியில், விவிலிய மொழி பெயர்ப்பு ஓரளவுக்கேனும் உதவியுள்ளது. கி.பி.16 வது நூற்றாண்டில் மத்தேயூ நற்செய்தியில் இடம் பெற்றுள்ள பரலோக மந்திரம் மொழிபெயர்ப்பில் தொடங்கி, விவிலிய மொழிபெயர்ப்பு, தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்துள்ளன.

அறிவியல் வளர்ச்சி பெற்ற இன்றைய சூழலிலும் கூட நம்மை ஆண்ட காலனியவாதிகளான ஆங்கிலேயரின் ஆங்கில மொழியில் இருந்தே மொழிபெயர்ப்புகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். ஆனால் விவிலியம் ஹீப்ரு, கிரேக்கம், லத்தீன், போர்ச்சுக்கீஸ் எனப் பல்வேறு

மொழிகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இம்மொழிபெயர்ப்புகள் ஒரே காலத்தில் நிகழவில்லை. ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் பல்வேறு காலங்களில் நிகழ்ந்துள்ளன. திரும்பத் திரும்ப இம்மொழி பெயர்ப்புகள் நிகழ்ந்தமைக்கு மொழிபெயர்ப்பால் நிறைவடையாமையே காரணமாகும்.

ஒவ்வொரு விவிலிய மொழிபெயர்ப்பும் அவை மொழிபெயர்க்கப்பட்ட காலத்தின் சமூக வரலாற்றுச் சூழலைப் பிரதிபலிப்பதாக நூலாசிரியர் குறிப்பிடுவது (பக்கம் 107) முற்றிலும் பொருத்தமான கணிப்பாகும்.

புதிய ஏற்பாட்டில் உள்ள மத்தேயூ நற்செய்தி ஏட்டில் (6 : 9 - 13) காணப்படும் பரலோக மந்திரமானது ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதை நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். அதிலிருந்து முதல் மூன்று வரிகளின் மொழிபெயர்ப்பை மட்டும் காண்போம்.

பிதா எங்களுடே நீ ஆகாசத்தில் இருக்கிறாய்
உன் திருநாமம் புண்ணியம் ஆகவேணும்
உன் ராஜ்ஜியம் வரவேணும் (கி.பி.1554)

* * *

வானங்களில் இருக்கிற எங்கள் பிதாவே
உம்முடைய நாமம் எல்லார்க்கும் சுத்தமாக
உம்முடைய வீராச்சியம் வர (1578)

* * *

வானங்களில் இருக்கிற எங்கள் பிதாவே
உன்னுடைய நாமம் எல்லாத்துக்கும் சுத்தமாக
உன்னுடைய ராச்சியம் வர (1644)

* * *

வானங்களில் இருக்கிற எங்கள் பிதாவே
உன்னுடைய நாமம் எல்லாத்துக்குஞ் சுத்தமாக
உன்னுடைய இராச்சியம் வர ( 1692)

* * *

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே
உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
உம்முடைய ராச்சியம் வர (1714)


இவ்வாறு பரலோக மந்திரம் மட்டுமின்றி விவிலியமும் ஒவ்வொரு மொழிபெயர்ப்பிலும் மாற்றங் களை அடைந்து வந்துள்ளது. தமிழில் மொழிபெயர்ப்புக் கலை வளர இம்மாற்றங்கள் துணைபுரிந்துள்ளன.

மேலும் அவர்கள் அச்சிட்ட தமிழ் விவிலியமானது சமய எல்லையைக் கடந்து கிறித்தவர் அல்லாதவரிடமும் சென்று, வாசிப்புப் பழக்கத்தைப் பரவலாக்கியது. பெருமாள் நாயக்கர் என்ற பாளையக்காரர் 1742 டிசம்பரில் பொறையாரில் இருந்த மிசினறிகளின் பள்ளிக்குச் சென்று, அவர்கள் அச்சிட்ட நூல்களைத் தமக்கும் தமது நண்பர்களுக்கும் இரவல் வாங்கிச் சென்றுள்ளார். விவிலிய அச்சாக்கம் பாடநூல்கள் அச்சாக்கமாக விரிவடைந்தது. இதனால் நவீன அறிவுச் சிந்தனை நம்மிடையே வேர்விடத் தொடங்கியது. ●



33வது தேசிய புத்தகத் திருவிழாவையொட்டி
என்.பி.டி, மற்றும் என்.சி.பி.எச். சார்பில் ஈரோட்டில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியை
ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.சிவக்குமார் அவர்கள் திறந்து வைத்தார்.
மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன்,
என்.சி.பி.எச். மண்டல மேலாளர் அ. கணேசன், கோவை கிளை மேலாளர் ஆர். ரங்கராஜன்,
ஈரோடு கிளை மேலாளர் சி.முத்துகிருஷ்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# ஜனவரி வெளியீடு




தமிழில் : யூமா வாசுகி


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை - 600 098.

☎ : 044 - 26251968, 26258410, 26241288


www.ncbhpublisher.in | email: info@ncbh.in



# நியூ செஞ்சுரியின் ஜனவரி வெளியீடு

## வெ.இறையன்புவின் ஒன்பது நூல்கள்

1. திருவிழாக்கள்
2. மருந்து
3. பொறுமை
4. மழை
5. ஆணவம்
6. ஆர்வம்
7. ஆன்மீகம்
8. இரயில் பிரயாணம்
9. விவாதம்



# பௌத்தமும் பெரியாரும்

அ.மார்க்ஸ்

பேரா. முத்துமோகனின் ‘பௌத்தமும் பெரியாரியமும்’

பௌத்தம் உலகின் ஆதி மதங்களில் ஒன்று. தவிரவும் அது கிறிஸ்தவம், இஸ்லாம் முதலான செமிடிக் மதம்போல பரவுதற்குரிய மதம். அதாவது இந்து மதம் சொல்வதுபோல ஒருவன் இந்துவாக இருக்க வேண்டு மானால், அவன் இந்துவாக ஒரு குறிப்பிட்ட வருணத்தில் பிறக்க வேண்டும். அப்படிப் பிறக்காத ஒருவன் இந்துவாக முடியாது. இதனால் பவுத்தம் இந்து மதம் போலல்லாமல் அது பிற நாடுகளிலும் வேகமாகப் பரவியது.

இன்னொரு பக்கம் செமிடிக் மதங்களிலிருந்து பவுத்தம் ஒரு அம்சத்தில் விலகி இருந்தது. கிறிஸ்தவம், இஸ்லாம் முதலானவை தம்மை மூடிக் கொண்ட (exclusive) மதங்கள். பிற மதக் கூறுகளிலிருந்து இறுக்க மாகத் தம்மை வேறுபடுத்திக் கொள்பவை. பிறவற்றைத் தமக்குள் அனுமதிக்காதவை. ஆனால் இந்திய மதங்களோ

பிற மதக் கூறுகளை ஏற்றுக்கொள்பவை (inclusive). இறுக்கமான அருளப்பட்ட ஒற்றை வேதங்கள் இல்லாதவை. இப்படிப் பிறவற்றையும் உள்ளடக்கும் அம்சத்தில் பவுத்தம் இந்திய மதங்களின் பண்புகளைக் கொண்டிருந்தது. இதனால் வரலாற்றுப் போக்கில் அது பரவிய இடங்களில் உள்ள பிற மதக் கூறுகளையும் ஒரு குறிப்பிட அளவிற்கு உள்வாங்கிக் கொண்டது. இலங்கையில் உள்ள பவுத்த ஆலயங்களில் முருகன், விநாயகர், லக்ஷ்மி முதலான கடவுளருக்கும் ஒரு இடமிருப்பது இப்படித்தான்.

பவுத்தத்தைப் புரிந்து கொள்ள இன்னொரு அம்சத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பவுத்தம் தோன்றிய காலத்திலிருந்து (கி.மு 5-6 ம் நூ) அடுத்த ஆயிரம் ஆண்டில், அதாவது மகாவம்சம், மணிமேகலை முதலானவை தோன்றிய காலத்தில் மிகப் பெரிய மாற்றங்களுக்கு உள்ளாகியது. பல உட்பிரிவுகளும் அதில் உருவாயின். தமிழகத்திலேயே அறுவகைத் தேரர்கள் இருந்ததாகத் தமிழ் நூல்களில் காணலாம். ஆன்மா என ஒன்று கிடையாது, எல்லாம் மரிக் கொண்டுள்ளது, எல்லாம் சார்புத் தன்மை உடையவை, (இறை) பக்தியின் அடிப்படையில் 'அறத்தை' (சீலம்) முன்வைத்தல் என்பதான பவுத்த அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து இந்தப் புதிய மாற்றங்கள் பெரிதும் பிறழாமல் இருக்க முயற்சித்த போதும், நடைமுறையில் அது ஒரு 'மதமாக' கால வெள்ளத்தில் பயணிக்க நேர்ந்தபோதும் அது ஒரு வகையில் கடவுள் என்கிற கருத்தாக்கத்தையும் கூட ஏற்றுக் கொள்ள நேர்ந்தது.

இந்தப் பின்னணியில்தான் பெரியார், வாழ்ந்திருந்த 20ம் நூற்றாண்டில் பவுத்தத்தை அவர் எவ்வாறு அணுகினார் என்பது முக்கியமானது. பவுத்தத்தைப் பெரியார் அதன் ஆதி வடிவில், புத்தரது ஆதி அணுகல் முறைகளைக் கடக்காமல் அணுகினார் என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

இதை மிகச் சரியாகப் புரிந்து கொண்டு அறிமுகம் செய்துள்ளது நண்பர் பேரா. ந.முத்துமோகன் அவர்கள் மட்டுமே. முத்துமோகன் ஒரு பொதுவுடமைக் கட்சிக் குடும்பத்தில் பிறந்தவர். அவரது தந்தை முழு நேர கட்சி ஊழியராக இருந்தவர். சோவியத் ரஷ்யாவில் இந்தியத் தத்துவங்களில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர் முத்துமோகன். மதுரைப் பல்கலைக் கழகத்தில் சீக்கியவியல் இருக்கையில் நீண்ட காலம் தலைவராக இருந்தவர். இந்தியத் தத்துவங்கள் குறித்துத் தொடர்ந்து நிறைய எழுதிவருபவர். தற்போது ஓய்வுக்குப் பின்னும் பஞ்சாபில் சீக்கிய ஆய்வுத் துறையில் பணியாற்றி வருபவர். பேரா. நா.வானமாமலையின் மாணவர் குழாமில் ஒருவர். பலருக்கும் இந்த அறிமுகம் தேவை என்பதால் இவற்றைச் சொல்ல வேண்டியதாயிற்று.




**'இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்' என்பது அவரது சமீபத்திய (2016) நூல் (NCBH வெளியீடு, 472 பக். 370 ரூ).** அதிலுள்ள ஒரு சிறிய கட்டுரைதான் 'பௌத்தமும் பெரியாரியமும்'. புத்தர் கடவுள் மற்றும் ஆன்மா ஆகியவற்றின் இருப்பை ஏற்காதவர். வைதீகம், அதுசார்ந்த வேள்வி முதலான சடங்குகள், வருண வேறுபாடுகள் ஆகியவற்றை மறுத்தவர். கடவுள் மறுப்பு என்கிற வகையில் உலகாயுதக் கோட்பாட்டிற்கு நெருக்கமாக வருபவர் (சார்வாகமல்ல). ஆன்மா மற்றும் பிரும்மம் முதலானவற்றை ஏற்காதவர். எல்லாவற்றிற்கும் மேலாக "நிர்வாணம்" என்கிற கருத்தாக்கத்தை முன்மொழிந்தவர்.

தமிழ்ச் சூழலில் பெரியார், சொல்லப் போனால் பெரியார் மட்டுமே இந்த அம்சங்களில் முழுமையாகப் புத்தரை ஏற்றவர். புத்தரின் மேற்குறித்த கருத்தாக்கங்களுடன் 'பகுத்தறிவு' என்பதையும் பெரியார் சேர்த்துக் கொண்டார் என்கிறார் முத்துமோகன். எனினும் முன் குறிப்பிட்ட ஆன்மா மற்றும் பிரும்மத்தை மறுப்பது, நிர்வாணம் என்கிற கருத்தாக்கத்தை ஏற்பது ஆகியனவே பகுத்தறிவின் அடிப்படை. எனவே பெரியார் இதைக் கூடுதலாகத் தரித்துக் கொண்டார் எனக் கருதத் தேவையில்லை.

இனி பெரியாரை இந்தப் பின்னணியில் இருந்து புரிந்து கொள்ள முயல்வோம்.

### அறிந்ததனின்றும் விடுதலை - அதுவே நிர்வாணம்

பெரியார் தனது தத்துவ நிலைபாட்டை "மெட்டீரியலிசம்" எனவும் "பிரகிருதிவாதம்" எனவும் கூறிக் கொள்வார். கடவுள், ஆன்மா, மறு பிறப்பு, மோட்சம்,

ஆகிய அனைத்து நம்பிக்கைகளையும் மறுப்பார். வைதீக வேள்விகள், புரோகிதம், சடங்காசாரம் ஆகியவற்றை மறுத்த பண்டைய உலகாயதர்களுக்கு நெருக்கமாக உள்ள பெரியார் இவற்றோடு கூடுதலாக இன்றைய நவீன ஐரோப்பிய பகுத்தறிவு வாதத்தையும் இணைத்துக் கொள்வார். "ஐரோப்பிய விஞ்ஞானமுறை", "சயன்ஸ்" முதலான சொற்களை அடிக்கடிப் பயன்படுத்துவது தவிர, டெஸ்ட் டியூப் பேபி உட்பட நவீன விஞ்ஞான முறை களை அவர் விதந்து அறிமுகப்படுத்துவதும் உண்டு.

"சிந்திக்கும் தன்மை", தயவுதாட்சண்யமின்றி (எதையும்) கேள்வி கேட்பது, "சொந்த அறிவும் அனுபவமும்", "அறிவும் ஆராய்ச்சியும்", "காரண காரியங்களைக் கண்டறிதல்", "பிரத்தியட்ச அனுபவம்", "விஞ்ஞான ஆராய்ச்சி", "தர்க்க விவாதம்", "ஆதாரங் களைக் கொண்டு அறிதல்", "அறிவும் நியாயமும்" - முதலானவை பெரியார் ஆங்காங்கு தன் அறிதல் முறையைக் குறிப்பிடும் சொற்கள். நம்பிக்கைகளைச் சாராமல் அறிவு பூர்வமான தர்க்கத்தின் அடிப்படையில் எதையும் ஏற்க வேண்டும் என்பது அவர் கருத்து.

பவுத்த தர்க்கம் என்பது புத்தருக்குப் பின் மிக வளர்ந்த ஒரு துறை. ஷெர்பாட்ஸ்கி இரு பெருந் தொகுப்புகளாக அவற்றைத் தந்துள்ளார். பெரியார் அந்த அளவிற்கெல்லாம் போனவரில்லை. அவர் புத்தரைப் போலத் தத்துவத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்கு முதன்மை அளித்தவர்.

ஆம். தன் முக்கிய சீடர்களில் ஒருவரான மொகல்லானரிடம் புத்தர் இதை, அதாவது வெறும் தத்துவ விசாரங்களில் தனக்கு ஆர்வமில்லை என வெளிப்படையாகச் சொன்ன வரலாற்றை எனது 'புத்தமும் தம்மமும்' நூலில் நீங்கள் காணலாம்.

பெரியாரைப் பொறுத்தமட்டில் அவரே கூறுவதைப் போல, "சொந்த அறிவு, அனுபவம்", "பிரத்தியட்ச அனுபவம்" ஆகியவற்றை மட்டுமே அவர் நம்பிக்கைகளுக்குப் பதிலாகப் பிரதியிடுகிறார். அவரைப் பொறுத்த வரையில் நான் ஓரிடத்தில் சொல்லி யுள்ளதைப் போல "நம்பிக்கைகள் எல்லாமே மூட நம்பிக்கைகள்" தான். அறிவு, அனுபவம், பிரத்தியட்சம் ஆகியன மட்டுமே ஆதாரங்கள்.

ஆனால் பல நூற்றாண்டுச் சிந்தனைகள், கருத்துக்கள், முடிவுகள், நம்பிக்கைகள் முதலியன நம் அறிவையும், சிந்தனைகளையும் சூழ்ந்துள்ளன. தினந் தோறும் இப்படியான நம்பிக்கைகள், படிக்கும் நூல்கள், அனுபவங்கள், பார்க்கும் திரைப்படங்கள், பத்திரிகைகள் ஆகிய ஒவ்வொன்றின் ஊடாகவும் உறுதிப்படுத்தப் படுகின்றன. இவை சுய சிந்தனைக்கும், "பிரத்தியட்ச அனுபவங்களை" பெறுவதற்கும் தடையாக உள்ளன. உங்களை மூடிக் கிடக்கும் இந்தத் திரைகளை நீக்கி "நிர்வாணம்" அடைதலே நீங்கள் உண்மைகளை அறிய ஒரே வழி.

நம்மைச் சுற்றி அறிஞர்களின் சிந்தனைகளாகவும், மத போதனைகளாகவும், வேத நூல்களாகவும் நின்று நம் சுய சிந்தனையை மறைக்கும் திரு உருக்களை (icons / idols), 16-17ம் நூற்றாண்டு ஐரோப்பிய மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள் உடைத்து நொறுக்கிக் கடக்குமாறு கூறியதைப் போலவே இங்கு பெரியாரும் செய்தார். சமயம், இலக்கியம், வரலாறு எல்லாவற்றாலும் நம் அறிவுக் கண்ணை மூடிக் கிடக்கும் உலகின் தோற்றம், மனிதனின் படைப்பு முதலான அனைத்து நம்பிக்கை களையும் புனைவுகளையும் உடைத்தெறிந்தார். இந்த அனைத்திலிருந்தும் விடுபட்டு "நிர்வாணம்" அடைதலே நீங்கள் அறிவையும் விடுதலையையும் அடைய ஒரே வழி என்றார்.

ஒரு வகையில் அறிவுதான் விடுதலை. அறிவை அடைவது என்பது ஏற்கனவே அறிந்தவற்றிலிருந்து விடுதலை அடைவதுதான். அதுதான் "நிர்வாணம்" அடைதல்.

பெரியார், புத்தர் இருவரும் இத்தகைய விடுதலைக்குப் பயன்படுத்தும் சொல்தான் "நிர்வாணம்". புத்தர் பாலிமொழியில் அதை 'நிப்பானம்' என்பார். பெரியார் நம் தமிழில் நிர்வாணம் என்பார். அவ்வளவே.

கல்வி குறித்துப் பேச வரும்போது ஒருவனை அவனுக்கு ஏற்கனவே இந்தச் சமூகத்தால் ஊட்டப்பட்ட அனைத்திலிருந்தும் விடுவித்து அவனை நிர்வாண மாக்குவதே சரியான கல்வி எனப் பெரியார் கூறுவதை நான் 'பாரதி புத்தகாலயம்' வெளியிட்டுள்ள பெரியாரின் கல்வி குறித்த சிந்தனைகள் தொகுப்பின் முன்னுரையில் ஜென் கதை ஒன்றின் துணையுடன் விளக்கியிருப்பதைக் காண வேண்டுகிறேன்.

"நான் நிர்வாணமாகச் சொல்லுகிறேன். அதாவது மறைவில்லாமல், அப்படியே மனதில் பட்டதை, பச்சையாகப் பார்த்தால் எப்படித் தோன்றுகிறதோ அப்படியே உள்ளது உள்ளபடியே கூறுவதுதான் 'நிர்வாணமான' என்பதன் அர்த்தம். நிர்வாணம் என்பது நம் உள்ளத்தில் தோன்றிய உண்மையான காரணங்களை எடுத்துக் கூறும் நிலைஸ்தானமாகும். புத்த நெறியினர் கூட நிர்வாணா ஸ்தானம் என்பார்கள்."

- என்கிற பெரியாரின் இந்த மேற்கோளைச் சுட்டிக் காட்டி (பெரியார் சிந்தனைகள், ஆனைமுத்து தொகுப்பு 2, பக். 1072) ஜான் லாக்கின் ஐரோப்பியச் சிந்தனையுடனும் புத்தரின் "இருப்பதை இருக்கும் படியே" எனக் கூறும் (ததாகதா) எனும் சிந்தனையுடனும் ஒப்பிடுவார் முத்துமோகன்.

## புத்தரின் ஆன்ம மறுப்புக் கோட்பாட்டின் அரசியலும் பெரியாரும்

ஏதொன்றையும் எதிர்கொள்ளும்போது 'நிர்வாண மாக' அணுகுவது என்பதன் பொருள் என்ன? எதையும் நம்முடைய நம்பிக்கை, முடிவுகள், கொள்கைகள் ஆகியவற்றின் நோக்கிலிருந்து அணுகாமல், விருப்பு வெறுப்புகளின்றி உள்ளதை உள்ளபடியே அணுகுவது தான் அது. இதில் நான் "கொள்கைகள்" என்பதையும் சேர்த்திருப்பது உங்களுக்கு வியப்பு அளிக்கலாம். சிலருக்கு வெறுப்பையும் அளிக்கலாம். இதையும் நீங்கள் விருப்பு வெறுப்பின்றி நோக்கினால், பல நேரங்களில் நாம் சுமந்திருக்கும் இறுக்கமான கொள்கைகளே நாம் சரியான முடிவுகளை அடையத் தடையாக இருப்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

நிர்வாணம் என்கிற கருத்தாக்கம் சிரமண மதங்களில் முக்கியத்துவம் பெறுவது கவனத்துக்குரியது. சமணத்தின் இரு முக்கிய பிரிவுகளில் ஒன்றான திகம்பர சமணத்தை ஏற்ற முனிவர்கள் கருத்தளவில் மட்டுமின்றி நடைமுறையிலும் ஆடைகளின்றி நிர்வாணமாக வாழ்வதை அறிவோம், அவர்கள் 'திக்கு'களையே (திசை களையே) 'அம்பரம்' ஆக (ஆடைகளாக) அணிந்தவர்கள். இங்கொரு சுவாரசியமான விடயம் கருதத்தக்கது. பெரியார் சோவியத் ரஷ்யா, ஜெர்மனி, இலங்கை முதலான நாடுகளுக்குச் சென்றபோது ஜெர்மனியில் இருந்த நிர்வாண சங்கத்திற்குச் சென்று அவர்களோடு ஆடைகளின்றி எடுத்துக் கொண்ட புகைப்படம் ஒன்று உண்டு. பெரியாரின் அயல்நாட்டுப் பயணங்கள் குறித்த ஆனைமுத்து அவர்களின் நூலில் அந்தப் படத்தைக் காணலாம்.

முந்துமோகன் பவுத்தம் முன்வைக்கும் 'நிர்வாணம்' எனும் கோட்பாட்டையும் 'அனாத்மன்' எனும் கோட் பாட்டையும் இணைக்கிறார். வைதீக அணுகல்முறை 'ஆத்மன்' (ஆத்மா) என்பதற்கு முதன்மை அளிப்பதை அறிவோம். பெரியார் குறிப்பிடுவதுபோல வைதீகத்தைப் பொருத்தமட்டில் ஆன்மா என்பது ஒரு "நித்திய வஸ்து" ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் இந்த வஸ்து அவர்கள் அழியும்போது, அதாவது அவர்கள் இறக்கும் போதும் அது அழியாது. தீ உடலைத்தான் எரித்துச் சாம்பலாக்குமே ஒழிய ஆன்மாவைத் தீண்டாது; தீண்ட முடியாது. அது மீண்டும் மீண்டும் பிறக்கும் தன்மையது, ஒரு பிறவியில் அவரவர் செய்த நன்மை தீமைகளுக்கு ஏற்ப அவர்களது ஆன்மா அடுத்த பிறப்பை எடுக்கும் என்பது வைதீகத்தின் அடிப்படை.

புத்தர் இந்த வைதீகக் கோட்பாட்டை மிக நுணுக்கமாக மறுத்தார். அவர் "ஆத்மன்" என்னும் இடத்தில் "அனாத்மன்", அதாவது "ஆன்மா இல்லாதது" என்னும் கருத்தாக்கத்தை முன்வைத்தார். இது குறித்து நான் மிக விரிவாக எனது 'புத்தம் சரணம்' நூலில் எழுதி யுள்ளேன். வைதீகத்தில் யாக்ஞவல்கியருக்கும் மைத்ரே யிக்கும் நடக்கும் ஒரு உரையாடலையும், பவுத்தத்தில் பசனேதி மன்னனுக்கும் (ப்ரசேனஜித்) அவன் மனைவி மல்லிகாவுக்கும் நடக்கும் உரையாடலையும் பொருத்தி அதை விளக்க முயன்றிருப்பேன். மேலும் விளக்கம் காண விரும்புவோர் அதனைக் காண்க.

முத்துமோகன் வைதீகத்தில் 'ஆன்மா' என்கிற கருத்தாக்கம் உருவாவதை புராதனப் பொதுமைச் சமூகம் அழிந்து ஏற்றத்தாழ்வுகள், படிநிலை அதிகாரங்கள் நிறைந்த ஒரு உடைமைச் சமூக உருவாக்கத்துடன் இணைக்கிறார். இனக்குழுப் பொதுவுடைமை அழியும் போது தான், தன் குடும்பம், தன் குடி எனும் தன் முனைப்பு உருவாவதை ஏற்றுத்தான் வைதீகம் பொது மைக்கு எதிராக சுயத்தை மேன்மைப் படுத்தித் தத்து வார்த்த தளத்தில் 'ஆன்மா' என்பதை முன்வைத்தது என்கிறார் முத்துமோகன். புத்தர் இனக்குழு மரபிலிருந்து வந்தவர். அம்மரபின் பொதுமையை முன்வைத்து இயங்கியவர். எனவே அவர் வைதீகம் முன்வைத்த இந்த 'ஆன்மா' எனும் கருத்தாக்கத்தை முற்றாக மறுக்கிறார்.

புத்தரின் நிர்வாணம் என்கிற கோட்பாட்டைப் பெரியார் முழுமையாக ஏற்றுக் கொண்டதைப் போலவே, புத்தரின் இந்த 'ஆன்மா மறுப்பு' கோட் பாட்டையும் முழுமையாக ஏற்கிறார்.

"ஆன்மா என்பது ஒரு பொருளல்ல. அது சுதந்திரம், அறிவு, உணர்ச்சி ஆகியவைகளை உடையதல்ல என்பதோடு, அது பெரிதும் அர்த்தமற்ற ஒரு வார்த்தை என்றே நமக்குக் காணப்படுகிறது. இப்போது பழக்கத்தில் ஆத்மா என்றால் அது சரீரத்திற்குள் இருக்கும் ஒரு நித்திய வஸ்து என்றும், அதற்குப் பிறப்பு, இறப்பு இல்லை என்றும், அது சரீரத்தில் இருக்கும்போது செய்த காரியங்களுக்காக அதன் பயனை சரீரத்தை விட்டுப் பிரிந்த பின்பு கடவுள் மூலம் அனுபவிக்கிறது என்றும் பல மதங்களில் பலவிதமாய்ச் சொல்லப் பட்டிருக்கின்றதாய் அறிகிறோம்..."- எனச் சொல்லும் பெரியார், இதைத் தற்காலச் சூழலில் இயங்கும் அனைத்து முக்கிய மதங்களுடனும் ஒப்பிடுகிறார். சொர்க்கம், நரகம், இறப்புக்குப் பின் அவரவர் பாவங்களுக்கு ஏற்ப நியாயத் தீர்ப்பு அளிக்கப்படுதல் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளும் இஸ்லாம், கிறிஸ்தவம் முதலான மதங்களிலிருந்தும் பவுத்தம் தனித்து நிற்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

"பவுத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், இந்து ஆகிய மதங்களில் பவுத்தம் தவிர மற்ற முக்கியமான மூன்று மதங்களும் ஏறக்குறைய ஒரே கொள்கையில்தான் ஆத்மாவையும், ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் பற்றிய விஷயங்களையும் வைத்துக்

கொண்டிருக்கின்றன. (ஆனால்) பவுத்தர்கள், 'ஆன்மா என்பதே கிடையாது. நித்திய வஸ்து என்பதே கிடையாது' என்பதாக முடிவுகட்டி விட்டார்கள்" (ஆனைமுத்து தொகுப்பு பக் 1066- 68). - என்பது பெரியார் கூற்று.

சொர்க்கம், நரகம் என்பன போன்ற கருத்தாக்கங்களின் மூலம் ஒரு உடைமைச் சமூகம் 'எஜமானத் துரோகம்', 'இராஜத் துரோகம்' போன்ற பல்வேறு துரோகங்களைக் கற்பித்து அப்படியானவற்றிற்கு இறப்பிற்குப் பின் நரகமே விதியாகும் எனச் சொல்கிறது. இப்படிச் சொல்வதின் ஊடாக மக்கள் "தங்களின் நியாயமான உரிமைகளைப் பெறவேண்டும் என்கிற எண்ணம் உதிக்காமலே ஏமாற்றிவிடுவதற்குத் தக்க பேராயுதமாய் நரகம் விளங்கி வருகிறது" (பக். 1069) என்பது பெரியாரின் கூற்று.

இப்படிச் சொல்வதனூடாக பெரியார் இரண்டு விடயங்களை இங்கே சுட்டிக் காட்டுகிறார். 1. எல்லா மதங்களும் மக்களின் உரிமை வேட்கைக்குத் தடையாகவே அமைகின்றன. 2. புத்தர் மதங்களுக்கான இந்தப் பொது அம்சத்திலிருந்து விலகி நிற்பதன் மூலம் அவரது நோக்கம் இப்படியான இன்னொரு மதத்தை உருவாக்குவது அல்ல. புத்தருக்குப் பின் அவரும் ஒரு கடவுளாக்கப்பட்டு அவரது பாதையும் ஒரு மதமாக்கப் பட்டதும் வேறு கதைகள்.

இங்கே நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பெரியாரின் நோக்கம் புத்தர் அல்லது புத்த மதம் குறித்து ஆய்வு செய்வதோ, இல்லை கி.மு 6ம் நூற்றாண்டில் கங்கைச் சமவெளியில் நடந்த வைதீக X அவைதீக விவாதங்களைப் பற்றிக் கட்டுரை எழுதுவதோ அல்ல. தத்துவ விசாரமல்ல அவரது நோக்கம். அதற்குரிய sophisticated tools என்பனவெல்லாம் அவருக்கு ஒரு பொருட்டும் அல்ல. அதையும் அவரே சொல்லி விடுகிறார். 'ஆத்மா' என்கிற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதத் தொடங்கும்போது அவர் சொல்வது இது:

"ஆத்மா என்ற விஷயத்தைப் பற்றி எழுதப் பட்டிருப்பதைப் பார்க்கும் நமது நண்பர்கள் பலர் 'இது தத்துவ விசாரம். இதைப் பற்றிப் பேசவோ எழுதவோ வேண்டிய அவசியம் சமுதாய சீர்திருத்தக்காரருக்கு எதற்கு' என்று கூசாமல் பேசுவார்கள்... சமுதாய சீர்திருத்தம் என்றால் ஏதோ அங்கும் இங்கும் ஆடிப் போன, சுவண்டு போன, இடிந்து போன பாகங்களைச் சுரண்டி, கூறு குத்தி, மண்ணைக் குழைத்துச் சந்து பொந்துகளை அடைத்துப் பூசி மெழுகுவது என்றுதான் அனேகர் கருதி இருக்கிறார்கள். நம்மைப் பொருத்த மட்டில் நாம் அந்த மாதிரித் துறையில் உழைக்கும் சமுதாயச் சீர்திருத்தக்காரனல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறோம். (நாம் உண்மையில் சமுதாயத்தை) அடியோடு பெயர்த்து அஸ்திவாரத் தையே புதுப்பிப்பது என்கின்றதான பணியை மேற் கொண்டுள்ளோம்" (பக்.1065)

என்கிற பெரியாரின் சுய பிரகடனம் அவரது நோக்கத்தை வெளிப்படுத்தும்.

**கடவுள் மற்றும் பக்தியின் இடத்தில் அறம்**

புத்தரின் வழி நின்று பெரியார் மிகவும் நுண்மையாக வைதீகம் முன்வைத்த 'ஆன்மா' எனும் கருத்தாக்கத்தை அவருக்கே உரித்தான எளிமையுடன் மறுப்பதை முத்துமோகன் சுட்டிக் காட்டுகிறார். "சமயவாதிகள் ஏற்படுத்தியுள்ள முதல் பித்தலாட்டம் ஆன்மா என்பது. இது இல்லாவிட்டால் மற்ற பித்தலாட்டங்களுக்கெல்லாம் இடமேயில்லை" (முன் குறிப்பிட்ட நூல், பக்.1074) எனக்கூறும் பெரியார் தொடர்ந்து, "ஆத்மா என்பது ஒன்று. அதற்கு எஜமான் என்று ஒரு கடவுள் இல்லை என்றுதான் (புத்தரும் சொல்லியிருக்கிறார்)" என்கிறார் (பக்.1075). உடைமைச் சமூகத்தில் சொத்துக்களை ஆளும் எஜமான் அவனிடம் அடிமையாக இருக்கும் இதரர் என்பதுதான் வைதீகத்தில் பிரும்மம் - ஆத்மா என்கிற உறவாக வெளிப்படுவது எனப் பெரியார் அணுகுவதற்கு ஒரு சான்றாக இதை முத்துமோகன் சுட்டிக்காட்டிச் செல்கிறார்.

புத்தரது அறவுரைகளில் ஆத்மா இன்மை (அனாத்மன்) கோட்பாடு போலவே நான்கு பேருண்மைகள் மற்றும் "தோற்றங்களின் சார்புத்தன்மை" ஆகியனவும் மிகவும் முக்கியமானவை. புத்தர் தன் அறவுரைகளில் இவற்றை அடிக்கடி வற்புறுத்துவார்.

நான்கு பேருண்மைகள் என்பவற்றை இப்படிச் சுருக்கமாகச் சொல்லலாம். இன்றைய வாழ்க்கை முறையில் நமது இருப்பின் நிபந்தனையாக 'துக்கம்' உள்ளது என்கிறது பௌத்தம். துக்கம் என்பது எவ்வாறு ஏற்படுகிறது? ஏதோ ஒன்றை நாம் இழந்துள்ளதாக, குறையாக உணர்வதால் துக்கம் ஏற்படுகிறது. ஆக துக்கம் என்பது வேறொன்றுமில்லை. திருப்தியின்மை தான் துக்கம். திருப்தியின்மை எவ்வாறு உருவாகிறது? ஆசைதான் திருப்தியின்மையின் அடிப்படையாக உள்ளது. ஆனால் பௌத்தம் அத்தோடு நிறுத்திக் கொள்வதில்லை. இதுவே வாழ்வின் விதியல்ல என அது நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. இது துறக்கக்கூடியதுதான் என்கிறது. ஆக துறவு என்பது துறவிகளுக்கு மட்டும் உரியதல்ல. ஆக 'துறவு' என்பதற்கு இங்கே புதிய பொருள் அளிக்கப்படுகிறது உலக வாழ்வின் துக்கத் திற்கும், திருப்தியின்மைக்கும் காரணமான ஆசைகளைத் துறப்பதுதான் துறவு. இது எப்படிச் சாத்தியம்? அற அடிப்படையிலான வாழ்வை நாம் அமைத்துக் கொள்வதன் மூலம் நாம் அதைச் சாத்தியமாக்க

வேண்டும். அதற்கெனவே பஞ்சசீலம், தச சீலம், எண்வழிப்பாதை முதலான சீலங்களை முன்வைக்கிறது பௌத்தம்.

ஆக அறவாழ்வையே துக்கங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழி என பவுத்தம் உரைக்கிறது. இறைவன், பக்தி எனும் இரண்டும் பௌத்தத்தில் அர்த்த மற்றுப் போகும் விந்தை இப்படித்தான் நிகழ்கிறது. பெரியாரை பவுத்தம் ஈர்த்ததை நாம் இப்படித்தான் புரிந்துகொள்ள முடிகிறது. பெரியாரின் வாழ்வையும் அரசியலையும் கூர்ந்து நோக்கினால் அப்படியாகத் தான் வகுத்துக் கொண்ட அறங்களை அவர் தொடர்ந்து பிடிவாதமாகப் பின்பற்றியதைப் புரிந்து கொள்ள இயலும். ஒரு எடுத்துக்காட்டு. போராட்டங்களுக்காகக் கைது செய்யப்பட்ட அத்தனை முறையும் தன் மீது அரசு சாட்டிய குற்றங்களைத் தான் எதிர்த்து வழக்காடியதே இல்லை என்பதை அவர் பதிவு செய்துள்ளார். தேசியக் கொடியை எரிக்கும் போராட்டமானாலும் சரி, அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் போராட்டமானாலும் சரி, தான் அறிவிக்கும் போராட்டங்களில் யார் கலந்து கொள்வர் என்பதை முன்கூட்டியே அறிவிப்பது குறித்த விமர்சனம் ஒன்று அவர்மீது வைக்கப்பட்டபோது தனது போராட்ட அறமாக அவர் இதைக் குறிப்பிடுகிறார். சின்ன வயதில் தன் மீது பொய்க் கையெழுத்து இட்டதாக ஒரு 'போர்ஜரி' வழக்குத் தொடரப்பட்ட போது வழக்குரைஞர்கள் அறிவுரைத்தபடி அந்த வழக்கி லிருந்து தப்புவதற்காக ஒரு சிறிய பொய்யைச் சொல்ல முடியாது என மறுத்துச் சிறை ஏகத் தான் தயார் செய்து கொண்ட வரலாற்றை அவர் சொல்வது சுவையான ஒன்று. சிறு வயது முதலே இப்படியான அறங்களைத் தான் கடைபிடித்து வருவதாக அவர் அந்தக் கட்டுரையில் குறிப்பிடுவது இங்கே நினைவுகூரத் தக்கது (பார்க்க: என் 'பெரியார்?' எனும் நூல்).

### பவுத்தத்தின் வேத உபநிடத மறுப்பும் பெரியாரும்

இறுதியாக 'பிரதித்ய சமுத்பாதம்' என சமஸ் கிருதத்திலும் 'பட்டிசமுத்பாத' எனப் பாலியிலும் கூறப்படுகிற பௌத்தத்தின் இன்னொரு முக்கிய கோட்பாடான "தோற்றங்களின் சார்புத்தன்மை" (dependent origination) என்பதைப் பெரியார் எவ்வாறு கையாள்கிறார் எனப் பார்க்கலாம். தனக்கே உரிய முறையில் எளிமையாகவும் அதே நேரத்தில் அடிப்படை சிதையாமலும் பெரியார் அதை, விளக்குவதைப் பார்ப்போம்.

உருவாகிய ஒன்றாயினும், உருவாகிக் கொண்டுள்ள ஒன்றாயினும் எதற்கும் சாராம்சமான பண்பு கிடையாது என்பதுதான் பவுத்தத்தின் இந்தக் கோட்பாட்டின் அடிப்படை. அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்தே உள்ளன, எதுவும் சுயமாக உருவானதும் அல்ல; சுயமாக இயங்கிக் கொண்டிருப்பதும் அல்ல. மொத்தத்தில் சுயம் (self) என்றே ஒன்று கிடையாது. எதையும் சார்ந்திராத ஆத்மா என ஒன்று இருப்பதாக வைதீகம் சொல்வதை பௌத்தம் இந்த அடிப்படையிலிருந்துதான் முற்றாக மறுக்கிறது. இதைச் சற்று விளக்கமாகப் பார்க்கலாம்.

தோன்றுகிற ஒவ்வொன்றும் மற்றதைச் சார்ந்தே இருக்கிறது என்றும் எதுவும் தானாகத் தோன்றுவது இல்லை என்றும் பௌத்தம் சொல்கிறது என்றோம். ஒரு செடி முளைக்கிறது என்றால் அது தானாக முளைப்பதில்லை. அது மண்ணையும், தண்ணீரையும், சூரிய ஒளியையும் சார்ந்தே உயிர்க்கிறது. புத்தர் ஒரு தேரைச் சுட்டிக் காட்டி இதில் எது தேர் என்பார். நீங்கள் அதனுடைய சக்கரங்கள் அல்லது அச்சு அல்லது குதிரைகளைப் பூட்டும் நுகத்தடி என அந்தத் தேரில் ஏதொன்றையாவது தொட்டுத்தான் அதை அடையாளப் படுத்த வேண்டும். ஆனால் அவ்வாறு நீங்கள் தொட்டுக் காட்டும் ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பெயர்கள் உண்டு. பின் எதுதான் தேர்?

இதன் பொருள் எதுவும் சுயமாக இல்லை, தனித்த இருப்பு எதற்கும் சாத்தியமல்ல என்பது மட்டுமல்ல, அப்படி இருக்கவும் முடியாது என்பதுதான். பின் ஆன்மா என்பது மட்டும் எப்படிச் சாத்தியம்? தான், தன்னிலை என்பதற்கெல்லாம் பொருள் என்ன? தொழிலாளி இல்லாமல் முதலாளி ஏது? அடிமைகள் இன்றி ஆண்டான் ஏது? மாணவர் இன்றி ஆசிரியர் ஏது? உயிர்கள் இன்றிக் கடவுள் ஏது? பிள்ளைகள் இன்றிப் பெற்றோர் ஏது? பெற்றோர் இன்றிப் பிள்ளைகள் ஏது?

வைதீக நூல்களில் ஒன்றான பிருஹதாரண்ய உபநிடதம் ஆத்மனை 'சத்' என்கிறது. அதாவது நிலையானது. நிரந்தரமானது. உருப்பெற்றிருப்பது, பூரணமானது; குறைகளற்றது எனப் பொருளாகிறது. உருப்பெற்றிருப்பது எனச் சொல்லும்போது அது உருவாகிக் கொண்டிருப்பதல்ல என்றாகிறது. நிரந்தரமானது எனச்சொல்லும்போது அது அழிவற்றது என்றாகிறது. குறைகளற்றது என்கிற போது அது துக்கமும் அற்றது என்றாகிறது. ஏனெனில் குறைகளே துக்கத்திற்குக் காரணங்களாகின்றன.

ஆனால் பவுத்தம் முற்றிலும் இதற்கு நேர் எதிர்மாறான ஒரு பார்வையை முன்வைக்கிறது, எதுவும் நிரந்தரமானதில்லை; எல்லாமே மரிக் கொண்டே இருக்கிறது என்கிறது. எதுவும். ஓடிக் கொண்டிருக்கும் ஆற்று நீர் என்பது பவுத்தத்தின் ஒரு புகழ்மிக்க எடுத்துக்காட்டு. எல்லாமே ஓடிக் கொண்டிருப்பதுதான். இந்தக் கணத்தில் பார்க்கும் நீர் சென்ற கணத்தில் பார்த்ததும் அல்ல; அடுத்த கணத்தில் பார்க்கப் போவதும் அல்ல.

புத்தம் மூன்று எதிர்மறைகளை முன்வைக்கிறது. அவை:

1. அநிச்ச - அநித்தியம் -வாழ்வு நித்தியமற்றது; மரிக் கொண்டிருப்பது.
2. துக்க - துக்கம்- வாழ்வு குறைகள் மிக்கது, நிறைவற்றது
3. அனத்த - அனாத்மம் - வாழ்வு ஆத்மா அற்றது.

இவ்வாறு உயிர் = பிரபஞ்சம் = சாரம் என (1=1=1) என்பதாக உபநிடதங்கள் ஒரு சமன்பாட்டை முன்வைத்த போது புத்தரோ,

உயிர் = பிரபஞ்சம் = சார்பின்மை என (0=0=0) என்பதாக ஒரு எதிர்மறையை / மறுப்பை / இன்மையை முன்வைத்தார்.

இது அன்றைய உலகில் ஒரு பெரும் புரட்சி. சுமார் 500 ஆண்டுகளுக்குப் பின் வந்த நாகார்ஜுனர் இந்த இன்மையைத்தான் ‘சூன்ய வாதம்’ என்கிற கோட்பாடாக முன்வைத்தார்.

பெரியாரிடமும் ஒரு வகையில் இந்த சூன்யவாத மனப்பாங்கு ஆங்காங்கு தெறிப்பாக வெளிப்படுவதைக் காணலாம். அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் நமது பண்பாட்டை, வரலாற்றை, மொழியை, இலக்கியங்களை எல்லாவற்றையும் முற்றாக மறுதலித்ததை (எ.கா தமிழ் காட்டுமிராண்டி மொழி) நாம் இந்த நோக்கிலிருந்துதான் விளங்கிக் கொள்ள முடிகிறது.

இனி பெரியாரை அவரது சொற்களில் சந்திப்போம்.

“உலகத்தில் பெயரும் உருவமும் உள்ள பொருட்கள் எல்லாம் ஒருவித சேர்க்கையால் - அதாவது பல கூட்டுப் பொருட்களால் சேர்ந்து இருக்கும் வடிவத்தையே பெரிதும் உணர்த்துவதாகும்... ஒரு லாந்தர் என்பது எது எனத் தொட்டுக்காட்டச் சொன்னால் லாந்தர் என்பதில் அவன் தொட்டுக் காட்டிய பாகம் ஒரு சிம்னியையோ, கண்ணாடியையோ, தகட்டையோ, கம்பியையோ, ஆணியையோதான் தொட்டுக் காட்டப்பட்டதாய் இருக்கும். அதுபோலவே ஒரு மேசையைத் தொட்டுக் காட்டச் சொன்னால் தொட்டுக் காட்டிய பாகம் ஒரு பலகையையோ அல்லது காலையோ, ஆணியையோ, குமிழையோ, கைப்பிடியையோதான் தொட்டுக் காட்டியதாய்க் காணப்படும். அவன் லாந்தர் என்பதாகக் காட்டியது (ஏதோ ஒரு) கம்பி என்பதானாலும், கம்பி என்பதாக ஒன்றைத் தொட்டுக் காட்டியதாக இல்லாமல் இரும்பைத் தொட்டுக் காட்டியதாகத்தான் காணப்படும், இரும்பு என்பதன்போது ஏதோ ஒருவகையான மண்ணின் (அதாவது துகள்களின்) சேர்க்கையைக் காட்டியதாகத்தான் காணப்படும். ஆகவே லாந்தர், மேசை, கடிகாரம், புத்தகம் என்றதும் ஒருவகை வடிவத்தில் காணப்படும் ஒரு தோற்றத்தின் பெயரே தவிர ஒரு வஸ்துவின் பெயரல்ல என்பதும் இதனால் உணரத் தக்கதாகும். ஜீவன்கள் என்று சொல்லப்படும் உயிர்ப் பிராணிகள் எல்லாம் கூட உருவத்தில் தோற்றத்தில் வேறு வேறு வகையாய்ப் பெயராய்ச் சொல்லப்பட்டாலும் அவற்றின் மூலப் பொருட்கள் ஒன்றேயாகும். ஒரு மனித உருவத்தைக் காட்டி அவனை மற்ற ஒரு மனிதனைத் தொட்டுக் காட்டச் சொன்னால் அவன் ஒரு மனிதனின் சரீரம் என்பதில் ஏதாவது ஒரு அவையவத்தைத்தான் தொட்டுக் காட்டுவான். அந்த அவயவத்திற்கு ஏற்கனவே பெயர் கை, கால், வயிறு, மார்பு, முதுகு, தோள் என்பவை முதலாகிய ஏதாவது ஒரு பெயருடைய அவயவமாகத்தான் இருக்க முடியும்.” (பக். 1996 -97).

புத்தரை முழுமையாகப் பின்பற்றி பெரியார் இந்த வாதத்தை முன்வைப்பதை உணர்கிறோம்.

இறுதியாக,

பெரியார் தனது “பகுத்தறிவு” எனும் அடிப்படை அணுகல்முறையையும் கூட புத்தரிடமிருந்தே எடுத்துள்ளார். புத்தரின் மரணத் தறுவாயில் அவரது சீடர் ஆனந்தர் அவரிடம் இறுதி அறிவுரை கேட்ட போது, “ஆனந்தா! உனக்கான தீவை நீயே உருவாக்கிக் கொண்டு வாழ்ந்துகொள். உனக்கு நீயே விளக்கு” எனச் சொல்லிப் பிரிந்தார் என்பது வரலாறு. ஒவ்வொரு வருக்கும் அவரவர் அறிவே விளக்காக இருக்க முடியும். அவரவர் காலத்துக்கும் சூழலுக்கும் தகப் பகுத்தறிந்து அவரவர்களே முடிவு எடுக்க வேண்டும் என்பதே புத்தரின் கருத்தாக இருந்தது. தான் அருளிய தம்ம உரைகளைக் கூட அவர் தன் சீடர்களும் மற்றவர்களும் கண்மூடிக் கடைபிடிக்க வேண்டிய 'மறை' என்றோ ‘வேதம்’ என்றோ கூறவில்லை. அவை அவர்கள் சிந்திப்பதற்கான ஒரு கருவி என்று மட்டுமே சொல்லிச் சென்றார்.

பெரியார் சொல்வார்:

“2500 வருடங்களாக புத்தர் கூறினாரே, ‘யார் எதைக் கூறினார்கள் என்பதற்காக எதையும் நம்பாதே! சிந்தித்துப் பார்! பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்! உன் புத்தி என்ன சொல்கிறதோ அதன்படி நட!’ என்றார். புத்திப்படி நட என்பதால்தான் அவருக்குப் புத்தர் என்று பெர் வந்தது” (பக்.1075) எனப் பெரியார் கூறுவது குறிப்பிடத் தக்கது. “20ம் நூற்றாண்டின் புத்தர்கள் கருஞ்சட்டைக்காரர்களே” என்றும் பெரியார் ஓரிடத்தில் முத்தாய்ப்பாய்ச் சொல்லி வைப்பார் (பக்.1121).

### பின்னுரை

முத்துமோகனில் தொடங்கினோம். தனது கட்டுரையில் அவர் இறுதியாக,

> "பெரியாருக்கு பௌத்தம் என்பது ஒரு மதமல்ல. அன்று அறியப்பட்டிருந்த பௌத்தத்தின் எல்லாக் கோட்பாடுகளையும் பெரியார் அப்படியே எடுத்துக் கொண்டார் என்பதும் இல்லை. பௌத்தம் என்பது அவருக்கு ஒரு அறிவு மரபு, ஆராய்ச்சி மரபு, விமர்சன மரபு, எதிர்ப்பு மரபு, ஒரு கலக மரபு. பழைய பவுத்தத்தை ஒரு பொற்காலச் சிந்தனை என்று சிலாகித்து அதனை மீட்டுருவாக்கும் முயற்சியில் அவர் ஈடுபடவில்லை"

என்கிறார். இது உண்மையே. பெரியாரைப் பொருத்தமட்டில் அவர் மதத்தை ஏற்காதவர் என்பதை அனைவரும் அறிவோம். நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில் புத்தரும் மதம் எனத் தன் வழியை அழைத்துக் கொண்டவர் அல்ல என்பதுதான். அவர் உரைத்தது தம்மம். தம்மம் மட்டுமே. அறம் உரைத்த அண்ணல் அவர். தன்னை அவதார மாகவோ, இல்லை இறைத்தூதராகவோ கூட அவர் முன்னிறுத்திக் கொண்டவர் அல்லர். அவர் "ததாகதர்'. இவ்வழியே வந்தவர். இப்படியே சென்றவர். அவ்வளவே. அவர் சொல்லிச் சென்றது அறவாழ்வு என்பது மட்டுமே.

புத்தருக்குப் பின் பௌத்தம் மிகப் பெரிய மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் கண்டது. தம்மம் மதமாகியது. புத்தர் கடவுளாக்கப்பட்டார். குறைந்த பட்சம் ஆறுக்கும் மேற்பட்ட கிளைகள் அதில் உருவாயின. உலகம் வியக்கும் அளவிற்கு அளவை நூற்களும் தத்துவங்களும், மணிமேகலை போன்ற மகா காவியங்களும் உருவாயின. பெரியாரைப் பொருத்த மட்டில் அவர் புத்தரோடு நிறுத்திக் கொண்டார். புத்தரின் வைதீக மற்றும் உபநிடதத் தத்துவ மறுப்புகள், வேள்வி மற்றும் வருண எதிர்ப்புகள் ஆகியவற்றிலேயே பெரியார் மனம் லயித்தார்.

பெரியார் இவற்றை எல்லாம் சிந்தித்த, எழுதிய பிரச்சாரம் செய்த காலங்களில் இந்திய அளவிலும் தமிழ்ச் சூழலிலும் ஒரு பௌத்த மறுமலர்ச்சி விகசித்துக் கொண் டிருந்தது. கர்னல் ஆல்காட், மேடம் பிளாவட்ஸ்கி ஆகியோரின் 'தியாசஃபிகல்' முயற்சிகள், அநகாரிக தர்மபாலாவின் முயற்சியால் புத்தகயா மீட்கப்பட்டது, சென்னையில் மகாபோதி கழகம் உருவானது, அயோத்தி தாசரின் சாக்கிய புத்த கழகம், சிங்காரவேலரின் முயற்சிகள், அண்ணல் அம்பேத்கருக்கே பவுத்தத்தில் நாட்டம் ஏற்படக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான பவுத்த அறிஞர் லட்சுமி நரசு ஆகியோரின் செயற்பாடுகள் ஆகியன இதில் முக்கிய பங்கு வகித்தன. இவர்களில் சிங்காரவேலர், பெரியார் தவிர இதரர் அனைவருக்கும் பௌத்த மதத்தை மீட்டுருவாக்குதல் என்கிற நோக்கமே முதன்மையாக இருந்தது.

பௌத்தத்தைப் பொருத்த மட்டில் நாம் ஒன்றை மறந்துவிடக் கூடாது. முன்பே குறிப்பிட்டதுபோல புத்தருக்குப் பிந்திய ஆயிரம் ஆண்டுகளில் பெரிய அளவில் பவுத்த தர்க்கம், தத்துவம் முதலியன வளர்ந்தன. பௌத்தம் ஆசிய நாடுகள் பலவற்றிலும் பரவியது. புத்தர் கடவுளாக்கப்பட்டார். தம்மம் மதமாகியது. இந்நிலையில் அறிவையும் அறவாழ்வையும் முதன்மைப் படுத்தி எழுந்த தம்ம வழியில் அதற்கு ஒவ்வாத பல நம்பிக்கைகள், கருத்துகள், சடங்குகள் எல்லாம் இணைந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகியவற்றில் இந்தியத் துணைக் கண்டத்தில் உருவான பவுத்த எழுச்சியில் புத்தருக்குப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின் புகுந்த இந்த எல்லா நம்பிக்கைகளும் பெரிய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவற்றில் பல புத்தரின் ஆதி பவுத்தத்தின் அடிப்படைகளுக்கு எதிரானவை என்றாலும் கூட.

எனினும் இதே காலகட்டத்தில் (19 ம் நூற்றாண்டின் பிற்பகுதி, 20ம் நூற்றாண்டின் முற் பகுதி) பவுத்தம் குறித்த மிக ஆழமான ஆய்வு, அளவை மற்றும் வரலாற்று நூல்களும் வெளிவந்தன. இவர்களில் பலர் மேலை நாட்டினர். அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நூல் இந்த வரிசையில் மிகவும் முக்கியமான ஒன்று. இந்திய எழுத்துக்கள் என்கிற வகையில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இன்னொரு நூல் அறிஞர் லட்சுமி நரசுவின் The Essence of Buddhism.

இந்தப் பின்னணியில்தான் நாம் பெரியாரின் இடையீட்டைக் காண வேண்டும். பவுத்தத்தை ஒரு மதமாகவும் வழிபாடாகவும் அணுகாத வகையில் இவர்கள் எல்லோரிடமிருந்தும் பெரியார் தனித்து நின்றார்.

பவுத்தத்தின் அடிப்படைகளைச் சரியான கோணத்தில் மேலும் அறிய விழைவோர் பெரியாரின் இந்த எழுத்துக்களோடு அண்ணல் அம்பேத்கரின் புத்தமும் தம்மமும், அறிஞர் லட்சுமி நரசுவின் மேற் குறிப்பிட்ட நூல் ஆகியவற்றைப் பயிலலாம். லட்சுமி நரசுவின் நூலை பவுத்தச் சிந்தனைகளைத் தற்போது தமிழகத்தில் பரப்பி வரும் பெரியவர் வணக்கத்துக்குரிய அறிஞர் ஓ.ர.ந.கிருஷ்ணன் அவர்கள் தமிழில் பெயர்த்து அவர்களின் மெத்தா பதிப்பக வெளியீடாக வெளி யிட்டுள்ளார். ●

## மார்க்ஸ் - எங்கெல்ஸ் 200வது பிறந்தநாள்களையும்
## சோவியத் புரட்சியின் நூற்றாண்டு விழாவையும்
## கொண்டாடும் முகமாக



**முன் வெளியீட்டுத் திட்டம்**

# மார்க்ஸ்-எங்கெல்ஸ்
## தேர்வுநூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்
## 20 தொகுதிகளாக...

தமிழ் மார்க்சிய மெய்யியலாளர் **ந.முத்துமோகன்** அவர்களின் பதிப்பாசிரிய மேற்பார்வையில்

- **ரா.கிருஷ்ணையா, ஆர்.கே. கண்ணன், எஸ்.வி.ராஜதுரை** முதலான தலைசிறந்த மார்க்சிய அறிஞர்களின் மொழிபெயர்ப்பில்
- மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் (12 தொகுதிகள்), அரசியல் பொருளாதார விமர்சனத்துக்குப் பங்களிப்பு, டூரிங்குக்கு மறுப்பு, இயற்கையின் இயக்கவியல் முதலான
- தமிழில் இதுவரை வெளிவந்துள்ள மார்க்ஸ்-எங்கெல்ஸ் நூல்கள், கட்டுரைகள், சொற்பொழிவுகள், கடிதங்கள் ஆகிய அனைத்தையும் காலவரிசைப்படுத்தி
- சோவியத் அறிஞர்கள் குழு எழுதிய ஆசான்களின் வாழ்க்கை வரலாறுகளையும் சேர்த்து
- மொழிபெயர்ப்புகளை மேம்படுத்தி, கலைச்சொற்களைச் சீர்மை செய்து.
- ஒவ்வொரு தொகுதிக்கும் ந.முத்துமோகனின் விரிவான அறிமுகவுரையுடன் வெளிவருகிறது.

**1/8 டெமி அளவில் சுமார் 7600 பக்கங்களுக்குமேல் அழகிய வடிவமைப்பில், தரமான தாளில்**

**விலை ₹ ~~5000/-~~ முன்வெளியீட்டுத் திட்டத்தில் ₹ 2500/- மட்டுமே**

**வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க**

**ஜனவரி 31, 2018 வரை மட்டுமே முன்பதிவு செய்யப்படும்**

NCBH

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

# மார்க்ஸ் - எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் நியூ செஞ்சுரி வெளியீடாக...

**படிப்பதற்கும் கையாளவும் எளிதான 1/8 டெமி அளவில்...**
**காலவரிசையில் தொகுக்கப்பட்டுள்ள மார்க்ஸ் - எங்கெல்ஸ் எழுத்துகள் 20 தொகுதிகளாக...**
**ந.முத்துமோகன் பதிப்பாசிரிய மேற்பார்வையில் வெளியிடப்படவுள்ள**

## 20 தொகுதிகளின் விவரங்கள்

**தொகுதி 1**
*1841* முதல் *1852* வரையான
மார்க்ஸ் எங்கெல்ஸ் எழுத்துகள்

**தொகுதி 2**
மெய்யறிவின் வறுமை (மா) [1847]

**தொகுதி 3**
பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள் (மா) [1850]
ஜெர்மனில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் (எ) [1851]
பதினெட்டாம் புரூமோர் (மா) [1852]

**தொகுதி 4**
அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு
ஒரு பங்களிப்பு (மா) [1857]

**தொகுதி 5**
நியூயார்க் ட்ப்யூரின் கட்டுரைகள் (1853-62)

**தொகுதி 6**
*1864* முதல் *1874* வரையான
மார்க்ஸ் எங்கெல்ஸ் எழுத்துகள்

**தொகுதி 7**
பிரான்சில் உள்நாட்டுப் போர் நூல்,
அதன் முதலாம் இரண்டாம் உருவரைகள்,
கட்டுரைகள், சொற்பொழிவுகள் [1871]

**தொகுதி 8**
கார்ல் மார்க்ஸின் மூலதனம் முதல் தொகுதிக்கான
எங்கெல்சின் மதிப்புரைகள், சேர்க்கைகள்
மற்றும் பொழிப்பு
மூலதனம் நூலில் இந்தியாவைப் பற்றிய
குறிப்புகள் (தொகுப்பு)

**தொகுதி 9**
குடியிருப்பு பிரச்சினை (எ) [1872]
கோதா வேலைத் திட்டம் பற்றிய விமர்சனம் (மா)
[1875]
கார்ல் மார்க்ஸ் (எ ) [1877]
கார்ல் மார்க்சின் உடலைப் புதைக்கின்றபோது
நிகழ்த்திய உரை (எ) [1883]

**தொகுதி 10**
டூரிங்குக்கு மறுப்பு (எ ) [1878]

**தொகுதி 11**
கற்பனாவாத சோசலிசமும்
விஞ்ஞான சோசலிசமும் (எ) [1880]
கூலிமுறை [லேபர் ஸ்டேண்டர்ட் இதழில்
எங்கெல்ஸ் எழுதிய தலையங்கங்கள் - 1881]
மார்க்சும் Neue Rheinische Zeitung இதழும்
(1848-49) (எ) [1884]
கம்யூனிஸ்ட் சங்கத்தின் வரலாறு குறித்து (எ) [1885]

**தொகுதி 12**
குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின்
தோற்றம் (எ) [1886]

**தொகுதி 13**
இயற்கையின் இயக்கவியல் (எ) (1873-86)

**தொகுதி 14**
லூத்விக் பாயர்பாக்கும் செவ்வியல் ஜெர்மன்
தத்துவத்தின் முடிவும் (எ) [1886]
கிறித்தவம் எங்கெல்ஸின் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
[1882-1894]

**தொகுதி 15**
வரலாற்றில் வன்முறையின் பாத்திரம் (எ) [1888]
சமூக-ஜனநாயக வேலைத்திட்ட நகலைப் பற்றிய
விமர்சனம் (எ) [1891]
எதிர்கால இத்தாலியப் புரட்சியும் சோசலிஸ்ட்
கட்சியும்(எ) [1894]
பிரான்சிலும் ஜெர்மனியிலும் உழவர் பிரச்சினை(எ)
[1894]

**தொகுதி 16**
இந்திய வரலாறு பற்றிய கார்ல் மார்க்ஸின்
குறிப்புப் புத்தகம்

**தொகுதி 17**
எங்கெல்சின் இளமைக்காலக் கடிதங்கள் [1838-1845]
மார்க்ஸ் - எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்துகள்
[1846-1895]

**தொகுதி 18, 19**
கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

**தொகுதி 20**
எங்கெல்ஸ் வாழ்க்கை வரலாறு



# பசுமண் கலத்துப் பெய்த நீர்

ஆ. கார்த்திகேயன்

மட்பாண்டங்களின் பயன்பாடு மிகவும் குறைந்துவிட்டதால் குடம், தோண்டி, சட்டி, பானை ஆகிய தமிழ்ச் சொற்களும் அருகிய வழக்காகி வருகின்றன. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் எல்லாருடைய வீடுகளிலும் இப்பாத்திரங்களும், சொற்களும் பயன்பாட்டில் இருந்தன. உணவைச் சமைப்பதற்கும், நீரைச் சேமிப்பதற்கும் இப்பாண்டங்கள் பயன்பட்டன. பொங்கல் பண்டிகை காலங்களில் பெரிய பானைகளில் பொங்கலிடுவது வழக்கம். பெரிய பானைகளில் சமைப்பதால்தான் 'பெரும் பொங்கல்' என்று பெயர் வந்திருக்கலாம். பொங்கல் முடிந்த பிறகு அப்பானைகளை வீட்டில் பாதுகாப்பார்கள். அப்பானைகளில் தானியங்களைச் சேமித்து வைப்பார்கள். விதை நெல், மணிலா போன்றவற்றையும் சாணம் கலந்து எதிர்காலப் பயன்பாட்டிற்கு வைப்பார்கள். பெரும்பானைகள் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அந்த அறைக்குப் பேரே 'பழங்கலத்து அறை' என்று சொல்லுவார்கள். மட்கலங்களுக்கு நீண்ட வரலாறு உண்டு. அவற்றைக் குறித்த ஏராளமான சான்றுகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

மண் ஒன்றுதான், அதுவே பல பாத்திரங் களாகச் செய்யப்படுகின்றது என்று திருமூலர் கூறுவார். ‘ஒன்றுதான் பல நற்கலம் ஆயிடும்’ என்பது அவரது பாடல் வரி. குயவன் தனது சக்கரத்தில் வைத்த மண்ணைக் கொண்டு தன் மனதிற்கு ஏற்றாற்போல் கலங்களைச் செய்வான் என்றும் திருமூலர் சொல்வார், சைவ சித்தாந்தக் கருத்துக்களை வலியுறுத்த திருமூலர் இவ்வுவமை யினைக் கையாண்டுள்ளார்.

நன்னூலார் கழற்குடம், இல்லிக்குடம் ஆகிய இரண்டு சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். கழல் என்பது சிறுவர் விளையாடப் பயன்படுத்தும் ஒரு வகைக் காய். கழற்காய் போட்ட குடத்தை ஆசிரியர் ஆகாதவருக்கு உவமையாகக் கூறுகிறார் நன்னூலார். தன்னுள்ளே போட்ட முறைப்படி இல்லாமல் முன் போடப்பட்டவற்றையும் பின் போடப்பட்டவற்றையும் அம்முறை மாறிப் போகு மாறு கொட்டும்போது விரைவிலே தன்னுள்ளே கொண்ட கழற்காய்களைக் கொடுக்கும். இது கழற்காய் குடத்தின் இயல்பு. இல்லிக்குடம் என்ற ஒன்றையும் நன்னூலார் குறிப்பிடுகிறார். இல்லிக் குடம், நீரை ஊற்றுந்தோறும் ஒழுகவிட்டுவிடும். அதுபோல் கடை மாணாக்கர் நூற்பொருளைக் கற்பிக்குந்தோறும் மறந்து விடுவர். ஆசிரியர், மாணவர் இயல்புகளைத் தெளிவுபடுத்த நன்னூலார் மட்கலங்களை உவமையாகக் கூறியுள்ளார்.

இனி, தமிழிலக்கியத்தில் வரும் மட்கலம் குறித்த ஓரிரு உவமைகளையும். அபபிரம்சா மொழியில் வரும் ஓர் உவமையையும் ஒப்பிட்டுக் காண்போம். திருக்குறளில் வினைத்தூய்மை அதிகாரத்தில் ஒரு குறள் பசுமண் கலத்தைக் குறித்து வருகின்றது.

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று (660)

பிறரை வஞ்சனை செய்து சேர்க்கப்பட்ட செல்வம் பச்சை மண் பாத்திரத்தில் நீரைச் சேகரித்து வைத்தலுக்குச் சமம். சுடாத பச்சை மண் சட்டியில் தண்ணீர் நிற்காது. அதுபோல் வஞ்சத்தால் சேர்த்த செல்வமும் நிற்காது.

இனி, குறுந்தொகையில் வரும் ஓர் உவமையைப் பாருங்கள்.

நல்லுரை இகந்து புல்லுரை தாஅய்
பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி
அரிது அவாவுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதால ம்மநின் பூசல் உயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே (குறுந். 29)

இப்பாடல் ஔவையார் பாடியது. தலைவன் தலைவியை இரவு நேரத்தில் சந்திக்க விரும்பு கிறான். அதனைத் தோழி மறுத்து விடுகிறாள். திருமணம் செய்துகொள்ள (வரைந்து கொள்ள) வேண்டும் என்று கூறுகிறாள். தலைவன் அமைதி கொள்ளவில்லை. மீண்டும் இரவுக் கூட்டத்தையே விரும்புகிறான். அந்நிலையில் தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

நெஞ்சே! நல்ல உரைகளை ஒழித்து பயனற்ற உரைகளைப் படரவிட்டாய்! பெய்கின்ற மழை நீரை ஏற்றுக்கொண்ட சுடப்படாத கலம் அந்நீரைத் தாங்க முடியாமல் வெளியேற்றிவிடும். அதுபோலவே உள்ளத்தினால் தாங்கமுடியாத ஆசை வெள்ளத்தில் நீந்திச் சென்று பெறுதற்கு அரியதைப் பெற விரும்பினை, உயர்ந்த மரக்கிளையிலுள்ள குட்டி யால் தழுவப்பெற்ற பெண்குரங்கு போல என் கருத்தறிந்து நிறைவேற்றுவோரைப் பெற்றால் உனது பூசல் மிகவும் பெருமையுடையது. பசுமண் கலத்தில் நீர் தங்காதது போல காதலியைச் சந்திக்க விரும்பும் அளவுகடந்த ஆசையையும் மனம் தாங்காது என்பது போல உவமை வந்துள்ளது. இதே உவமை அபபிரம்சா பாடலில் வேறு விதமாக வந்துள்ளது.


நீண்ட நாட்களாகத் தலைவியைச் சந்திக்க முடியவில்லை தலைவனால். மனதில் கட்டுக் கடங்காத ஆசை. அவ்வாறு சந்தித்துவிட்டால் மீண்டும் பிரியக்கூடாது. பிரிவைத் தாங்கி உயிர் வாழ்தல் இயலாது. என்ன செய்வது? ஏதாவது அற்புதங்கள் நிகழ்த்தி அவளோடு ஒன்று கலந்து விடவேண்டும் என்று தன் அளவுகடந்த ஆசையை வெளிப்படுத்துகிறான்.

நான் காதலியை எவ்வாறேனும்
சந்தித்தால்
கேள்விப்படாத ஓர்
அற்புதத்தை நிகழ்த்துவேன்
பசுமண் கலத்துப்
புகுந்த நீர்போல
அவளுடைய உடலில்
என்னைக் கரைத்துக் கொள்வேன்1

‘பசுமண் கலத்துப் பெய்த நீர்போல’ என்ற இந்த உவமை தமிழிலும். அபபிரம்சா பாடல் களிலும் காணப்படுவது சற்று வியப்பாக இருக் கிறது. அரிது அவாவுற்ற இரு காதலர்களை இப் பாடலில் காணமுடிகிறது.

1. If ever (somehow) I happen to meet my beloved. I will work-out an unheard of miracle, as water permeates a will fresh earthern dish so shall I enter (my love) with all my being (Apabhramsa Grammar, p. 101)

கட்டுரை



# அறிவியல் தமிழுக்கு தனித்தமிழ் இயக்கம் செய்தனவும் செய்ய வேண்டுவனவும்

**டாக்டர் சு. நரேந்திரன்**

அச்செழுத்துக்கள் உருவாகாத காலகட்டத்தில் வழக்கிலிருந்த அறிவியல் கருத்துக்களைத் தமிழர்கள் ஓலைச்சுவடிகளில் பதிவு செய்துள்ளனர். கால ஓட்டத்தில் வெகுவாக அழிந்துவரும் ஓலைச் சுவடிகளில் மருத்துவம், கணிதம் பற்றிய அரிய கருத்துக்கள் பாடல் வடிவில் இடம் பெற்றுள்ளன. ஆகவே, தமிழின் அறிவியல் எழுதுமுறை வரலாற்றை ஓலைச் சுவடிகளிலிருந்தே தொடங்க வேண்டும். டேனிஸ் மிஷனரியாக தமிழகம் வந்த சீகன் பால்கு (1700) குறிப்புகள் மூலம் தமிழகத்தில் நிலவிவந்த மருத்துவமுறையையும் தமிழர்களிடம் இருந்த மருத்துவத் தொழில் நுட்பத்தையும் ஓலைச்சுவடிகளில் நூலாக்கம் செய்துள்ளனர் என்பதை உறுதி செய்ய முடிகின்றது.

கிறித்தவ சமயத்தவர்கள் சென்னையில் அச்சகம் தொடங்கிய பிறகு இரேனியுசு பாதிரியார் 1818-இல் சென்னையில் துண்டறிக்கை சங்கத்தைத் தொடங்கினார். இரேனியுசின் முதல் துண்டறிக்கை காலராவைப் பற்றியது. அந்த வெளியீடே பொது மக்களுக்கான அறிவியல் எழுதுமுறையின் முதல் வெளியீடாகக் கருதலாம். அறிவியல் தமிழ் ஆக்க முயற்சியில் தமிழில் எழுதப்பட்டமையும், அதன் இரண்டாவது கட்டமாக முறையான கலைச் சொல்லாக்கப் பணி. நிறுவன ரீதியாக நூற்படைப்பு முயற்சியும் ஏறத்தாழ 150 ஆண்டு வரலாற்றுப் பின்னணியில் காணப்படுகின்றது.

விடுதலைப் போராட்டம் அரசியல் களத்தில் இந்தியாவினுடைய மொழிகள், பண்பாடுகள், சமயங்கள், தத்துவங்கள், கலை, இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றின் வேர்களைத் தேடத் தொடங்கியது. மேலைநாட்டு அறிவியல், கலை, தத்துவம். சமயம் பரப்புரை ஆகியவற்றின் பிடியிலிருந்து விடுபட வேண்டுமானால் மண்ணின் வேர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அனைத்திந்திய நிலையில் இத்தகைய போக்கு நிலவும் போது, தமிழகத்தில் ஒரு வகையான மறுமலர்ச்சி எழுந்தது. வைதீகப் பிறவியிலிருந்தும் பிராமணப் பிடியிலிருந்தும் தமிழகத்தை மீட்க வேண்டும் என்ற சிந்தனையும் உருவெடுத்தது. அதன் முதல்கட்டம் தான் திராவிட மொழிகளைச் சமஸ்கிருதப் பிறவியிலிருந்து மீட்பது. இதற்கான செயலாக திராவிட மொழிகளுக்குள் தமிழுக்கு ஒரு இடத்தை கொடுத்துக் கால்டுவெல் திராவிட மொழியியலுக்கு வித்திட்டார். அவர் இட்ட வித்திலிருந்து திராவிட அரசியலும், தமிழின் தனித்துவமும் கிளைத்தெழுந்தன. கால்டுவெல் அவர்களே தமிழின் வரலாற்றின் பின்நோக்கிச் செல்ல, செல்ல சமஸ்கிருத சொற்களின் எண்ணிக்கை தமிழ் சொற்களஞ்சியத்தில் வெகுவாகக் குறைந்துள்ளன என்று குறிப்பிடுகிறார்.

இடைக்காலத்தில் சமயம் தொடர்பாகவும் தத்துவம் தொடர்பாகவும் சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழ் நிறைய சொற்களைக் கடனாகப் பெற்றது. புதிய சொற்களின் உதவியினால் தமிழில் ஸ,ஜ,ஷ போன்ற கிரந்த எழுத்துக்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. சமஸ்கிருத மொழியின் தாக்கத்தால் தமிழில் ஏற்பட்ட மாற்றங்கள் மொழியின் தூய்மையைப் பாதித்துவிட்டதாகக் கருதப்படுகிறது. மொழி மாற்றங்கள் கட்டுப்படாமல் போனால் மொழி சிதைந்துவிடும் என்ற உணர்வு மொழிப்பாதுகாப்பு என்ற நடவடிக்கைக்குப் பொதுவாக நம்மை இட்டுச் செல்லும். இச்சூழல்தான் தூய தமிழ் இயக்கத்திற்கான தோற்றம். கால்டுவெல் விதைத்த விதை ஒரு இயக்கமாகப் பின்னர் வளர்ந்தது. நாம் கால்டுவெல்லை நேரடியாகத் தொடர்புபடுத்த இயலாவிட்டாலும் அவருடைய சிந்தனையும், அவர் தமிழ்பால் கொண்டிருந்த நட்பும் தமிழ் மொழியின் தனிச் சிறப்புகள் குறித்து, அவர் வெளியிட்ட கருத்துக்களும் பின்னால் தோன்றிய தூய தமிழ் இயக்கத்திற்குக் கருவாக அமைந்தன என்று கூறலாம். இங்கு மொழி இயல் சிந்தனையும், அரசியல் சமுகச் சூழல்களும் மொழி சார்ந்த இயக்கத்திற்கு வித்திட்டன. தமிழில் சொற்களை உருவாக்குகின்ற போக்கையும், தமிழ் மூலம் அனைத்து அறிவியல் செய்திகளையும் வெளியிட முடியும் என்ற தன்னம்பிக்கையும் மேலே சுட்டிக் காட்டிய சூழல்கள்தாம் உருவாக்கின என்று கூறுவது ஒரு மிகையான கூற்றல்ல.

இன்று நாம் படித்துக் கொண்டிருக்கின்ற அறிவியல், வாழ்வியல் படிப்பு, பிரிட்டிஷாரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். 1830-களில் அதற்கான தொடக்கம் தமிழகத்திலும். இலங்கையிலும் ஏற்பட்டது. இரேனியுசு பாதிரியார் பூமி சாஸ்திரம் என்கிற நூலைத் தமிழர்களுக்கு அறிவுண்டாகும்படி என்று இந்துமத புராணக்கருத்துக்களுக்கு மறுப்பாக எழுதி 1832-இல் வெளியிட்டார். 1849-இல் இலங்கையில் பால கணிதம் என்ற நூல் வெளியாயிற்று. 1885-இல் 'Algebra' பற்றிய நூல் **"இயற்கணிதம்"** எனத் தமிழாக்கப்பட்டு வெளி வந்தது. **"வீசகணிதம்"** என்ற இன்னொரு நூல் இதே ஆண்டில் வெளிவந்தது. இதுவும் 'Algebra'-வைப் பற்றியதுதான். இயற்கணிதம், வீச கணிதம் என்பதன் பின்புலத்தில் தமிழ், வடமொழிப் பார்வை இருப்பதை அறியலாம். இதன் பின்னர் 1850-இல் மிகப்பெரும் சாதனை இலங்கையில் அமெரிக்கப் பாதிரியாரான டாக்டர் ஃபிஷ்கிறீனால் நிகழ்ந்தது (1852-1884). இம்மருத்துவர் மேலை மருத்துவ நூல்களுடன் இரண்டு கலைச்சொல் தொகுதியையும் வெளியிட்டார். இவர் முயற்சியில் இலங்கைத் தமிழர்களுடன் எழுதிய நூல்கள் **"மனுஷ அங்காதிபாதம், இரண வைத்தியம்"** போன்ற வடமொழிச் சொல் பெயருடைய நூல்கள். இதுபோல வடமொழிக் கலைச் சொற்களையே தம் நூல்களில் மிகையாகப் பயன்படுத்தினார். எ.கா. 1. 'Adenitis' கிரந்திரம், 'Anesthesia' அசேதனி. இருப்பினும் டாக்டர் ஃபிஷ்கிறீன் கலைச் சொற்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகளுக்கு சில வழிமுறைகளை வகுத்துக் கொண்டார். இதனை அவர் கூறும் பொழுது (1) தமிழில் உண்டே என்ற பின் (2) பூரணமான சொல் பெறாத பொழுது... சமக்கிருதத்தில் தேடவும், (3) தமிழிலாவது சமக்கிருதத்திலாவது காணாத போது... ஆங்கிலம் எனத் தெளிவாகக் கூறுகிறார்.

இக்கருத்துதான் பாரதியாராலும் வலியுறுத்தப் பட்டது. ஆனால் கிறீனின் கலைச்சொல்லாக்க அடிப்படைகள் அக்கால மொழி நிலையையும் கல்விப்பயனையும் கருத்தில் கொண்டு உருவாக்கப் பட்டனவாக இருக்க பாரதியார் காட்டும் அடிப் படைகள் மொழிக் கொள்கை பற்றியதாகவும் கல்விப் பயன் பற்றியதாகவும் உள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கில கலாச்சார மற்றும் ஆங்கிலமொழி எதிர்ப்பு முதலானவை தோன்றின. விடுதலை வேட்கை கொண்ட இந்தியர்களுக்கு ஆங்கிலேயர் மீது தோன்றிய வெறுப்புணர்ச்சி அவர்தம் மொழியைப் பயன்படுத்துவதில் வெளிப் பட்டது. இந்நிலையில் ஆங்கில மொழி எதிர்ப்பும் தமிழ் மற்றும் சமக்கிருத மொழிகளுக்கு ஆதரவும் பெருகின. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தாய்மொழிக்கல்வியின் முக்கியத்துவம் உணரப் பட்டது. பாரதியார் "தமிழ் நாட்டில் தேசியக் கல்வி என்பதாக ஒன்று தொடங்கி, அதில் தமிழ் பாஷையைப் பிரதானமாகக் காட்டாமல் பெரும் பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும், தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால், அதே தேசியம் என்ற பதத்தின் பொருளுக்கு முழுவதும் விரோதமாக அமையுமென்பதில் ஐயமில்லை. தேச பாஷையே பிரதானமென்பது, தேசீயக் கல்வியின் பிரதானக் கொள்கை. இதனை மறந்துவிடக்கூடாது. தேசபாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாட்டிலிருந்து பரிபூரண ஸஹாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால், இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்று தம்பட்டம் செய்து அறிவிக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

கிறீனை ஒட்டி தமிழகத்தில் மேலை மருத்து வத்தை ஆயுள்வேதத்துடன் இணைத்து ஏழு நூற்கள் எழுதியவர் சென்னை மருத்துவக்கல்லூரியில் டிரசராக வேலைப் பார்த்த மா. ஜகந்நாத நாயுடு. இவருடைய நூலிலும் வடமொழி கலைச் சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன. நூற்களின் பெயரும் டாக்டர் கிறீனை ஒத்தே வடமொழிச் சொல்லாக உள்ளது. எ.கா: பைஷ ஜகல்பம், சாரீரவினாவிடை, பிரசவ வைத்தியம். இவர் நூலில் கலைச்சொல் பட்டியலில் நல்ல தமிழ்ச் சொல் இருந்தாலும், வடமொழிச் சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது அக்காலத்திய சொல்லாட்சியை அறிவுறுத்துகின்றது. இதற்கான காரணங்களை ஆராயும்பொழுது இவர்களுக்கு மணிப்பிரவாள நடையிலே தமிழ் பயிற்றுவிக்கப் பட்டிருக்கலாம். அக்காலகட்டத்தில் வடமொழியே அறிவியல் மொழி என எழுதாத சட்டமாக இந்தியா முழுவதும் நிலவியது. மேலும் மேலை நாட்டி னருக்கு அடுத்ததாக - ஆங்கிலத்தில் தான் கற்ற அறிவியல் துறைகளைத் தமிழில் அறிமுகப்படுத்திய மேல்மட்டத் தமிழர்களும் பெரிதும் வடமொழிச் சொற்களையே கலைச் சொற்களாகக் கையாண்டனர். அத்துடன் தொடக்ககாலத்தில் அறிவியல் நூல் களை எழுதியவர்களில் பெரும்பான்மையோர் வடமொழி கற்றவர்களாகவே இருந்தமையால் கலைச் சொல் உட்பட மொழி நடையில் வட மொழித் தாக்கம் மிகுந்து காணப்படுகிறது. இந் நூலாசிரியர்களின் காலத்திற்கு முன்பே ஃபெப்ரி ஷியஸ் (1778), இராட்லர் (1830), வின்சுலோ (1845) ஆகியோரின் அகராதிகள் வெளிவந்துவிட்டன.

இது தவிர டாக்டர் கிறீன் அகராதி பட்டியலில் உவில்சன் என்பவர் இரண்டாம் முறை அச்சிற் பதிப்பித்த சமக்கிருத - இங்கிலீஷ் அகராதியில் இருந்து சில கலைச்சொற்கள் பெறப்பட்டன என்ற குறிப்பும் காணப்படுகின்றது. அடுத்து இதேபோல் பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் விளைவாக சுகாதார வாழ்விற்குப் பலவித இடையூறுகள் ஏற்பட்டுப் பல நோய்களும் சமூகப்பிரச்சனைகளும் பெருவாரி யாகப் பரவின. இங்குத் தோன்றிய தூய்மை குறித்த நூல்கள். எ.கா. : சுகாதார விளக்கம் (1869). இது போல புதிய கண்டுபிடிப்பு நூற்கள், ஆயில் என்ஜின், மோட்டார் ரிப்பேர் ரகசியம் போன்ற நூற்கள். இந்நூற்களில் வட சொற்களும், ஆங்கிலச் சொற் களும் கலந்து எழுதப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 1916-இல் கலைச்சொல் உருவாக்கத்திற்கு தமிழ் சாஸ்திர பரிபாஷை சங்கத் தாரின் இதழ், ராஜாஜி மற்றும் வெங்கட சுப்பையரும் சேர்ந்து ஆங்கிலத்தில் வெளி யிட்டனர். இதில் வெளிவந்த சொற்களும் பெரும் பான்மை வடமொழிச் சொற்களே ஆகும். (எ.கா. Chemistry = இரசாயன சாஸ்திரம்).

ஆங்கிலத்தில் வெளிவந்த இவ்விதழைப் பாரதி கடுமையாக விமர்சித்தார். "ஆரம்பத்தி லேயே தமிழ் எழுதாமல் தமிழுக்கு வேண்டிய இக் காரியத்தை இங்கிலீஸ் பாஷையிலே தொடங்கும் படி நேரிட்டதற்கு ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் சொல்லும் முகாந்தரங்கள் எனக்கு முழு நியாய மாகத் தோன்றவில்லை." இதே போல பொறிஞர் பா.வே. மாணிக்க நாயக்கரும் Tamil Scientific Term Society - இவர்களுக்கு " தமிழ் செயன்டிபிக் டெர்ம்சுக்கு" தமிழ் சொற்கள் இயற்றுவதா அல்லது ஆரியத்தில் இயற்றுவதா என்ற கேள்வி எழுந்தது. தமிழ் மொழிக்கு அரபியில் இயற்று

வதா ஹீப்ருவில் இயற்றுவதா என்பதாக ஏனோ இவர்கள் கருதவில்லை என்று கொதிப்படைந்து எழுதுகிறார். மேலும் இவர் தம் நூலில் வட மொழிக் கலப்பைக் கூடவே கூடாது என்று சொல்லு மிடத்து, "இளமை குன்றாது உயிரோடிருக்கும் செந்தமிழ் மொழியின் கண் உலக வழக்கொழிந்த வடமொழிச் சொற்களைப் புகுத்துவது தெரிந்த நீரோடைக் குட்டத்தில் எருமைகளை ஓட்டிச் செல்வது போலாகும்" என்று தனித்தமிழ் முக்கியத்தை எடுத்தியம்புகிறார்.

1905-ஆம் ஆண்டு மதுரையில் பாண்டித் துரையால் நிறுவப்பட்ட தமிழ்ச்சங்கம் தமிழ் மலர்ச்சியின் தொடக்கம் எனலாம். இக்காலத்தில் தான் பழம் பெரும் நூல் பலவும் கண்டுபிடிக்கப் பட்டன. இக்காலகட்டத்தில் எதிர் காலனிய இயக்கத்தில் 1900-களில் உள்ளீடாக அமைந்திருந்த ஆரிய ஆதிக்கம் தவிர்க்க முடியாதபடி திராவிடக் கோட்பாடு இயக்கத்திற்கு வழி வகுத்தது. திராவிடக் கோட்பாடு தமிழ் மொழியின் தூய்மையையும் வடமொழியின் உதவியின்றித் தனித்தியங்கும் ஆற்றலையும் எடுத்துக்காட்ட விரும்பியது. இப் போக்குகளின் விளைவாகத் தமிழ்ப்பண்பாட்டின் ஆணிவேரான இலக்கிய மரபு தன் முனைப்புப் பெற்றது. பொதுமை தமிழ் மறுமலர்ச்சியின் முக்கிய கூறாக அமைந்தது எனப் பல அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக "சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்" என்ற பாரதியின் சங்கநாதம் தமிழில் கல்வி என்ற மட்டில் நில்லாது தமிழிலே அறிவியல் என விரிந்து தமிழ்மொழி அறிவியல் மொழியாக வேண்டும் என்ற எண்ணம் பலரிடையே எழுந்தது. 1900-களில் வெளியிடப்பட்ட கல்விக் கொள்கையின் அடிப்படையில் இயற்கை அறிவியல் பாடம் கல்வித் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நூலாசிரியர்கள் ஐரோப்பியர் களாகவோ மிசினெரிகளாகவோ அமைந்திருந்த நிலை மாறி இக்காலகட்டத்தில் பெரும்பாலான நூல்கள் தமிழ் மக்களால் எழுதப்பட்டன. 1920-களில் தனித்தமிழ் இயக்கம் தமிழ்நாட்டில் மறை மலை அடிகளால் துவங்கப் பெற்றது. அதன் காரண மாக வடமொழி எதிர்ப்பு தீவிரமடைந்து, இதன் பிறகே தனித்தமிழுக்கான மடை மாற்றம் தமிழகத்தில் ஏற்பட்டது.

1932-இல் தமிழ் 8-ஆம் வகுப்பு வரை பாட மொழி ஆக்கப்பட்டதின் விளைவாக தமிழ்க் கலைச் சொல்லாக்க முயற்சிக்கு உதவியாக சென்னை அரசு ஒரு கலைச்சொல் குழுவை அமைத்து சுமார் 7,400 கலைச் சொற்கள் அடங்கிய பட்டியலை வெளியிட்டது. இதில் பெரும்பாலான கலைச் சொற்கள் வடமொழியாகவும், ஆங்கிலமாகவும் இருந்தன. சில மிகவும் நீண்ட சொற்களாக இருந்தன. சான்றாக Analytical Chemistry - விபேதன ரஸாயன நூல். Census Report - குலஸ்திரீ புருஷ பாலவிருத்த ஆயவ்யய பரிமாண பத்திரிகை. Sexual Reproduction - லிங்க விருத்தி Spinal Cord - சுசேருவதை. Airway - வாயுபாதை, Rail - தூமச் சக்கரம். இதன் பயன்பாடு மிக குறைவாக உள்ளது என்பதை சென்னை மாதிரிப்பள்ளியின் தலைமை யாசிரியர் டி.கே. துரைசாமி சாஸ்திரி "அரசாங்கம் கலைச் சொற்பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது. இதிலுள்ள சொற்கள் நீளமானதாகவும், சமஸ் கிருதமாகவும் உள்ளதால் எளிமையாகப் பயன் படுத்த முடியவில்லை." (தினமணி 09.04.1935) என நாளிதழில் எழுதியது போல் பலரும் எடுத்துக் காட்டினர்.

இந்நிலையில் தனித்தமிழ் ஆதரவாளர்கள், அமைப்புகள் வாயிலாக கலைச் சொல்லாக்க முயற்சிகளை மேற்கொண்டனர். அரசு கலைச் சொல் பட்டியலுக்கு மாற்றாக பா.வே. மாணிக்க நாயக்கர், காழி. சிவ. கண்ணுசாமி இருவரும் தமிழ் அறிவியல் சொற்கள் பலவற்றைச் செந்தமிழ் செல்வி வாயிலாக (தொகுதி - 10, 1932, 33) வெளியிடத் தொடங்கினர். தமிழ் அளவை நூற் சொற்களை மா. பாலசுப்பிரமணியம் செந்தமிழ் செல்வியில் (தொகுதி-13, 14-1935) வெளியிட்டார். 1932-இல் வெளியான அரசுக் கலைச்சொல் பட்டியலில் காணப்படும் குறைகளை நீக்கி எளிதில் புரியும் வகையில் தமிழ்ச் சொற்களைக் கொண்ட கலைச் சொல் பட்டியல் ஒன்று தயாரிக்கும் பணிக்காகச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் (திருநெல்வேலி) ஒரு கலைச்சொல் குழுவை 01.10.1934-ல் அமைத்தது. இதன் முதற் கூட்டம் 29.09.1935 அன்று திருநெல் வேலியில் நடைபெற்றது. அந்நிலையில் இக்கழகத் தலைவராக இசைத் தமிழ்ச் செல்வர் தி. இலக்கு மணப்பிள்ளை செயல்பட்டார்.

அறிவியல் துறைச் சொற்கள் ஒன்பது நாட்கள் ஆராயப்பட்டன. இதன் பயனாக 20.09.1936-இல் கலைச் சொல்லாக்க மாநாடு சென்னையில் நடை பெற்றது. இம்மாநாட்டை ஒட்டி பல துறை சார்ந்த 5,300 கலைச் சொற்கள் அடங்கிய பட்டியல் வெளி யிடப்பட்டது. இதிலுள்ள கலைச் சொற்களைத் திருத்திச் செம்மைப்படுத்த உதவிய அறிஞர்கள்: விபுலாநந்தர், இராஜாஜி, கே.எஸ். இராமசாமி ஐயர், வைத்தியநாத சுவாமி, சீனிவாசராகவன்,

கி.மு. சுப்பிரமணியப்பிள்ளை, டி.எஸ். வேலாயுதம் பிள்ளை, எம்.எஸ். சபேச ஐயர், எஸ். மணவாள இராமானுசம், தேவநேயப் பாவாணர், டி.எஸ். நடராஜப் பிள்ளை, அ. முத்தையாப்பிள்ளை, டி. செங்கல்வ ராயப் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, அ.கி. பரந்தாமனார், என். சுப்பிர மணிய ஐயர், எஸ். சச்சிதானந்தம் பிள்ளை ஆகியோர் களாகும்.

தனித்தமிழ் இயக்கத்தில் ஈடுபட்டோர்களால் இக்காலத்தில் தனித்தமிழ்க் கலைச்சொற்கள் உருவாக்கப்பெற்றன. ஏனெனில் பிறமொழிகளி னின்றும் கடன் வாங்கித் தமிழ் மொழியை உரு மாற்றி உயிரற்றதாக்கக் கூடாது. பிறமொழி ஓசை தமிழ்மொழி ஓசைக்கு மாறுபட்டது. தமிழ் இலக்கணத்திற்கும் தமிழ் இசைக்கும் பிற மொழி ஒத்து வராது என்பது இவர்கள் கருத்து. எனவே தூய தமிழ் சொற்களைப் பயன்படுத்துதல், இலக்கியச் சொற்களை நடைமுறைக்குக் கொண்டு வருதல், சமக்கிருதம் மற்றும் ஆங்கிலச் சொற்களை, குறிப்பாகச் சமக்கிருத சொற்களைப் புறக் கணிப்பது ஆகியவை இவர்கள் நோக்கமாக இருந்தது.

இதன் பயனாக அக்கால நூலாசிரியர்களும் கட்டுரை ஆசிரியர்களும் பல தமிழ்ச் சொற் களைப் புதிதாக ஆக்கிக் கட்டுரை படைத்தனர். எ.கா. : Aluminium - சீனாயம், Calcium - நீறியம் இவை புதிதாகப் படைக்கப்பட்ட வேதியல் சொற்கள். இவ்வாறு உலகப்பொதுச் சொற்களுக்கும் கூடத் தமிழ்ச் சொற்களைத் தேடும் முயற்சியில் அக்கால ஆசிரியர்கள் பலரும் ஈடுபட்டனர்.

இதன் பயனாக:

சரீர சாஸ்திரம் > உடலியல் ஆயிற்று

பிராணவாயு > உயிர்வளி ஆயிற்று

1936இல் வெளிவந்த கலைச்சொல் பட்டியலின் மறுபதிப்பு 1938-இல் வெளிவந்தது. இதில் கூடுதலாகச் சொற்கள் (சுமார் 10,000) வேளாண்மைச் சொற்களுடன் சேர்த்து வெளியிடப்பட்டது. அப் போதைய சென்னை அரசு தமிழ்ச்சங்கம் தயாரித்த இக்கலைச்சொல் பட்டியலைப் பள்ளிகளில் பயன் படுத்த வேண்டும் எனப் பரிந்துரைத்தது. இது தனித்தமிழ் இயக்கத்தினருக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்றால் மிகையில்லை. இம் மறுபதிப்பு பட்டியலுக்கு இராசாசி முன்னுரை வழங்கினார். இதில் அவர் "பழைய கலைச்சொற்களைத் தேடித் திரட்டுவதும் புதிய சொற்களை ஆக்குவதுமான இந்தப் பணியை, தனித்தமிழ் இயக்கத்துடன் கலந்து கலவரமுண்டாக்கிக் கொள்ளுதல் தவறாகும். தமிழில் கலந்து கொள்ளும் தன்மை கொண்ட சமஸ்கிருத மொழிகளைக் காரணமின்றி வெறுத்தல் கூடாது. தனித்தமிழ் வெறியும், வடமொழி மோகமும் - இரண்டும் இந்தத் தமிழ்ப் பணிக்குத் தடை களாகும்" என்று எழுதி இருந்தார்.

1937-இல் இராசாசி " தமிழில் முடியுமா" என்ற நூலை வெளியிட்டார். இது ஆங்கிலத்தில் Dr. Kimballi எழுதிய College Text Book of Physics என்ற நூலைத் தழுவியதாகும். இந்நூலில் பயன்படுத்தி யுள்ள கலைச்சொற்கள் பெரும்பாலானவை தூய தமிழ்ச் சொற்களாகும். எ.கா. : Bi-cycle - மிதிவண்டி, Direction - செல்திசை, Density - செறிவு, Heat - கனல், Liquid - நீரி, Motion - இயக்கம், Solar Day - பரிதிநாள், Solid - திண்மம். இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது: ஆரம்ப காலத்தில் கலைச் சொல்லிற்காக ஆங்கில இதழை ஆரம்பித்து, அதில் வடமொழிச் சொற் களுக்கு முதலிடம் கொடுத்த இராசாசி, பிறகு தனித்தமிழ் வெறி கூடாது என்று கூறியவர், தம் நூலில் மிகச் சிறப்பான தூய தமிழ்ச் சொற்களைப் படைத்திருப்பதும் தனித்தமிழியக்கத்தின் வெற்றி எனக் கொள்ளலாம்.

சென்னை அரசு 1940 ஜூன் மாதத்தில் சீனிவாச சாஸ்திரி தலைமையில் ஒரு கலைச்சொல்லாக்கக் குழுவை அமைத்தது. இக்குழு செய்த பரிந்துரை களில் ஒன்று இந்தியா முழுவதுக்கும் பொதுவான கலைச் சொற்களை உருவாக்க முயல வேண்டும் என்பது ஆகும். (தமிழ்ப் பொழில் 1940--41 16:7, பக்.248). இக்குழுவைக் கண்டித்துப் பல கண்டன பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. ஏற்கெனவே வெளியான சென்னை மாகாணத் தமிழ் சங்கத் தாரின் கலைச்சொல் பட்டியல் இருக்கும் போது இக்குழு தேவையற்றது என்றும், இக்குழுவில் தமிழறிஞர் யாரும் இடம் பெறாதது கண்டிக்கத் தக்கது என்றும், இக்கூட்டங்களில் வலியுறுத்தப் பட்டன. இதன் பலனாக இரா. பி. சேதுப்பிள்ளை, இ.மு. சுப்பிரமணியப்பிள்ளை, அ. முத்தையா முதலிய தமிழன்பர்கள், பின்னர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இக்கால கட்டத்தில் அறிவியல் நூல்களை எழுதியவர்கள் பெரும்பான்மையோர் பொது நலத்தில் அக்கறை கொண்டவர்களாகக் காணப் படுகின்றனர். ஆ.கே. விசுவநாதன், ஈ.த. ராஜேஸ்வரி ஆகியோர் இயற்பியல் துறையிலும், ஜி. ராஜ கோபால் நாயுடு, மு. அருணாசலம், ரங்காச்சாரி தாவரவியல் துறையிலும், ச.கு. கணபதி தாவர வியல், விலங்கியல் ஆகிய இரு துறைகளிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளனர்.

இது தவிர கிறித்தவ இலக்கிய சங்கம் 1967-லிருந்து 8 மருத்துவ நூல்களையும், உடைபடாத சோவியத் யூனியனிலிருந்து மிர் மற்றும் முன்னேற்றப் பதிப்பகத்தின் மூலம் மருத்துவ நூல்கள் நான்கும் 12 அறிவியல் நூல்களும் வெளிவந்துள்ளன. இது போல என்.சி.பி.எச். புத்தக நிறுவனத்தின் மூலம் 1951-1985 வரை 22 அறிவியல் நூல்கள் வெளி வந்துள்ளன.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் 1959-இல் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1960-இல் அன்றைய கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியத்தின் முயற்சி யால் கல்லூரிகளில் தமிழ் பாடமொழியாயிற்று. இப்படிப்புகளுக்குத் தேவையான பாடநூல்களைத் தயாரிக்க தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் தொடங்கப்பட்டு, பல்வேறு துறை சார்ந்த நூல்கள் ஏப்ரல் 1977 முடிய வெளியிட்டது. இதில் 70 விழுக்காடு அறிவியல் சார்ந்தவையாகும்.

1981-ஆம் ஆண்டு தஞ்சாவூரில் ஆரம்பிக்கப் பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் தமிழ்த் துறை என்ற புதிய துறை உருவாக்கப் பட்டது. இதன் வழியாக 15 மருத்துவ நூல்களும் 14 பொறியியல் நூல்களும் எழுதி வாங்கப்பட்டன.

இப்பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சொற் களுடன் கலந்து இருக்கும் பிற மொழிச் சொற் களுக்கு இணையான கலைச்சொற்களை அகர முதலித் துறையானது சொல்லாய்வறிஞர் ப. அருளியினால் அயற்சொல் அகராதி வெளி வந்துள்ளது. இதில் பல மொழிச் சொற்களுக்குத் தமிழில் புதுச் சொற்கள் படைக்கப்பட்டுள்ளன. எ.கா. : அமிலம் (சமஸ்கிருதம்) - புளிகம், அரோரூட் (ஆங்கிலம்) - அம்புக்கிழங்கு, சவுக்கு (உருது) - குச்சிலை மரம், பேரிக்காய், (ஆங்கிலம் + தமிழ்) - நீரிக்காய், மகரந்தம் (சமஸ்கிருதம்) - பூந்தாது.

இதே காலகட்டத்தில் தினமணி நாளிதழின் சனிக்கிழமை இணைப்பு இதழான தினமணிச் சுடரில் சொல்லாக்க மேடை என்னும் பகுதியில் தமிழில் அறிவியல் கட்டுரைகள் எழுதிய ஆசிரியர்கள் பயன்படுத்திய கலைச் சொற்களுள் ஏற்புடைய கலைச்சொற்கள், ஏற்க இயலாத கலைச்சொற்கள், பொருத்தமான புதிய கலைச்சொற்கள் ஆகியவை குறித்து அறிவியல் தமிழ் எழுத்தாளர்களின் விவாதம் இடம் பெற்றன. இதனைச் செம்மை செய்தவர் கரூர் முனைவர் அ. செல்வராசு. இவரது முயற்சி யால் நல்ல சொற்கள் உருவாகின. எ.கா. : ஆல்கா - பாசிகள்.

கலைச் சொற்களை உருவாக்குவதில் திருவேங்கடம் பல்கலைக்கழகத்தில் பேராசிரி யராகப் பணியாற்றிய முனைவர் ந. சுப்பு ரெட்டி யார், 15 அறிவியல் நூற்களை எழுதி அதில் வரும் கலைச் சொற்களையும் அறிமுகம் செய்த பெருமை அவருக்கு உண்டு. எ.கா. : Sensor - உணர்வி, Genetic - கால்வழி இயல், Yolk - கருப்பொருள்.

**களஞ்சியங்கள்:**

1947-இல் தமிழ் வளர்ச்சிக் கழகம் சென்னையில் அறிவியல் மற்றும் வாழ்வியலை உள்ளடக்கிய கலைக்களஞ்சியம் தயாரித்தது. இப்பணி 1968-இல் நிறைவுற்று 10 தொகுதிகள் வெளிவந்தன. 1972-இல் 10 தொகுதிகள் சிறுவர் களஞ்சியம் வெளியாயின. இதற்குப் பெரிதும் துணை நின்றவர் இக்கழகத்தின் தலைவர் தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார். 1990-இல் இக்கழகத்திற்கு வா.செ. குழந்தைசாமி தலைமைப் பொறுப்பேற்ற பிறகு மருத்துவக்களஞ்சியம் 12 தொகுதியும், 13-ஆம் தொகுதி, கலைச்சொல் அடைவாகவும் வெளிவந்தது. பிறகு சித்த மருத்துவக் களஞ்சியத் தொகுதிகள் ஏழு வெளிவந்தன. இது தவிர 4 அறிவியல் நூற்களையும் வெளியிட்டுள்ளது.

இது போலவே தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் 10 அறிவியல் களஞ்சியங்கள் வெளிவந்துள்ளன. இத்தொகுதிகள் ஒவ்வொன்றிலும் தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ் கலைச் சொற் பட்டியல் உள்ளன. அறிவியல் தமிழாக்க முயற்சியில் ஈடுபடும் அனைவருக்கும் பயன்படும் முறையில் இது அமைந்துள்ளது.

**அகராதிகள்:**

அறிவியல் நூற்கள் எழுதுவதற்கு அகராதி இல்லையே என்ற குறையை நிறைவு செய்யும் விதமாக டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியாரைக் கொண்டு சென்னைப் பல்கலைக்கழகம் வெளி யிட்ட ஆங்கிலம் - தமிழ் அகராதியில் நூற்றுக் கணக்கான தூய தமிழ் அறிவியல் சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. இச்சொற்களே சிதம்பரநாதரின் தனித்தமிழ்க் கொள்கைக்குச் சான்றாவன. இதற்கான காரணத்தை "தமிழ் நாடோறும் பிற மொழிக் கலப்பே பெற்றுவிட்டால் முடிவில் தமிழ்ச் சொற்கள் சுருங்கிச் சுருங்கிப் பிற சொற்கள் பல்கிப் பெருகிவிடும். அதனால் அடுத்த நூற்றாண்டில் தமிழைப் பார்க்கும் ஒருவன் தமிழ் என ஒரு தனி மொழி இல்லை, எனவே கூறத்தலைப்பட்டு விடுவான். தமிழ் உரைநடை வழக்கிலும். பேச்சு வழக்கிலும் தமிழ்ச் சொற்களுக்குப் பதிலாக வடமொழிச் சொற்களை வழங்கி வந்தால் தமிழ் வடமொழியினின்றே பிறந்தது என்பார் கூற்று

நாளடைவில் வலுத்துப்போம்" என்று தனித் தமிழின் தேவையை விளக்கி எழுதியுள்ளார். இதன் பிறகு 1994 இல் மருத்துவ அறிவியல் தொழில் நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதி மணவை முஸ்தபாவினால் வெளிவந்துள்ளது. 1994-இல் அ.கி. மூர்த்தியின் அறிவியல் அகராதி, 1996-இல் டாக்டர் சாமி சண்முகத்தின் மருத்துவ கால்நடை, சட்டச் சொற்கள் அடங்கிய அகராதி, 2000-இல் டாக்டர் சம்பத் குமாரின் ஆயுர்வேத, அலோபதி, ஹோமியோபதி கலைச்சொற்கள் அடங்கிய அகராதியும் பயன்பாட்டில் உள்ளன. இத்துடன் முனைவர் நே. ஜோசப் தொகுத்த மருத்துவக் கலைச் சொற்கள் அகராதியும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வெளிவந்துள்ளது. இவ்வகராதிகள் இன்று தமிழில் அறிவியல் கட்டுரை எழுதுபவர் களுக்கு மிகவும் உதவிக்கரம் நீட்டுகின்றன.

**தனித்தமிழ் இயக்கத்தால் அடைந்த பயன்:**

(1) தனித்தமிழ் இயக்கத்தின் செயல்பாட்டின் விளைவாக என்ன பயன் அடைந்தோம் என்று பார்க்கும் பொழுது ஏ. சிதம்பர நாதனார் கூற்றுப்படி "வடமொழிக் கலப்பு 50 விழுக்காட்டிலிருந்து 20-ஆகக் குறைந்துள்ளது."

(2) வழக்கில் இருந்த மணிப்பிரவாள உரை நடை வழக்கு ஒழிந்துள்ளது.

(3) 1987-இல் மலேசியாவில் உள்ள கோலா லம்பூரில் "அறிவியல் தமிழ்" கருப் பொருளோடு கூடிய அறிவியல் தமிழ் பன்னாட்டு மாநாடு நடைபெற்றுள்ளது.

(4) 1932-இல் தோன்றிய தனித்தமிழ் எழுச்சி யின் காரணமாக 1936-க்குப்பின் தூய தமிழ்ச் சொற்கள் மிகையாயின. 1940-47-இல் மீண்டும் வடமொழிச் செல்வாக்கு ஓங்கினும், அதற்குக் கண்டனம் இவ் வியக்கத்தினர் தெரிவித்ததால், 1959-இல் கல்லூரித் தமிழ் குழு அமைக்கப்பட்டது. இக்குழு கீழ்க்காணும் நெறிகளைப் பின் பற்றியது.

(அ) இயன்றவரை உலகளாவிய கலைச்சொற் களைப் பயன்படுத்துதல் தேவையான அளவுக்கு இவற்றைத் தமிழாக்குதல்.

(ஆ) நன்கு அறியப்பட்ட தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல்.

(இ) அவ்வாறு தமிழ்ச் சொற்களை அறிமுகப் படுத்தும் போது ஆங்கிலச் சொற்களை அடைப்புக் குறிக்குள் தருதல். இக்கல்லூரித் தமிழ்க்குழு உடனடியாக உலகளாவிய ஆங்கிலச் சொற்களை எடுத்தாண்டாலும், காலப்போக்கில் அச்சொற்கள் தமிழாக்கப் பட்டன என்பது வரலாறு.

(5) புதுச்சொற்கள் வரவு எ.கா. : Anatomy என்பது டாக்டர் கிறீன் நூற்படி "மனுஷ அங்காதிபாதம்" என்றும், இடையில் அனாடமி, சரீர இயல், சாரீரம், மெய்யியல் என்றெல்லாம் அழைக்கப்பட்டு, தற் பொழுது உடல் கூறு இயல், உடல் கூறியல் என்று பயன்பாட்டில் உள்ளது.

(6) பழஞ்சொல் மீட்பு - Chemistry என்பதற்கு இரசாயனம் எனக்கூறப்பட்டு வந்தது, இது வேதியல் ஆனது. வள்ளலார் இறை வனுடன் வேதித்தேன் என்று கூறுவது இங்கு நினைத்துப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

(7) புதிய அகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன. சான்றாக சென்னை மாகாண தமிழ்ச்சங்க கலைச்சொல் அகராதி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பல்பொருள் ஆங்கிலத் தமிழ் அகரவரிசை, அப்பாஸ் மந்திரியின் பொறியியல் குறியீடு. பழனிவேலனாரின் பிறமொழி தமிழ் அகர முதலி, பாவாணர் செந்தமிழ் சொற் பிறப்பியல் அகர முதலி. ப. அருளியின் அயற்சொல் அகராதி.

இவைகள் அனைத்தும் அறிவியல் தமிழ், தனித் தியங்கும் ஆற்றலும், தூயமொழி இயல்பும் கொண்டது என்பதை நிரூபிக்கின்றது. இது தனித் தமிழ் இயக்கத்தின் இடைவிடா போராட்டத்தின் காரணமாக நிகழ்வுற்று வருவதாக அறிய முடிகின்றது.

**தனித்தமிழ் இயக்கம் செய்ய வேண்டியது:**

(1) தமிழ்ப் பாட நூல் நிறுவனம் 1977-இல் தனது நூல் வெளியிடும் திட்டத்தை கை விட்டுவிட்டது.

(2) முதுமுனைவர் வ.ஐ. சுப்பிரமணியத்தின் தொலை நோக்கால் தமிழ்ப்பல்கலைக் கழக அறிவியல் தமிழ்த் துறையினரால் எழுதி வாங்கப்பட்ட 14 மருத்துவ 13 பொறியியல் நூற்களில் இன்று வரை (2017) பாதி அளவு கூட வெளிவரவில்லை.

(3) இதே பல்கலைக்கழகத்தில் அறிவியல் பண்ணை என்ற அமைப்பு மூலம் அறிவியல் தமிழ்த் துறையினர் அறிவியல் தொடர்

பான விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தி அப்பொருட்கள் நூலாக வெளிவந்தது. துணைவேந்தர் முதுமுனைவர் விஐ. சுப்பிர மணியம் ஓய்வு பெற்ற பிறகு அப்பண்ணைக் கூட்டங்கள் நடத்துவதை நிறுத்திக் கொண்டது. இதனால் நூற்களும் வெளி வருவதில்லை.

(4) இதுபோல முந்தைய தமிழக அரசு மருத்துவ அறிவியல் கருத்தரங்குகளை நடத்தியது. இது தொடரப்படவில்லை. மேலும் முந்தைய அரசு வெளியிட்டு வந்த "அறிவியல் தமிழ்" மாத இதழைத் தொடர்ந்து வெளிக்கொணரவில்லை. இவைகளினால் பல்கிப் பெருகி வெளிவர வேண்டிய அறிவியல் நூற்கள் வெளி வராது போய்விட்டன.

**பரிந்துரை:**

இதனைக் களையும் விதமாக மேலே கூறப் பட்ட நிறுவனங்கள் மீண்டும் தங்கள் நிர்வாகத்தின் மூலம் நூற்களை, இதழ்களை கருத்தரங்குகளை நடத்த தனித்தமிழ் இயக்கம் குரல் கொடுத்து மீண்டும் இச்செயல்பாடுகளுக்குப் புத்துயிர் ஊட்ட ஆவன செய்ய வேண்டும்.

இது தவிர அறிவியல் நூல்கள் எழுதுவோர்க்கு உதவிக்கரம் நீட்டும் வகையில் கலைச்சொல் தீர்வகம், மொழிபெயர்ப்பு மையம் அமைக்கப்பட வேண்டும். இத்துடன் மொழிக்கலப்பைத் தடுக்க தொலைக்காட்சி, வானொலி மற்றும் இதழ்களில் நல்ல தமிழ் எழுத்தாளர்களை பணியில் அமர்த்த வேண்டும். மேலும் கண்காணிப்பு இயக்கமும் நடைபெற்று உதவ வேண்டும். இதை வெற்றி கரமாக சிங்கப்பூர் தொலைக்காட்சி நடைமுறைப் படுத்துவது இங்குக் கவனிக்கத்தக்கது ஆகும். இவைகளை எல்லாம் அரசு நடைமுறைப்படுத்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்க அரசை வற்புறுத்த வேண்டும்.

இத்துடன் (1) பிறமொழி சொற்களுக்கான அகராதி, (2) மேற்கோள் அகராதி, (3) வட்டாரச் சொல் அகராதி ஆகியவைகளை உருவாக்க செயல் திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

உலகில் எந்த மூலையாயினும் புதிய அறிவியல் கண்டுபிடிப்பு நடந்தவுடன் அதற்கான சொற் களுக்கு ஈடான தமிழ்ச் சொற்களைத் தனித் தமிழில் புழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

அறிவியல் நூல்கள் தமிழில் வெளிவருவதற்கு முன் தமிழறிஞர், மொழி அறிஞர்கள் அந்நூலைத் தனித்தமிழில் வெளிவர உதவ வேண்டும். மேற் கூறப்பட்டவைகள் அனைத்தும் தனித்தமிழில் அறிவியல் நூல்களை எழுத பேருதவியாக இருக்கும். ஆனால் இத்தனையும் இருக்கும் பொழுது நூல் களுக்கான தேவை பெருக வேண்டும். வரலாற்றை உற்று நோக்கினால் கல்லூரியில் தமிழ் பாட மொழியாக்கப்பட்ட பிறகு அது தொடராது போன நிலையில் தமிழ்ப்பாட நூல் நிறுவனம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நூல்களை வெளியிடாது நிறுத்திவிட்டன. இதனை தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ்த் துறை முழு மூச்சோடு செயல்படுத்த தமிழியக்கங்கள் போராட வேண்டும்.

தமிழக அரசால் பொறியியலுக்கு மாணவர் சேர்க்கை நடைபெற்ற பிறகும்கூட அகில இந்திய தொழில் நுட்பக்கல்விக் குழு (All India Council for Technical Education - AICTE) தமிழ்வழி பயிற்றுவிக்க இசைவளிக்கவில்லை என்று கூறி மாணவர்களுக்கு தமிழ் வழி பொறியியல் படிப்பு நிறுத்தப்பட்டது. இவற்றின் ஒப்புதல் தேவையெனில் அதற்கான முயற்சியை அரசே முன்னின்று பெறுவதோ, அல்லது ஏதேனும் இது குறித்தான சிக்கல்களைக் களையச் சட்டத்திருத்தம் தேவையெனில் கல்வி யாளர்கள் மற்றும் சட்ட நிபுணர்களின் ஆலோ சனையின் அடிப்படையில் சட்டத் திருத்தைத் தையும் கொண்டு வரலாம்.

இறுதியாக முதலமைச்சராக எம்.ஜி. ராமச் சந்திரன் பதவி வகித்த காலத்தில் பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் சட்டத்தின் மூலம் அமுல் படுத்தப்பட்டதால், எல்லா இதழ்களும், கணிப் பொறியும், தங்களை மாற்றிக்கொண்டு தற் பொழுது அச்சீர்திருத்தத்தின்படியே வெளிவரு கின்றன. அதுபோல எல்லா நிலைகளிலும் தமிழைப் பாடமொழியாக்க வேண்டும். தேவை மிகையாகும்போது மொழி வளர்ச்சியும் மிகை யாகும். இதற்கு ஆட்சியின் ஒத்துழைப்பு தேவை.

இதைத்தான் பாரதிதாசன்;

"தமிழ்க்கல்வி தமிழ் நாட்டில் கட்டாயம் என்பதோடு சட்டம் செய்க" என்று கூறுகிறார். ●

**'உங்கள் நூலகம்' இதழுக்கு புத்தக மதிப்புரை அனுப்புவோர் இரண்டு புத்தகங்களைச் சேர்த்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**- பொறுப்பாசிரியர்**

# ஜனவரி வெளியீடு

## அன்னா கரீனினா

லியோ டால்ஸ்டாய்



தமிழில் : நா.தர்மராஜன்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை - 600 098.

☎ : 044 - 26251968, 26258410, 26241288

www.ncbhpublisher.in | email: info@ncbh.in


# விரைவில் நியூ செஞ்சுரி வெளியீடாக...

## கமலாலயன் மொழிபெயர்ப்பில்

## ஆனந்த் டெல்டும்டே-வின்

# மஹத்

முதல் தலித் புரட்சி





# பாரதி காலம்

**நா.வானமாமலை**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நடை விரிவான பல துறைகளில் பயன்படுத்துவதற்குப் பாரதி வழி காட்டினார். அரசியல், பொருளாதாரம், கல்வி, விஞ்ஞானம், சீர்திருத்தம், சமூகவியல் முதலிய பல வாழ்க்கைத் துறைகளிலும் தமிழ் உரைநடையின் செல்வாக்கை அவர் பரவச் செய்தார். இக்காலத்தைத் தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சி உதயம் என்று கூறலாம். பாரதி தமக்கு முன் மக்களுக்கு விளங்கும் படி எழுதிய ஆசிரியர்களுடைய நடையில், எளிமையும் உயிர்த் துடிப்பும் தெளிவும் உள்ளனவற்றைத் தமது நடைக்கு முன்மாதிரியாகக் கொண்டார். புதிய பொருள்களைத் தமது முன்னோர்களைவிட எளிய நடையில், உள்ளத்தைத் தாக்கும் முறையில் எழுதினார்.

சீர்திருத்த உணர்வையும் நாட்டுப் பற்றையும் வளர்க்க உணர்ச்சியூட்டும் நடையைக் கையாண்டார். அறிவை அகற்சி செய்யவும் தெளிவு காணவும் தருக்க ரீதியான நடையைக் கையாண்டார். இரண்டிலும் எளிமையும் தெளிவும் மிளிர்ந்தன. கட்டுரை களுக்கு அவர் இலக்கிய அந்தஸ்தை அளித்தார். குறிக்கோளுடன் கதைகள் எழுதினார். கற்பனைக் கதைகளில் தத்துவக் கருத்துக்களை உட்பொருளாக அமைத்தார். எளிமையான நடையையே, கூறும் பொருளின் தன்மைக்கேற்ப, விதவிதமாகக் கை யாண்டார். பல்வேறு கடினமான கருத்துக்களைக் கூட எளிமையான நடையில் விளக்க முடியும் என்பதை அவர் நிரூபித்தார்.

அவர் பல துறைகளிலும் கையாண்டிருக்கும் உரைநடையின் தன்மையைக் காணச் சில எடுத்துக் காட்டுக்களைக் காண்போம்.



**கதை சொல்லும் உரைநடை** (narrative)

மறுநாட் காலை முதல் முத்தம்மா பாடு கொண்டாட்டமாகி விட்டது. வீட்டில் அவளிட்டது சட்டம். அவள் சொன்னது வேதம். ஸோமநாதய்யர் ஏதேனுமொரு காரியம் நடத்த வேணுமென்று சொல்லி அவள் கூடாதென்றால் அந்தக் காரியம் நிறுத்தி விடப்படும், அவர் ஏதேனும் செய்யக் கூடாதென்று சொல்லி அவள் அதைச் செய்து தீர வேண்டுமென்பாளாயின் அது நடந்தே தீரும். இங்ஙனம் முத்தம்மா தன் மீது கொடுங்கோன்மை செலுத்துவது பற்றி மனவருத்தமேற்படுவதுண்டு. ஆனால் அம்மனவருத்தத்தை அப்போதப்போதே அடக்கி விடுவார்.

**தமிழ்ப் பற்று**

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம் போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப் போல வலிமையும், திறமையும், உள்ள தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள், அதுவரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச் சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக் கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்க வேண்டும். இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்.

**சீர்திருத்தக் கருத்துக்கள்**

செய்யூரிலிருந்து ஸ்ரீமாதவய்யா ஒரு கிழவருடைய விவாகத்தின் சம்பந்தமாக எழுதியிருந்த கடிதம் சில தினங்கள் முன்னே சுதேசமித்திரனில் பிரசுரம் செய்யப்பட்டிருந்தது.

கிழவருக்கு வயது 70. அவருடைய தாயார் இன்னும் உயிரோடிருக்கிறாள். அந்தப் பாட்டிக்கு வயது 98. இந்தத் தாயாருக்கும் தமக்கும் உபசாரம் செய்யும் பொருட்டுக் கிழவர் ஒரு பதினாறு வயதுக் குமரியைக் கலியாணஞ் செய்து கொள்ளப் போகிறாராம். இதே கிழவரிடம் இதைத் தவிர இன்னும் 21 குமரிகளின் ஜாதகம் வந்திருப்பதாகத்

தெரிகிறது. கடைசியாக ஒருவாறு தீர்மானஞ் செய்திருக்கிற பெண்ணின் தகப்பனார் பணத்தையும், விதியையும், ஜோதிடத்தையும் நம்பி வேலை செய் கிறார். தெய்வத்தை நம்புவதாகத் தெரியவில்லை. ஒட்டகத்துக்கு ஓரிடத்திலா கோணல், தமிழ் நாட்டிற்கு ஒருவழியிலா துன்பம்?

(தராசு - வசனங்கள் 744)

**ஆண் பெண் சமத்துவம் – பிரச்சாரம்**

ருஷியாவில் கொடுங்கோல் சிதறிப்போய் விட்டதாம்.

ஐரோப்பாவிலே ஏழைகளுக்கும் பெண்களுக்கும் நியாயம் வேண்டுமென்று கத்துகிறார்களாம்.

உலக முழுமைக்கும் நான் சொல்லுகிறேன். ஆண் பெண்ணுக்கு நடத்தும் அநியாயம் சொல்லுக் கடங்காது. அதை ஏட்டில் எழுதியவர் இல்லை. அதை மன்றிலே பேசியவர் யாருமில்லை.

பறையனுக்குப் பார்ப்பானும் கறுப்பு மனுஷனுக்கு வெள்ளை மனுஷனும் நியாயம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்.

பெண்ணுக்கு ஆண் நியாயம் செய்வது அதை யெல்லாம் விட முக்கியமென்று நான் சொல்லு கிறேன்.

எவனும் தனது சொந்த ஸ்திரீயை அலக்ஷியம் பண்ணுகிறான். தெருவில் வண்டி தள்ளி நாலணா கொண்டு வருவது மேல் தொழில் என்றும், அந்த நாலணாவைக் கொண்டு நாலு வயிற்றை நிரப்பி வீடு காப்பது தாழ்ந்த தொழிலென்றும் நினைக் கிறான். பெண்கள் உண்மையாக உழைத்து ஜீவிக் கிறார்கள். ஆண்மக்கள் பிழைப்புக்காகச் செய்யும் தொழில்களில் பெரும்பாலும் பொய், சூது, களவு, ஏமாற்று, வெளிமயக்கு, வீண் சத்தம், படா டோபம், துரோகம், கொலை, யுத்தம்!

இந்தத் தொழில்கள் உயர்வென்றும் சோற்றுக்கும், துணி தோய்த்துக் கோயில் செய்து கும்பிட்டு வீடு பெருக்கிக் குழந்தைகளைக் காப்பாற்றும் தொழில் இழிவென்றும் ஆண் மக்கள் நினைக்கிறார்கள்,

வியபிசாரிக்குத் தண்டனை இகலோக நரகம்.

ஆண்மகன் வியபிசாரம் பண்ணுவதற்குச் சரியான தண்டனையைக் காணோம்.

............

பூமண்டலத்தில் துக்கம் ஆரம்பமாகிறது.

ஆணும் பெண்ணும் ஸமானம். பெண் சக்தி ஆண்...? பெண்ணுக்கு ஆண் தலைகுனிய வேண்டும். பெண்ணை ஆண் நசுக்கக் கூடாது. இந்த நியாயத்தை உலகத்தில் நிறுத்துவதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும். உங்களுக்குப் பராசக்தி நீண்ட ஆயுளும் இஷ்டகாம்ய சித்திகளும் தருவாள் என்று அந்த மிளகாய்ப் பழச்சாமியார் சொன்னார்.


(மிளகாய்ப் பழச் சாமியார் - வசனம் 714)


தேசிய இயக்கத்தால் கிளர்ச்சி பெற்ற பண் பாட்டு மறுமலர்ச்சி இயக்கத்தின் சகல துறை களிலும் பாரதியின் உரைநடை ஊடுருவி நிற்கிறது. உறங்குவோரைச் சாட்டையடி கொடுத்து எழுப்பு கிறது. ஐயமுற்றோரை ஒளிகாட்டித் தெளிவிக் கிறது. பகைவர்களைத் தருக்கத்தால் மடக்குகிறது.

புதிய கருத்துக்களை மக்களின் எளிய பேச்சுத் தமிழில் கூறுகிறது. சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக் களையும் சமூகப் புரட்சிக் கருத்துக்களையும் தமிழ் வளர்ச்சி பெறத் தமது திட்டங்களையும் பொருளுக் கேற்ற நடை வேறுபாடுகளோடு பாரதி வெளியிடு கிறார்.

மறுமலர்ச்சிக் காலத்தின் கவிதைக்கு அவர் தந்தையாயிருப்பது போலவே, உரைநடைக்கும் அவர் தந்தையாகவே விளங்குகிறார்.

**மக்கள் வெளியீடாக வெளிவந்த நா.வா.வின்**
**'உரைநடை வளர்ச்சி' நூலில் இடம்பெற்ற கட்டுரை**






காவ்யா
கால்கரை
வெ. சுடலைமுத்துத்தேவரின்
14 ஆவது நினைவு நாளில்
பேரா.நா.வானமாமலையின்
நூற்றாண்டு விழாவும்
10 நெல்லை படைப்பாளிகளின்
நூல் வெளியீட்டு விழாவும்
தலைமை : பேரா.சு.சண்முகசுந்தரம்
நூல் வெளியீட்டாளர்
முருகதாஸ் தீர்த்தபதி ராஜா
பேரா.நா.வா.வின்
நான்கு கதைப்பாடல்கள்
பேரா.நா.வா.வின்
கட்டபொம்மு கதைப்பாடல்கள்
நூல்களைப் பெறுபவர்கள்
பேரா.தோத்தாத்திரி, பேரா.நா.இராமச்சந்திரன்
நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்!
நவில் தொறும் நூல்நயம்!!
நாள் : 19.11.2017 ஞாயிறு, மாலை 5 மணிக்கு
இடம் : ஓட்டல் ஜானகிராம், நெல்லை சந்திப்பு
தொடர்புக்கு : 98404 80232
ஆசிரியர்கள் / நூல்கள் / பெறுபவர்கள்
பேரா.சு.சண்முகசுந்தரத்தின் அக்னி – நாடகம்
பேரா.சிவசு
பேரா.சு.சண்முகசுந்தரத்தின் தொகுப்பில்
காசு பிள்ளையின் உலகப் பெருமக்கள்
கவிஞர் மு.சு.சங்கர்
பேரா.சண்முகசுந்தரத்தின் தொகுப்பில்
முதல் விடுதலை வீரர் பூலித்தேவர்
பேரா.பா.வளனரசு
பேரா.சு.அழகேசனின் இலக்கிய மொழி
பேரா.சு.சுந்தரம்
பேரா.அ.கா.பெருமாளின்
இரட்டை அர்த்தங்கள் மாண்டு போகவில்லை
செந்தீ நடராசன், தொல்லியல் அறிஞர்
பேரா.சீ .சித்ராவின் இரத்தினங்கள் –ஓர் அறிமுகம்
பேரா. பா.வேலம்மாள்
பேரா. ஜெ.பி. ஜோஸபின்பாபா அன்பே பாபா –நாவல்
நாறும்பூ நாதன், எழுத்தாளர்
எழுத்தாளர் நா.நாகராஜனின் விடியும்வரை பேசலாம்
எட்வர்ட் சாமுவேல், தொழிலதிபர்
முத்தாலங்குறிச்சி காமராசுவின் நெல்லைக்கோயில்கள்
டாக்டர் ஏ.எஸ்.பால்ராஜ் – ஏ.எஸ்.பி குழுமம்
முத்தாலங்குறிச்சி காமராசுவின் சிங்கம்பட்டி ஜமீன்கதை
டாக்டர் சு.செல்லப்பா, தேசிய நல்லாசிரியர்
வரவேற்பு : டாக்டர் சு. நடராசன்
நன்றியுரை: டாக்டர் சு முருகேசன்
நூலின் மொத்த விலை : ரூ.3000/–
விழாவன்று சலுகை விலை : ரூ 2000/–
அனைவரும் வருக!



# கம்யூனிசம் - ஒரு நூற்றாண்டு வளர்சிதை மாற்றங்கள்

சி.ஆர். ரவீந்திரன்

எதையும் போற்றிப் புகழ்ந்து பாராட்டி மகிழ்வது நமது தமிழ் மரபு. அதிலிருந்து குறிப்பிடத்தகுந்த விதத்தில் மாறுபட்ட ஒரு நூலாக வெளிவந்துள்ள இந்த நூல் தமிழுக்குப் புதுமை. அக்கறை மிகுந்த ஒரு துணிச்சலான முயற்சி! உலகளாவிய அளவில் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நிகழ்ந்தவை பற்றிய சமூக அறிவியல் அடிப்படையிலான ஆய்வு நூல் என்று இதைக் குறிப்பிடலாம். திறந்த மனத் தோடும். அக்கறையோடும், துணிச்சலோடும் உருவாக்கிய உண்மைக்கு நெருக்கமாக உள்ள ஓர் அரிய நூல் இது! ஏராளமான தகவல்களைத் தகுந்த ஆதாரங்களுடன் முன்வைத்துத் தெரிவிக்கும் இந்த அரிய ஆய்வு நூல் கற்பிப்பவை பலப்பல! அர்ப் பணிப்பும், தோய்ந்த அனுபவங்களும் நிறைந்த தோழர் தா. பாண்டியன் அவர்களின் ஒரு மகத்தான சாதனை இது!

மனித வரலாற்றில் வேகமாக நிகழ்ந்த வளர்சிதை மாற்றங்கள் எல்லாமே கடந்த முந்நூறு ஆண்டுகளைச் சார்ந்தவை. நிலவுடைமை வாழ்க்கை முறை சிதைந்து முதலாளித்துவ வாழ்க்கை முறையின் வளர்ச்சி நிகழ்கின்ற காலகட்டம் இது! அதே சமயத்தில், சோசலிச வாழ்க்கை உருவானதும் இந்தச் சூழலில்தான்.

உழைப்பு, உற்பத்தி, பகிர்வு போன்றவைதான் ஒரு சமுதாய அமைப்பின் அடித்தளம். அந்த உற்பத்தி முறைகள் சார்ந்தே மக்களின் கூட்டு வாழ்க்கைக் குரிய கலாச்சாரப் பண்பாட்டு சித்தாந்தத் தத்துவங்கள் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகின்றன. சமுதாய வடிவங்களுக்குள் தனியுடைமையும், வர்க்க முரண்களும், ஏற்றத்தாழ்வுகளும், சுரண்டலும் தோன்றி வளர்ந்து விரிந்து மனித வாழ்க்கையை அவல நிலைக்கு இட்டுச் செல்லுகின்றன. அதற்கான எதிர்க்குரல்களும், எதிர்வினைகளும் வெளிப்பட்டு நிலைமைகளைச் சரி செய்யத் தொடங்குகின்றன. மனித வாழ்க்கையின் இயங்கியலே இப்படித்தான் வரலாற்றில் ஓர் உயிர்ப்பினை நிலைப்படுத்துகிறது. நெருக்கடி மிகுந்த காலந்தோறும் புதிய புதிய சிந்தனைகள் தோன்றி வரலாற்றின் தொடர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் மாமனிதர்கள் மக்களுக்குள்ளிருந்து தோன்றி வெளிப்படுகிறார்கள் என்பது தான் வரலாறு. அந்த வரலாற்று இயங்குதலில் பொதுவுடைமைக் கருத்துக்களை வடிவமைத்து நடைமுறைகளையும் அடையாளம் காட்டியவர் கார்ல் மார்க்ஸ்.

“டிரியர் மாவட்டத்தைச் சேர்ந்த டிரியர் நகராட்சி அதிகாரியின் அலுவலகத்தில் ஜனன, திருமண, மரணப் பதிவாளராகிய எனக்கு முன்னால் 1818-ஆம் வருடம் மே மாதம் 7ந் தேதியன்று பிற்பகல் 4 மணிக்கு டிரியரில் குடியுரிமைச் சான்றிதழுடைய திரு.ஹென்ரிஹ் மார்க்ஸ் (வயது 37, மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குரைஞர் தொழில்) ஆஜராகி ஒரு ஆண்குழந்தையைக் காட்டினார். அந்தக் குழந்தை வழக்குரைஞராகத் தொழில் செய்கின்ற. டிரியரில் குடியுரிமைச் சான்றிதழுடைய திரு.ஹென்ரிஹ் மார்க்சுக்கும், அவருடைய மனைவி ஹென்ரியேட்டா பிரெஸ்பார்க்குக்கும் மே மாதம் 5-ந் தேதியன்று அதிகாலையில் 2 மணிக்கு டிரியரில் பிறந்ததாகத் தெரிவித்தார். தங்களுடைய குழந்தைக்கு கார்ல் என்று பெயர் சூட்ட விரும்புவதாக அவர்கள் தெரிவித்தார்கள்.

இன்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு கார்ல் தோன்றினார். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு அவர் வகுத்த சோசலிச சமுதாயம் ரஷ்யாவில் நடைமுறைக்கு வந்தது. அதன் விளைவாக, உலகளாவிய அளவில் துன்ப துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்த உழைக்கும் மக்கள் படிப்படியாக விடுதலை பெற்றுப் புதிய உலகத்தை அவர்களுக்காகக் கட்டமைக்கத் தொடங்கினார்கள். முதல் கட்டமாக ஆங்கில, பிரெஞ்சு, அமெரிக்கக் காலனி நாடுகளாக விளங்கிய பெரும்பாலான அடிமை நாடுகள் விடுதலை பெற்றன. தன்னிச்சையாக இயங்கத் தொடங்கின. உலகளாவிய அளவில் தொடர்ந்து மாற்றங்கள் வேகமாக நிகழ்ந்தன. இப்போது, கம்யூனிஸ்டுகள் தலைமையேற்று நடத்திய வர்க்கப் புரட்சிக்கும், முதலாவது சோசலிச அமைப்புக்கும் நூறு ஆண்டுகளாகின்றன.

தொடர்ச்சியான மாற்றங்களின் பின்னணியில் கணக்கற்ற அளவில் உயிர்ச்சேதங்களும், பொருட்சேதங்களும் ஏற்பட்டன. அதன் விளைவாக மனித சமுதாயத்தில் வாய்ப்புக்களும், வசதிகளும் நிறைந்த வாழ்க்கை முறைகள் மக்களிடையே பரவலாகின. வியக்கத்தகுந்த விதத்தில் ஒரே நூற்றாண்டில் மனிதன் சார்ந்த எல்லாவிதத் துறைகளும் வளர்ச்சி அடைவதைக் காண முடிந்தது. இந்த வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தவைதான் பொதுவுடைமை இயக்கங்கள்.

“உலகம் முழுவதும் மக்கள் இயக்கங்கள் எழுச்சி பெற்ற போதும், ஜனநாயகப்பாதை மற்றும் புரட்சிப் பாதையில் செல்லும் பொதுவுடைமை இயக்கங்கள் முன்னேற்றத்தைக் காணாமல் பல பத்தாண்டுகளாகச் சரிவைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. இந்தச் சரிவு என்ற தோற்றப்பாடு உண்மைதானா என்ற கேள்வியில் தொடங்குகிறது இந்தப் புத்தகம். அடுக்கடுக்கான கேள்விகள் எழுப்பப் படுகின்றன. அவை பற்றிய விவாதங்கள் சார்புகளுடன் குறுக்கிக் கொள்ளாமல் மனிதகுல விடுதலைக்கான ஆழ்ந்த அக்கறைகளுடன் விரிந்து செல்கிறது.

“உலக, இந்தியப் பொதுவுடைமை இயக்கங்களுக்குள் மீள் பரிசீலனைகள், சுயவிமர்சனங்கள், காலத்திற்கேற்ப அணுகுமுறைகள் என வேகமாக நடைபெற வேண்டிய அவசியத்தை கவனப்படுத்தி ஆக்கபூர்வ விவாதங்களுக்கான தொடக்கப்புள்ளியாக அமைகிறது இந்நூல்.”

பதிப்புரையில் இந்த நூலின் உள்ளடக்கத்தையும், தேவையையும் புலப்படுத்தும் வகையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு அணிந்துரை வழங்கியுள்ள தோழர் ந.முத்துமோகன் இந்த நூலை நான்கு அடுக்கு களாகப் பகுத்து இதன் உள்ளடக்கத்தை எளிமை யாகப் புரிந்துகொள்ளச் செய்கிறார். அதனால், வாசிப்பு அனுபவம் தெளிவாகவும், எளிமையாகவும் உள்ளது.

அதன்படி, முதல் அடுக்கில் மார்க்சியம், சோசலிசம், சமத்துவம் ஆகியவை குறித்து சில அடிப்படையான பிரச்சனைகளைத் தோழர் முன் வைக்கின்றார். மார்க்சியம் குறித்து முன்வைக்கப் படுகின்ற ஆழமான சந்தேகங்களை இவை குறிக் கின்றன.

தொடர்ந்து இரண்டாவது அடுக்கில் ரஷ்யப் புரட்சி ரஷ்ய நாட்டில் சோசலிசம், அதன் வீழ்ச்சி ஆகியவை பற்றிய பிரச்சனைகளைத் தெளிவு படுத்துகிறார்.

அதற்குப்பின், மூன்றாவது அடுக்கில் இந்தியச் சூழல்களைப் பற்றியும், இந்தியச் சூழல்களில் கட்சித் தலைமையின் நிலைப்பாடுகள் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. கட்சி வரலாற்றின் காலம் முழுவதையும் இக்கேள்விகள் ஊடுருவி நிற்கின்றன.

கடைசியாக, நான்காவது அடுக்கில் உட்கட்சி ஜனநாயகம் குறித்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ரஷ்ய முன்மாதிரியில் அமைக்கப்பட்டது. அது, இந்தியாவின் பல மொழி பேசும் மாநிலங்கள், சாதிகள், மதங்கள், மக்களின் உணர்வுகள் போன்ற சிக்கலான சொந்த எதார்த்தங்களைக் கணக்கில் கொண்டு உருவாக்கப்படவில்லை. ஜனநாயக மத்தியத்துவம் என்பது பொருந்தாத நடைமுறை யாக ஆக்கப்பட்டுள்ளது. இவைகளே உலகப் பொதுவுடைமைப் பாதையைப் புரிந்து கொள்ள இன்றைய கட்டாயத் தேவையாக உள்ளன.

தொடக்கத்திலேயே தோழர் தா. பாண்டியன் மிகமிக முக்கியமான 41 கேள்விகளை முன் வைக்கிறார்.

"இதுவரையில் சுரண்டல் முறையையே கொண்ட சமுதாய அமைப்புக்களும், அதன் காரணமாக ஆதிக்க வர்க்கமுமே ஆளும் சக்தியாக இருந்து வருவதை மாற்றி அமைக்க வேண்டும் - மாற்ற முடியும் என்ற மனிதகுல வரலாற்றின் தவிர்க்க முடியாத இயக்க இயல் வளர்ச்சிப் போக்கின் தீர்ப்பும் ஆகும் என கார்ல் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், மாசேதுங், ஹோசிமின், பிடல் காஸ்ட்ரோ என பேரறிஞர்கள் விஞ்ஞானத்தை அடிப்படையாக வைத்து அதன் தத்துவப்படி அமைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று பலவாக வெடித்துச் சிதறிக் கொண்டிருப்பது ஏன்?"

"முதலாளித்துவம், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் வாழ்ந்து மறைகிற காலம் வரையில் பட்டறைத் தொழிலாகவே பால பருவத்தில் இருந்தது. தற்போது முதலாளித்துவம் அளவில் பெருத்திருக்கிறது. தொழில்நுட்பத்திலும் வளர்ந் திருக்கிறது. ஆகவே, நீங்கள் கூறும் இயக்க இயல் விதிப்படியே அளவு மாறுபாடு குணமாறு பாட்டை ஏற்படுத்துமா இல்லையா?"

"அன்றைய தொழிலாளி வர்க்கம் எந்த உரிமையும் இல்லாமல், வேலைவாய்ப்பும் இல்லாமல் வாடிய காலம், வதைக்கப்பட்ட பருவம். ஆனால் தற்போது பணி உறுதிக்காப்புச் சட்டம் இருக்கிறது. ஊதியமோ பல மடங்கு உயர்ந்திருக்கிறது. போனஸ் வாங்கு கிறார்கள். தொழிலாளர்களின் குழந்தைகள் பல துறைகளில் உயர் பொறுப்புக்களுக்குச் செல் கிறார்கள். ஆகவே, தொழிலாளர்களும் குண மாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர் என முடிவுக்கு வரலாமா?"

"கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஐம்பது ஆண்டுகட்கு மேலாக ஆட்சி செய்த நாடுகளிலும் மதவாத சக்திகள் பலம் பெற்றது எப்படி?"

"சீன நாடு தற்போது கடைப்பிடித்துவரும் கலப்புப் பொருளாதாரக் கொள்கையை எவ்வாறு மதிப்பிடுவது?"

"அதே வழிமுறையை இந்தியாவில் கடைப் பிடிப்பதை எதிர்ப்பது ஏன்? அதை ஏற்கும் இதர கட்சிகளை விமர்சனம் செய்வது ஏன்?"

"சமுதாய வளர்ச்சிக்கான கம்யூனிஸ்டுக் கட்சியின் இன்றைய நிலை என்ன?"

இதுபோன்ற கேள்விகளை முன்வைத்து அவற்றிற்கு விடை காணும் வகையில் தங்குதடை யில்லாத தாராளமான தன்னிச்சையான ஆய்வு களை வரலாற்று இயங்கியல் கண்ணோட்டத்தில் தோழர் மேற்கொள்கிறார். அதற்கு, ஆதாரமாக ஏராளமான தகவல்களையும், தடயங்களையும் முன்வைத்து விளக்கம் அளிக்கிறார்.

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் சமுதாய இயங்கியலை ஆய்வு செய்வது அறிவியலுக்கு உகந்ததாக உள்ளது. இங்கிலாந்தில் தொடங்கிய

தொழில்புரட்சியைத் தொடர்ந்து தோன்றிய முதலாளித்துவத்தின் இன்றைய வளர்ச்சி வரை நிகழ்ந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றை விளக்குகிறார்.

"முதலாளித்துவ அமைப்பின் மூலம் உற்பத்தி செய்யப்படுவதில் வரும் உபரி இலாபத்தை மூலதனம் போட்ட ஒருவர் அபகரித்துக் கொள்கிறார். உபரி மதிப்பை உற்பத்தி செய்யப் பாடுபட்ட பாட்டாளி களுக்கு கூலி என்ற பெயரால், அவர்கள் பெருக்கிய மதிப்பில் ஒரு சிறு தொகை மட்டுமே தரப்படுகிறது. அன்று முதல் இன்றுவரை முதலாளிகள் இதற்குக் கூறும் விளக்கம் என்னவென்றால்

1. தொழிற்சாலை கட்ட நிலம் வாங்கியது நான்.
2. அதன் மீது தொழிற்சாலைக்கான கட்ட மைப்பை உருவாக்கியது நான்.
3. உற்பத்தி செய்யும் கருவிகளை, இயந்திரங் களை வாங்கிப் பொருத்தியதும் நான்.
4. சரக்கு உற்பத்தி செய்ய மூலப் பொருட் களை சேகரித்துக் கொண்டு வந்து சேர்த்ததும் நான்.
5. அது சரக்கான பிறகு விற்றுப் பணம் பெறுகிறபோது நான் இதுவரை செல வழித்த பணத்துக்கு உரிய வட்டியை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அரசாங்கம் விதிக்கும் வரிகளையும் கட்ட வேண்டியிருக்கிறது. நிர்வாகம், விளம்பரம், விற்போருக்கு சன்மானம் என்பதோடு இந்தியா போன்ற நாட்டில் ஆளும் கட்சியினருக்கும், கத்தி காட்டி மிரட்டும் முரடர்களுக்கும் கப்பம் கட்ட வேண்டியிருக்கிறது, ஆகவே, தொழிலாளிகள் எட்டு மணிநேர வேலை செய்தால், நான் பதினான்கு மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது."

இவ்வாறு முதலாளித்துவத்தின் சார்பில் முன்வைக்கப்படும் நியாயங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நடைமுறையில் காணப்படும் பிரச்சினைகளை ஆய்வு செய்கிறார்.

"நாம் இப்போது எழுதுவது முடிந்த முடிவான கருத்து அல்ல! உண்மையைக் கண்டறிய என் உள்ளத்தில் எழும் எண்ணங்களை, கேள்விகளை உங்களோடு பகிர்ந்து கொண்டு விவாதிக்கவே விரும்புகிறேன்!"

இது குறித்து தன்னுடைய முயற்சியையும், நோக்கத்தையும் வெளிப்படையாக தோழர் தெரி விக்கிறார். இந்தியாவில் இடதுசாரி இயக்கம் தோன்றிய பின்னணியை இவர் தெளிவுபடுத்து கிறார்:

"இந்தியாவில் அரசியல் கட்சிகள் அமைக்கப் பட்டு இயங்கத் தொடங்கியது 1858-ஆம் ஆண்டி லிருந்து தான். அதுவும் ஹியூம் என்ற வெள்ளை யரால், படித்து ஆங்கிலம் பேசக்கூடிய இந்தியர் களை மட்டும் திரட்டி சமூகப் பிரச்சினைகள் பற்றிப் பேசுகிற ஒரு 'மன்றம்' போலத்தான் தொடங்கப் பட்டது. அந்த மன்றத்தில் கூடியோர் மக்களின் கோரிக்கைகளை ஆளும் பொறுப்பில் இருந்த வெள்ளை அதிகாரிகள் தீர்த்து வைத்து உதவும்படி கேட்டு மனுக்களை சமர்ப்பித்து வந்தனர். காலப்





**பொதுவுடைமையரின் வருங்காலம்?**

ஆசிரியர்: தா.பாண்டியன்

**வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.,**
**அம்பத்தூர், சென்னை - 600 098**
**தொடர்புக்கு : 044 - 26251968**
**விலை: ₹ 250/-**

போக்கில் இங்கிலாந்து சென்று படித்துத் திரும்பிய இந்தியர்களில் சிலர் அரசியல் பற்றியும் அங்கு பேசத் தொடங்கினர். உதாரணமாக, தாதாபாய் நௌரோஜி, அரவிந்தர் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

"1857-இல் அந்நிய ஆட்சியை எதிர்த்து மன்னர்கள் - மகாராணிகள் (ஜான்சிராணி லட்சுமி பாய்) நடத்திய பெரும் போராட்டங்கள் அரசியல் கட்சிகள் என்ற பெயர் இல்லாமலே நடந்தன. அதைத்தான் இந்தியாவில் சுதந்திரத்திற்கான முதல் போர் என மார்க்ஸ் எழுதியுள்ளார். அதை ஆங்கிலேயர்கள் 'சிப்பாய்க் கலகம்' என்று மட்டும் வர்ணித்தனர். அந்தப் போரில் இந்து, முஸ்லிம், சீக்கியர் என்ற வேறுபாடில்லாமல் அந்நிய ஆட்சி எதிர்ப்பு என்பதில் இந்தியர்கள் அனைவரும் ஒன்றுபட்டும் போராடியதையும் மார்க்ஸ் எழுதி யுள்ளார்.

இதுபோலவே, உலகளாவிய அளவில் முறை யான ஆதாரங்களை முன்வைத்து மனித சமுதாய வளர்ச்சியை இவர் அடையாளப்படுத்துகிறார். அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி போன்றவற்றின் வளர்ச்சியை இனம் காண் கிறார்.

முதலாவது மற்றும் இரண்டாவது உலகப் போர்கள் நிகழ்ந்ததற்கான அரசியல், பொருளாதார, சமுதாயச் சூழல்களையும், சுருக்கமாகவும், தெளி வாகவும் விளக்குகிறார்.

சோவியத் யூனியனின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் உலகளாவிய அளவில் அது நிகழ்த்திய மாற்றங்களையும் சாதனைகளையும் வியக்கத்தகுந்த விதத்தில் காரண காரியங்களோடு புலப்படுத்துகிறார்.

"சோவியத் மக்கள் மூன்று கோடிப்பேர் உயிரைப் பறிகொடுத்து, நாஜி எனும் இனஆதிக்க - ஆரியக் கொள்கையைக் குழிதோண்டிப் புதைத்த தால் மனிதகுலமே விடுதலை கீதம் பாட முடிந்தது" என்பதையும் இவர் இனம்காட்டுகிறார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்தை இவர் குறிப்பிடத் தவறவில்லை. "கடந்த 1925 டிசம்பர் 26, 27 ஆகிய நாட்களில் உத்தரப் பிரதேசத்தில் உள்ள கான்பூரில், ஒரு சிறிய அறையில் (வெங்காயக் கிடங்கு) இரகசியமாகத்தான் நிறுவன மாநாடு நடத்தப்பட்டது. அங்குதான், கட்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி எனப் பெயர் சூட்டப்பட்டது. செங்கொடியில் அரிவாள், சுத்தியல், மூலையில் நட்சத்திரம் பொறித்த கொடி என்பதும் தீர்மானிக்கப் பட்டது."

"நிறுவன மாநாட்டிலேயே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, உலக கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒரு அங்கம் என அறிவிக்கப்பட்டது. அதாவது, இந்திய நாட்டுக்கு மட்டுமான கட்சி (இயக்கம்) அல்ல" என்பது அறிவிப்பாக வந்தது.

அதைத் தொடர்ந்து விடுதலை பெற்ற இந்தி யாவில் கம்யூனிஸ்டுக் கட்சியின் திட்டங்களும், நடைமுறைகளும் மக்களுடைய வாழ்க்கையில் நிகழ்த்திய மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் தகுந்த குறிப்புக்களோடு வெளிப்படுத்துகிறார். அதே சமயத்தில் கம்யூனிஸ்டுகளின் ஒப்பற்ற தியாகங்களையும் நினைவு கூர்கிறார்.

இந்திய விடுதலைக்குப் பிறகு நிகழ்ந்த தேர்தல் களில் அரசியல் கட்சிகளின் வெற்றி தோல்வி களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். அதில், ஜன நாயகத்தை ஏற்றுக்கொண்ட இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வெற்றி தோல்விகளைச் சுட்டிக் காட்டு கிறார்.

உலகளாவிய அளவில் சோவியத் யூனியன் மற்றும் சீனாவின் உறவுகளுக்கிடையில் நிகழ்ந்த பிளவுகள் உலகக் கம்யூனிஸ இயக்கங்களைப் பிளவு படுத்திய செய்திகளை முன்வைத்து அதற்கான காரண காரியங்களை விளக்குகிறார். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து ஒரு பிரிவினர் தத்து வார்த்த அடிப்படையில் பிரிந்து சென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் இயங்கத் தொடங்கினர். அவற்றின் விளைவுகளையும், எதிர்க் கட்சிகளின் நடைமுறைகளையும் இவர் ஆய்வுக்கு உள்ளாக்குகிறார். இந்தியாவின் புதிய வளர்ச்சியையும் இவர் கணக்கில் எடுத்துக்கொண்டே விரிவான ஓர் ஆய்வை நிகழ்த்துகிறார்.

"ஒரு ஆட்சியும், கட்சியும் 1990இல் சோவியத் யூனியனில் வீழ்ச்சியடைந்தது பலரையும் அதிர வைத்தது. 1917இல் உலகையே எழுப்பி நிறுத்திய காலம் மாறி 1990-இல் அனைவரையும் கலங்க வைத்துப் பல கேள்விகளையும் எழுப்பி விட்டிருக்கிறது."

"1990 - தொடங்கி 1994க்குள் சோவியத் ஒன்றியம் ஜெர்மன் குடியரசு, செக், யுகோ, போலந்து, ஹங்கேரி, அல்பேனியா, பல்கேரியா, ருமேனியா ஆகியவற்றில் ஆட்சி நடத்தி வந்த கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஆட்சிப் பொறுப்பை இழந்தன. கட்சிக்

கட்டமைப்பையும் நிலைகுலைய விட்டன. இதனால், எழுப்பப்படும் கேள்விகள் பலவாக இருப்பினும் மிக முக்கியமான கேள்விகளுக்கு மட்டும் விடை காண முயல்வோம்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு, நவீன காலனியாதிக்கம் உலகமயமாதல், தாராளமய மாதல், புதிய தொழில்நுட்பம் போன்ற கருத்துக் களின் வாயிலாக புத்துயிர் பெற்று வளர்கிறது.

ஒரு புதிய சூழலில் இயங்கிக் கொண்டிருக்கும் உலகில் கம்யூனிஸம் குறித்த கேள்விகளை பிடல் காஸ்ட்ரோவின் முன்வைத்து அவருடைய கருத்துக் களை அறிந்து அவற்றை ஒரு பேட்டியாக இந்த ஆய்வு நூலில் இணைத்திருக்கிறார் தோழர்.

“புரட்சிகர விழிப்புணர்வும், புரட்சிகரக் கொள்கைகளும், புரட்சிகர வழிமுறைகளும் இல்லாமற் போனதுதான் ஐரோப்பிய சோசலிச நாடுகளை நாசமாக்கியது. நான் அப்படித்தான் நம்புகிறேன்” என்ற ஒரு முடிவுக்கு வருகிறார் பிடல் காஸ்ட்ரோ.

இந்நிலையில் தோழர் தா. பாண்டியன் சாராம்சமாக ஒரு சில கருத்துக்களை உறுதியுடன் முன்வைக்கிறார்:

“எனவே, கம்யூனிசத்திற்கு வருங்காலம் உண்டா? இனியும் அது தேவையா? என்று கேட்போர் அதை மாற்றி மனித குலத்திற்கு வருங்காலம் உண்டா? உண்டெனில் அதைச் செய்யப் போவது யார்? எனத் தேடிக் கூற வேண்டும்.”

“செல்வம் உற்பத்தியாக உதவும் மூலத் தாய் இயற்கை. அது வடிவம் பெற உதவுவது மனித உழைப்பு. இந்த இருவரையும் விடுத்து உழைப் போடு, உற்பத்தியோடு சம்பந்தம் இல்லாத மூன்றாவது சக்தியான முதலாளி எவ்வாறு எப் போது, செல்வத்திற்குச் சொந்தக்காரன் ஆனான்?”

“எனவே, சமுதாய மாற்றத்தை விஞ்ஞானக் கண்கொண்டு மதிப்பிட வேண்டும். சாமியாரிசப் பார்வை கூடாது. இந்த வகையில், மனித குலம் முன்னோக்கி முன்னோக்கியே முன்னேறி வருகிறது. அது என்றும் பின்னோக்கிப் போனதுமில்லை; அது போகவும் போகாது.”

அறிவியல் கண்ணோட்டத்துடன் ஆழமாகவும், விரிவாகவும் ஆய்வு செய்து வெளியிடப்பட்டுள்ள இந்த அரிய ஆய்வு நூல் ஓர் அருமையான தகவல் களஞ்சியம். ●



கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியில்
29-11-2017 முதல் 1-12-2017 வரை புத்தகக் கண்காட்சி நடைபெற்றது.
கல்லூரிச் செயலர் டாக்டர் சி.ஏ.வாசுகி அவர்கள் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.
கல்லூரி முதல்வர் டாக்டர் வி.பாலசுப்பிரமணியம் மற்றும்
கல்லூரி நூலகர் டாக்டர் ஆர். செந்தில்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

# கோவையில் நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழாவில் 'பாரதியின் கீர்த்தியும் மூர்த்தியும்' நூல் வெளியீட்டு விழா




இந்திய கலாச்சார நட்புறவுக் கழகமும் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றமும் இணைந்து நடத்திய நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா நவம்பர் 19 அன்று கோவை பீளமேடு பாலன் நகரில் கண்டியப்பன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் ரஷ்யப் புரட்சி குறித்த கருத்தரங்க அமர்வுகள் நடைபெற்றன. நிறைவாக ஆர்.கே.கண்ணன் எழுதிய 'பாரதியின் கீர்த்தியும் மூர்த்தியும்' என்ற நூல் வெளியிடப்பட்டது. நிகழ்ச்சிக்கு இஸ்கப் மாநிலப் பொதுச் செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் தலைமை ஏற்றார். எழுத்தாளர் முனைவர் மா.நடராசன் வரவேற்றுப் பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் வி.எஸ்.சுந்தரம் வாழ்த்துரை வழங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் தா.பாண்டியன் அவர்கள் நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், டாக்டர் ஆர். வசந்தன், பூஜா, ஜி.பழனிச்சாமி. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிழக்கு மண்டலச் செயலாளர் எஸ்.சண்முகம், ப.பா.உதயச்சந்திரன். எழுத்தாளர் அமரந்தா. ஜீவா தாசன். வி.வெள்ளிங்கிரி, சாந்தி வெங்கடேசன் ஆகியோர் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.


தா.பாண்டியன் அவர்கள் தனது நிறைவுரையில் நவம்பர் புரட்சியின் வரலாற்றுச் சிறப்புகளையும் மார்க்சியக் கோட்பாட்டு அடிப்படைகளையும் அதன் தவிர்க்கவியலாத தன்மைகளையும் விளக்கிப் பேசினார். நூலின் தொகுப்பாசிரியரான இளசை மணியன் அவர்கள் ஆர்.கே.கண்ணனின் பதிப்பிக்கப்படாத எழுத்துகள் குறித்து பேசினார். பொ.கைலாசமூர்த்தி எழுச்சி பாடல்களைப் பாடினார்.

இஸ்கப் மாநிலப் பொருளாளர் எஸ்.கோட்டியப்பன் நன்றி கூறினார்.

# நியூ செஞ்சுரியின்
# ரஷ்ய இலக்கிய நூல்கள்





₹ 400/-




₹ 60/-




₹ 550/-





₹ 550/-

# சோசலிசத்திற்கு ஓர் அறிமுகம்

கற்பனையிலிருந்து அறிவு இயல் வரை
சோசலிசத்தின் படிமலர்ச்சி

**க. காமராசன்**






**எ**ங்கெல்ஸ் எழுதிய Socialism: Utopian and Scientific என்று ஆங்கில மொழியில் தலைப்புடைய நூல் சுமார் 50 அல்லது 60 பக்கங்கள் உடைய சிறுநூல். இச்சிறுநூல் உலகம் முழுவதும் மிகவும் நன்கு அறியப்பட்ட நூல். மார்க்சியம் குறித்த சிறு அறிமுகம் கொண்டவரும்கூட இந்நூலை அறிவார்கள். மார்க்ஸ்-எங்கெல்ஸ் எழுத்துகளுக்குள் நுழைவதற்கு இந்நூல்தான் நுழைவாயில்.


இந்த நூல் முதலில் எழுதப்பட்ட மூலமொழியில், அதாவது ஜெர்மன் மொழியில் வெளிவரவில்லை; மார்க்ஸ்-எங்கெல்ஸ் போதித்த சோசலிசம் பற்றிய தொழிலாளர்களுக்கான ஒரு அறிமுகப் பிரசுரம் வெளியிட வேண்டும் என்ற நோக்கில், பால் லபார்க்கின் பிரெஞ்சு மொழியாக்கம்தான் 1880ஆம் ஆண்டு முதலில் வெளிவந்தது; அறிமுகச் சிறுவெளியீடு என்ற காரணத்தாலேயே, அடுத்தடுத்து உடனே ஜெர்மன், போலிஷ், இத்தாலி, ருஷ்ய, டேனிஷ், டச்சு, ருமேனிய, ஆங்கிலம் உள்ளிட்ட ஐரோப்பிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு, பல பதிப்புகள் வெளிவந்தன. "எனக்குத்

தெரிந்தவரை வேறு எந்த சோஷலிச நூலும், 1848ஆம் ஆண்டின் எங்களது கம்யூனிஸ்டு அறிக்கையோ அல்லது மார்க்சின் மூலதனமோ கூட, இவ்வளவு அதிகமாய் மொழிபெயர்க்கப்பட்டிருக்கவில்லை" என்று 1892ஆம் ஆண்டு ஆங்கில மொழிப் பதிப்பின் முன்னுரையில் எங்கெல்ஸ் எழுதியுள்ளார். இக்கூற்று மார்க்ஸ்-எங்கெல்ஸ் எழுத்துகளிடையே இந்நூலின் பிரபலத் தன்மையையும் வெகுசனத் தன்மையையும் புரிந்துகொள்ள உதவும்.

ஜெர்மனியில் மட்டும் இந்நூல் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு பத்தாண்டுகளில், நான்குப் பதிப்புகளில் 20,000 படிகள் அச்சிடப்பட்டன என்று எங்கெல்ஸ் கணக்குத் தருகின்றார். அமெரிக்காவில் 1900-1908ஆம் ஆண்டுகளுக்குள் வெளியான ஆங்கிலப் பதிப்பில் 30,000 படிகள் விற்றுத் தீர்ந்தன என்று சிகாகோ சார்ளஸ் எச்.ஹெர் புத்தக நிறுவனம் வெளியிட்ட 1914ஆம் ஆண்டுப் பதிப்பாளர் குறிப்பு கணக்குச் சொல்கிறது. இந்தக் கணக்குகள் ஒரு மாதிரிக்குத்தான். இதுவரை காலம், இந்நூல் உலகம் முழுவதும் பல கோடிக் கணக்கான படிகள் அச்சிடப்பட்டிருக்கும்.

### ஒரு புத்தகத்திலிருந்து ஒரு சிறுவெளியீடு

இவ்வாறெல்லாம் கூறுவதால், இச்சிறுநூல் "கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை" போன்று திட்டமிட்டு எழுதப்பட்ட பிரசுரப் பாங்கிலானது என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. 'டூரிங்குக்கு மறுப்பு' என்ற வாதப் பெருநூலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சிறுநூல். இதனைச் செய்தவர் மார்க்சின் மருமகன் பால் லபார்க்.



பால் லபார்க்

மார்க்சின் இரண்டாவது மகள் லாராவை மணந்தவர் பால் லபார்க்; பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். மார்க்ஸ்-எங்கெல்ஸ் உருவாக்கிய சோசலிசத் தத்துவத்தைப் பிரான்சு நாட்டுத் தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் ஒரு சிறுவெளியீடு கொண்டுவர எண்ணினார். இவ்வெளியீடு கொண்டுவர எண்ணிய காலம் 1880. பாரிஸ் கம்யூன் தோல்விக்குப் பிறகு பிரான்சு நாட்டுச் சோசலிஸ்டுகள் ஆசுவாசப்படுத்திக் கொண்டு, மீண்டும் வேலை செய்யத் தொடங்கிய நேரம். பாரிஸ் கம்யூனிலும் சரி, அதற்கு முன்பும் பின்பும் சரி, பிரெஞ்சு சோசலிஸ்டு களிடையே மார்க்சியம் மிகக் குறைந்த அளவுக்கே செல் வாக்குப் பெற்றிருந்தது. இதற்காகவே மார்க்சியம் குறித்து ஓர் அறிமுகப் பிரசுரம் கொண்டுவர எண்ணினார். இந்த வேளையில் இப்படியொரு பிரசுரம் எழுத நேரம் ஒதுக்க முடியாத அளவுக்கு மார்க்சும் எங்கெல்சும் வேலைப் பளுவால் அழுந்தி இருந்தனர். அதனால் எங்கெல்ஸ் எழுதிய வாதப் பெருநூலிலிருந்து இச்சிறுநூலை லபார்க் பிரித்தெடுத்தார்.

அவ்வாதப் பெருநூல் மார்க்சுக்காக எங்கெல்ஸ் மேற்கொண்ட ஒரு பணி ஆகும். அதாவது, பாரிஸ் கம்யூன் தோல்வியுற்ற 1870ஆம் ஆண்டுகளில் ஜெர்மன் சோசலிஸ்டுகளிடையே மார்க்ஸ்-எங்கெல்ஸ் உருவாக்கிய சோசலிசத் தத்துவத்தை விமர்சனம் செய்து பெர்லின் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஓய்கேன் டூரிங் 1870களில் பல நூல்களை வெளியிட்டார். இந்நூல்கள் ஓரளவுக்கு ஜெர்மன் சோசலிஸ்டுகளிடையே தாக்கம் செலுத்தவும் செய்தன. இதனை ஜெர்மன் சோசலிஸ்டுகளில் இருந்த மார்க்சியக் குழுவினர் மார்க்ஸ்-எங்கெல்ஸ் கவனத்துக்குக் கொண்டுவந்து, டூரிங்குக்கு எதிராக வாதப் போர் தொடுக்க வலியுறுத்தினர். இவ்வேலையைச் செய்யும் அளவுக்கு நேரமில்லாமல் மூலதனம் நூலின் அடுத்தடுத்த தொகுதிகளின் வேலைகளில் மார்க்ஸ் ஈடுபட்டிருந்தார். அப்போதுதான் தொழிற்சாலை முதலாளி என்ற வாழ்க்கையிலிருந்து வெளியேறி, மீண்டும் முழுநேரம் பொதுவுடைமை இயக்க அரசியல்-அறிவுசார் பணிக்கு எங்கெல்ஸ் திரும்பி இருந்தார். மார்க்சும் எங்கெல்சும் பகிர்ந்து கொண்ட வேலைத்திட்டத்தின்படி, தத்துவத் துறையில் "இயக்க இயல்" பற்றி ஒரு பெருநூல் எழுது வதற்கான வேலைகளை எங்கெல்ஸ் மேற்கொண் டிருந்தார். மார்க்ஸ் எங்கெல்சை டூரிங்குக்கு மறுப்பு எழுதும்படி வேண்டிக் கொண்டார். அவரின் வேண்டு கோளின்படி, எங்கெல்ஸ் தன் வேலைகளை இடை நிறுத்தம் செய்துவிட்டு, சள்ளைப் பிடித்த வாதப்போரில் இறங்கினர்.

எங்கெல்சின் டூரிங்கு எதிரான வாதப் போர் கட்டுரைத் தொடராக வெளிவந்து, பின்னர் நூலாக 1878-ல் வெளியிடப்பட்டது. இந்நூலை வாசித்த பால் லபார்க், மார்க்சியம் குறித்து பிரெஞ்சுத் தொழிலாளர் களுக்கான அறிமுகமாகக் கொண்டுவர எண்ணியிருந்த சிறுவெளியீடு இவ்விவாதப் பெருநூலில் இருப் பதைக் கண்டுகொண்டார். இதுகுறித்த எண்ணத்தை எங்கெல்சிடம் தெரிவித்து, குறிப்பிட்ட பகுதிகளை எங்கெல்சிடம் ஒழுங்கு செய்துதரக் கோரினார். எங்கெல்ஸ் ஒழுங்கு செய்து தந்த பின் பிரெஞ்சில் மொழியாக்கம் செய்து, சோசலிச ஆய்வேடு இதழில் தொடராகவும் பின்னர் நூலாகவும் லபார்க் வெளி யிட்டார்.

### நட்பின் வெளிப்பாடாக அறிமுகத்திற்கு ஓர் அறிமுகம்

இவ்விடத்தில் ஒரு விசயம் கவனம் கொள்ளத் தக்கது. இச்சிறுநூல் பிரெஞ்சு மொழியில் நூலாக வெளிவந்த போது எங்கெல்ஸ் குறித்தும், அவருடைய பணிகள் குறித்தும், அவர் எழுதிய அச்சிறுநூலின் முக்கியத்துவம் குறித்தும் ஒரு சுருக்கமான, ஆனால் கனம் மிகுந்த அறிமுகக் குறிப்பு லபார்க்கின் பெயரில், 1880ஆம் ஆண்டு பிரெஞ்சுப் பதிப்பில் வெளியானது. வெகுகாலம் இக்குறிப்பு லபார்க் எழுதியாகவே கருதப்பட்டு வந்தது. 1950ஆம் ஆண்டுகளில் நடந்த மார்க்ஸ்-எங்கெல்ஸ் முழுஆக்கத் திரட்டு ஜெர்மன் மொழிப் பதிப்புப் பணி மேற்கொள்ளப்பட்ட காலத்தில்தான் லபார்க்குக்கு மார்க்ஸ் அனுப்பிய கடிதங்களிடையே, மார்க்சின் கையெழுத்தில் இந்த அறிமுகக் குறிப்பும் கிடைத்தது. பின்னர்தான் இது மார்க்ஸ் எழுதியது என்று உலகுக்குத் தெரியவந்தது.

இதிலென்ன விசேசம் என்கிறீர்களா? 1870ஆம் ஆண்டில் எங்கெல்ஸ் முழுநேரப் பொதுவுடைமை அரசியலுக்குத் திரும்பி வந்த போது, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் 1840களில் எங்கெல்ஸ் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரி ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. எங்கெல்சைப் பலர் ஒரு முதலாளி என்றே பார்த்தனர்; புறம் பேசினர். பாரிஸ் கம்யூன் தோல்விக்குப் பிறகு, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்திற்குள் மார்க்சின் எதிராளிகள் பலர், எங்கெல்ஸ் என்ற முதலாளியுடன் சேர்ந்துகொண்டு இயக்கத்திற்குத் துரோகம் இழைப்பதாக நேரடியாகவும் புறம்பாகவும் மார்க்சைப் பழி பேசித் திரிந்தனர். இப்பேச்சுகள் எங்கெல்சைவிட மார்க்சுக்கு அதிகத் துன்பத்தை ஏற்படுத்தின. 'தான் மூலதனம் நூல் ஆய்வுப் பணியை சிரமமின்றி மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே தன் நண்பன் தொழிற்சாலையை நிர்வகிக்கும் பணிக்குத் திரும்பினான். அதனால் இப்படி ஒரு அவப்பெயருக்கு ஆளாகிவிட்டானே' என்று மார்க்ஸ் மருகினார். அதனால்தான் இந்தக் கனமான அறிமுகக் குறிப்பைத் தம் நண்பன் குறித்து மார்க்ஸ் எழுதினார் போலும். இதுமட்டுமில்லாமல் இச்சிறுநூல் வெளிவருவதற்கு லபார்க் மட்டுமில்லாமல், மார்க்சும் ஆர்வம் காட்டி யுள்ளார் எனவும் இக்குறிப்பின் மூலம் தெரிய வருகின்றது. இச்சிறுநூல் "அறிவார்ந்த சோசலிசத்திற்கு மிகச்சிறந்த அறிமுகம்" என்று மார்க்ஸ் எழுதினார். மார்க்சின் சொற்கள் பலித்துவிட்டன. உலகப் பொது வுடைமை இயக்கத்தில் இன்றுவரை இச்சிறுநூல் மிகச் சிறந்த அறிமுக நூலாக விளங்குகின்றது.


### அறிமுகம் ஆழமாகுதல்

இச்சிறுநூலுக்குப் பிரெஞ்சு மொழி பேசும் உலகில் கிடைத்த பெரும் வரவேற்பை எங்கெல்ஸ் எதிர் பார்க்கவில்லை. இப்பெரும் வரவேற்பைக் கண்டுதான், எங்கெல்ஸ் ஜெர்மன் மொழியில் வெளிக்கொணரத் தூண்டுதல் பெற்றார். சோசலிச ஜனநாயகம் இதழ் ஆசிரியர் குழு, ஜெர்மன் தொழிலாளர்களுக்குத் துண்டு வெளியீடு எழுதித் தருமாறு கேட்ட போது, உடனே இந்நூலை எங்கெல்ஸ் கொடுத்தார். ஆனால் 1850களில் மார்க்சும் எங்கெல்சும் சிந்தித்தது போல இப்போது சிந்திக்கவில்லை. இப்போது அவர்களின் சிந்தனையில் பொருளாதாரம், அரசியல், தத்துவம் சார்ந்த பிரெஞ்சு, ஆங்கில மொழிக் கலைச்சொற்களும், புதிதாக அவர் களாகவே உருவாக்கிக் கொண்ட கலைச்சொற்களும் வந்து சேர்ந்திருந்தன. இது ஜெர்மன் வாசகர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் என எங்கெல்ஸ் நினைத்தார். இச்சிறுநூலின் முதலாவது ஜெர்மன் பதிப்புக்கு முன்னுரையில் எங்கெல்ஸ் பின்வருமாறு தன்னைத் தானே கேட்டுக்கொண்டார் : "முழுமையும் அறிவுத் துறைச் சார்ந்த இப்படைப்பு வெகுசன பிரச்சாரத்திற்கு எவ்வாறு பொருத்தமுடையதாக இருக்கும்? வடிவத் திலும் உள்ளடக்க அளவிலும் என்ன மாற்றங்கள் தேவைப்படுகின்றன?". இதற்கு ஒரு வெகுசன பிரசுரம் எழுதும்போதும், துறைசார்ந்த கலைச்சொற்கள், அதுவும் அயல்மொழிக் கலைச்சொற்கள் இடைவந்தால், தவிர்க்க முடிகின்ற அளவுக்கு அயல்மொழிக் கலைச்சொற்களைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்கிறார். ஆனால் கலைச்சொல் மொழியாக்கம் பொருளுணர்ச்சியைச் சிதைக்கக் கூடாது என்கிறார். இச்சிறுநூலில் ஜெர்மன் வாசகர்களைக் கவனத்தில் கொண்டு சில சிறு மாற்றங்களையும் செய்தார்.

இவ்வாறு செய்த மாற்றங்களில் மிக முக்கியமான மாற்றம் "மார்க்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி பின்னிணைப்பாகச் சேர்த்தது ஆகும். இந்தக் கட்டுரை ஜெர்மன் உழவர்கள், நில உறவு, குறிப்பாக ஜெர்மனியில் நிலத்தில் நிலவிய கூட்டுடைமை வடிவங்கள் பற்றிய வரலாற்று விவரணை ஆகும். 1870களுக்குப் பிறகு மார்க்சும் எங்கெல்சும் தொழிலாளர்களுக்கு அப்பால், உழவர்களிடையிலும் பொதுவுடைமை இயக்கம் செல்

வாக்குப் பெற வேண்டியதன் அவசியத்தை அதிகமாக வலியுறுத்தி வந்தனர்; தொழிலாளர், உழவர்கள் கூட்டணி ஏற்பட்டால்தான் முதலாளியத்தை வெற்றிகொள்ள இயலும், ஆகவே இதற்காகக் கொள்கை நிலைப்பாடு களையும் செய்ய வேண்டிய நடைமுறை வேலை களையும் வகுத்தளித்தனர். இப்பணியின் ஒரு பகுதியாக "மார்க்" பற்றிய கட்டுரையை எங்கெல்ஸ் எழுதிச் சேர்த்தார். உழவர்கள் குறித்த "அறிவு" தொழிலாளர் இயக்கத்தில் பரவ வேண்டும் என எங்கெல்ஸ் விரும்பினார். எங்கெல்ஸ் இறப்புக்குப் பிறகு வெளிவந்த ஆங்கிலப் பதிப்புகளில் இக்கட்டுரை சேர்க்கப்பட வில்லை; தனிச் சிறுநூலாக வெளியிடப்பட்டது.

இச்சிறுநூலின் நான்காவது ஜெர்மன் பதிப்பு மற்றொரு முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது. அது லெனின் ஏகாதிபத்தியம் என்ற கோட்பாட்டை உருவாக்குவதற்கு இருபதாண்டுகளுக்கு முன்னமே, அக்கோட்பாட்டை எங்கெல்ஸ் முன்னூகித்தது ஆகும். 1891ஆம் ஆண்டு இச்சிறுநூலின் நான்காம் பதிப்பில் செய்துள்ள மாற்றத்தைப் பற்றி முன்னுரையில் கூறும் போது, "இக்காலத்தில் 'டிரஸ்ட்கள்' ஒரு முக்கியமான புதிய உற்பத்தி வடிவமாக தோன்றியுள்ளது பற்றியும்




மிகச் சுருக்கமாக விவரித்துள்ளேன்" என்று முதலாளிய உற்பத்திமுறையின் ஏகாதிபத்தியக் கூறுகளின் தோற்றக் காலத்திலேயே அவற்றை அடையாளம்கண்டு கூறினார்.

இச்சிறுநூலின் ஆங்கில மொழியாக்கம் 1892ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலுக்கு மிக விரிவான அறிமுகம் ஒன்றை ஆங்கிலத்தில் எங்கெல்ஸ் எழுதினார். நவீன பொருள்முதல்வாதத்தின் வரலாறு இங்கிலாந்திலிருந்து தான் தொடங்குகிறது, ஆனால் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் சொல்லைக் கேட்டாலே ஆங்கில மேற் குடியினர் ஏன் குமட்டுகின்றனர் என்று ஐரோப்பிய தொழிலாளர் இயக்க வரலாற்றின் பின்னணியில் ஐரோப்பிய தத்துவச் சிந்திப்பு வரலாற்றை எங்கெல்ஸ் மற்றுமொரு கோணத்தில் படம்பிடித்துக் காட்டுகிறார். இந்த அறிமுகவுரை 1892-93ஆம் ஆண்டுகளில் புதிய காலம் இதழில் ஜெர்மன் மொழியில் "வரலாற்றுப் பொருள்முதல்வாதம்" என்ற தலைப்பில் வெளிவந்தது. உண்மையில், இந்த அறிமுகவுரை வரலாற்றுப் பொருள் முதல்வாதத்திற்கு மிகச் சிறந்த அறிமுகம் ஆகும். அதனால்தான் இதுவும் பின்னர் சிறுபிரசுரமாக ஆங்கிலத்தில், இன்னும் பல ஐரோப்பிய மொழிகளிலும் கடந்த நூற்றாண்டு முழுவதும் வெளியிடப்பட்டது. இப்படி இச்சிறுநூலின் மூலக்கதை பல கிளைக் கதை களாக விரிந்து செல்லும் பாங்குடையது.

**இரண்டு தமிழ் மொழியாக்கங்கள்**

இச்சிறுநூலுக்கு இரண்டு தமிழ் மொழியாக்கங்கள் உள்ளன. முதலாவது மொழியாக்கத்தை 1957 ஆம் ஆண்டு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் "கற்பனா சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்" என்ற தலைப்பில் வெளி யிட்டது. அப்போது இந்நூலின் விலை 1 ரூபாய் 25காசுகள் ஆகும். இதனை மொழியாக்கம் செய்தவர் தோழர் வி. ராதாகிருஷ்ணன். இவர் ஜனசக்தியில் பணி யாற்றியவர். இம்மொழியாக்கத்திற்கு உதவியதற்காக எஸ்.இராமகிருஷ்ணன், ஆர்.கே.கண்ணன் ஆகியோருக்கு மொழிபெயர்ப்பாளர் நன்றி கூறியுள்ளார். வி.ராதா கிருஷ்ணன் மொழிபெயர்ப்பாளர் முன்னுரையில்,

"கடைசியாக, மொழிபெயர்ப்பைப் பற்றியும் ஒரு வார்த்தை. விஞ்ஞானத்தையும், பொருளாதாரத்தையும், தத்துவத்தையும் விளக்கும் இந்நூலை மொழிபெயர்ப்பது மிக, மிகச் சிரமமான விஷயமே. பல ஆங்கிலச் சொற் களுக்குச் சரியான தமிழ் சொற்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது. ஒருசில இடங்களில் போதிய விளக்கமின்றி, புரிந்துகொள்வதற்குக் கஷ்ட மாய் இருப்பதை வாசகர்கள் உணரலாம். ஒன்றுக்குப் பலமுறை படித்துத்தான் இந்தக் கடினமான நூலைப் புரிந்துகொள்ள முடியும்"

என்று மொழியாக்கம் குறித்து கூறியுள்ளார் (1957:8). டைலக்டிக்ஸ் என்பதற்கு தர்க்கவியல் என்ற

சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். மெட்டாபிசிக்ஸ் சொல்லை அப்படியே ஒலிபெயர்ப்பு செய்துள்ளார். இம்மொழியாக்கம் சிறுசிறு வாக்கியங்களில் சரளமாக அமைகிறது. ஆயினும், நூலின் நடுவே ஒரு பகுதி விடுபட்டுள்ளது. எவ்வாறாயினும் இவ்வெளியீடு மார்க்ஸ்-எங்கெல்ஸ் எழுத்துகளைத் தமிழில் வெளிக் கொணர வேண்டும் என்ற தமிழகப் பொதுவுடைமை இயக்கத்தின் ஆரம்பக் காலச் சுயமுயற்சிகளில் ஒன்று ஆகும்.

"கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்" என்ற தலைப்பில் இந்நூலின் இரண்டாவது மொழியாக்கம் 1974ஆம் ஆண்டு மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகம் வெளியிட்டது. இம்மொழி யாக்கத்தை செய்தவர், மார்க்சியச் செவ்வியல் எழுத்து களைப் பெருமளவுக்கு மொழியாக்கம் செய்த ரா. கிருஷ்ணையா. இம்மொழியாக்கத்தில் இன்று புழக்கத்தில் உள்ள கலைச்சொற்கள்தாம் பயன்படுத்தப் பட்டுள்ளன. இந்தக் கலைச்சொற்களை உருவாக்கியவர் களில் ஒருவர் ரா. கிருஷ்ணையா. பொதுவாக இம் மொழியாக்கம், மூலநூலின் மொழிநடைக்கு அணுக்க மாகவும், பொருள் தெளிவோடும் செல்கின்றது. இம் மொழியாக்கமே சிறு திருத்தங்களுடன், மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகம் வெளியிட்ட மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் தொகுதி 10-ல் இடம் பெற்றுள்ளது.

## நூல்பரவலும் புரிதலும்

தமிழில் இச்சிறுநூல் தனிப்புத்தகமாக 1957 (NCBH), 1974, 1979 (முன்னேற்றப் பதிப்பகம்) ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன. முன்னேற்றப் பதிப்பகம் 1979-க்குப் பின்னும் தனிநூலாக வெளியிட்டிருக்கலாம். ஆனால் இதுபற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. 1989-ல் வெளிவந்த 10-ஆவது தேர்வுநூல் தொகுதியில் இடம்பெற்றுள்ளது. 1990களுக்குப் பிறகு சரவணபாலு பதிப்பகம் என்ற கோ.கேசவன் நூல்களை வெளியிட்டுக் கொண்டிருந்த பதிப்பகம் இந்நூலுக்கு ஒரு பதிப்பைக் கொண்டுவந்தது. இப்போது ஒரு "புதிய மொழியாக்கம்" ஒன்று வெளிவந்துள்ளது. இந்தப் பதிப்புகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டால், 1950களுக்குப் பிறகு சராசரியாகப் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை தமிழில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது தெரிகிறது.

பொதுவாக, தமிழகத்தில் மார்க்சிய ஆரம்ப வகுப்புகளில் வாசிக்கப்பட வேண்டிய நூல்களில் இதுவும் கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்கும். 2000ஆம் ஆண்டுகளில் இயக்கத்திற்கு அறிமுகமான புதிதில் எனக்கு வாசிக்கக் கொடுக்கப்பட்ட நூல்களில் இதுவும் ஒன்று. அப்போது இந்நூலைத் தனிப்புத்தகமாகவும் 10-ஆவது தேர்வுநூல் தொகுதியாகவும் நாமக்கல், சேலம் பழைய புத்தகக் கடைகளில் வாங்கியுள்ளேன். இதுவே இந்நூலின் பரவலைக் காட்டுகின்றது. ஏனென்றால், அதிகமாகச் சமூகத்தில் புழங்கிய புத்தகங்களே பழைய புத்தகக் கடைகளில் தாராளமாகக் கிடைக்கும்.

இச்சிறுநூலின் விநியோகம் பரவலாக இருந்தாலும், இந்நூல் பற்றிய ஆய்வுகள், உரையாடல்கள் எதுவும் தமிழில் நடக்கவில்லை; ஒரு மௌனமான வாசிப்பு நடந்தேறியுள்ளது. ஆனால் இயற்பியல், வேதியியல், விலங்கியல் போன்ற பிற நவீன இயற்கை அறிவியல் துறைகள் போன்று மார்க்சியமும் ஓர் அறிவியல் என்ற புரிதலுக்கு, இச்சிறுநூலின் தலைப்பும் சில பத்திகளும் ஆதாரமாகக் காட்டப்படுகின்றன. "மார்க்சியம் ஓர் அறிவியல்" புரிதல் சரியானதாஞ்?

## மார்க்சியம் ஓர் அறிவியலா அல்லது அறிவு இயலா?

ஜெர்மன் மொழியில் இந்நூலின் தலைப்பு Die Entwicklung des Sozialismus von der Utopie zur Wissenschaft என்பது ஆகும். இத்தலைப்பை அப்படியே சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தால், "கற்பனையி லிருந்து அறிவு இயல் வரை சோசலிசத்தின் படிமலர்ச்சி" என்பது ஆகும். இதில் வரும் Wissenschaft என்ற ஜெர்மன் சொல் அடையாக நிற்கும்போது கிடைக்கும் அகராதிப் பொருள்கள் scientific, academic, scholarly, learned, academical, academically என்பன ஆகும். இந்தச் சொற்கள் எல்லாம் அறிவுத் துறை சார்ந்த, புலமைத் துறை சார்ந்த என்ற பொருள்களைத் தரவல்லன. இவற்றில் குறிப்பாக scientific என்ற ஆங்கிலச் சொல், scientifique என்ற பிரெஞ்சுச் சொல்லிருந்து 16ஆம் நூற்றாண்டில் ஆங்கில மொழிக்கு வந்த சொல். இதற்கு "அறிவை உருவாக்குதல்" என்பது மூலப்பொருள். பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் இவ் ஆங்கிலச் சொல் முறையான, முறைமை சார்ந்த என்ற பொருள்களைத் தந்தன. பழைய தமிழில் 'தத்துவ நூல்', 'கலை நூல்', 'சிற்ப நூல்' என்ற சொற்றொடர்களில் வரும் 'நூல்' என்ன பொருளைத்தருகின்றதோ அந்தப் பொருளைத்தான் scientifique என்ற சொல் குறிக் கின்றது; இந்த 'நூல்' என்ற சொல் இக்காலத் தமிழில் 'தத்துவவியல்', 'பொருளியல்', 'அரசியல்' என்ற சொற்றொடர்களில் வரும் 'இயல்' போன்ற சொல். அதாவது முறையான, தருக்கப் பூர்வமான அறிவுத் துறையைக் குறிக்கும் சொல்.

இதுமட்டுமில்லாமல் மார்க்ஸ் எங்கெல்ஸ் எழுத்துகளில் wissenschaftlich என்ற ஜெர்மன் மூலச்சொல் தத்துவார்த்த என்ற பொருண் மையையே குறிக்கின்றது என்று ஹால் ட்ரேப்பர் என்ற மார்க்சிய அறிஞர் வாதிட்டுள்ளார் என்பதையும் நினைவில் கொள்வோம். இவையெல்லாம் இருக்கட்டும், நவீன இயற்கை அறிவியல் போன்று மார்க்சியமும் ஓர்

அறிவியல் என்று சொன்னால் என்ன குடிமுழுகிப் போய்விடும்? என்ற கேள்வி நியாயமான கேள்வியே.

இதற்கு இரண்டு பதில்கள் உண்டு. ஒன்று முதலாளிய சமூக உருவாக்கத்தின் உடன் விளைவான நவீன இயற்கை அறிவியல் துறைகள் இயக்க மறுப்பியல் அடித்தளத்தைக் கொண்டவை, நவீன இயக்க மறுப்பியல் தத்துவப் போக்குகளைத் தோற்றுவித்தவை என்று மார்க்சியம் விமர்சனம் செய்கிறது. இதைப் பற்றி இச்சிறுநூலில் உள்ள எங்கெல்சின் கூற்று வருமாறு:

மெய்யான இயற்கை விஞ்ஞானம் பதினைந்தாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் ஆரம்பமாயிற்று; அது முதலாய் மேலும் மேலும் கூடுதலான வேகத்தில் முன்னேறிவந்துள்ளது. இயற்கையை அதன் தனித்தனிப் பிரிவுகளில் பகுத்தாய்தல், வெவ்வேறு இயற்கை நிகழ்ச்சிப் போக்குகளையும் பொருள்களையும் திட்ட வட்டமான வகுப்புகளில் வகை பிரித்தல், அங்ககப் பொருள்களின் பல்வேறு வடிவங்களிலும் அவற்றின் உள் அமைப்பியலை ஆராய்தல் - இவைதாம் இயற்கையைப் பற்றிய நமது அறிவு கடந்த நானூறு ஆண்டுகளில் பீடு நடை போட்டுப் பிரமாதமான முன்னேற்றம் கண்டதன் அடிப்படை நிபந்தனைகள். ஆனால் இவ்விதமான ஆய்வு முறையானது, இயற்கைப் பொருள்களையும் நிகழ்ச்சிப் போக்குகளையும் பிரம்மாண்டமான முழு அமைப்புடனும் அவற்றுக்குள்ள தொடர்புகளிலிருந்து பிரித்துத் தனிமைப்படுத்தி வைத்து அவற்றைக் கண்ணுறும் பழக்கத்தை, அவற்றின் இயக்கத்தில் அல்லாது உறக்கத்தில், சாராம்சத்தில் மாறிக் கொண்டிருக்கும் மதிப்புருக்களாய் அல்லாது நிலையாய் இருக்கும் மாறிலிகளாய், அவற்றின் உயிருள்ள வாழ்வில் அல்லாது மரண நிலையில் வைத்துக் கண்ணுறும் பழக்கத்தை நமக்கு மரபுரிமையாய் விட்டுச் சென்றுள்ளது. பொருள்களைக் கண்டறிவதற்கான இந்த வழிமுறையை பேக்கனும் லாக்கும் இயற்கை விஞ்ஞானத்திலிருந்து தத்துவவியலுக்கு மாற்றிய போது, அது கடந்த நூற்றாண்டிற்கு உரிய தனி இயல்பாகிய குறுகிய, மாறா நிலைவாத [இயக்க மறுப்பியல் அல்லது இயங்காவியல்]ச் சிந்தனை முறையைத் தோற்றுவித்தது *(1979:84)*.

ஆகவே மார்க்சியத்தை இந்த "அறிவியல்கள்" போன்ற ஓர் அறிவியல் என்று சொல்லமுடியாது. இரண்டாவது பதில், இயக்க இயல் பொருள்முதல்வாதம் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட, வர்க்கமற்ற புதுயுக உருவாக்கத்துடன் இணைத்து கொண்டுள்ளது மார்க்சியம். அதை 'அறிவியல்' என்று சொல்வது, சூத்திரங்களின், முன்முடிவுகளின் தொகுப் பாகக் கருத வைக்கின்றது; நிதர்சமான சூழல்களை முறையாகப் பகுப்பாய்வு செய்து நடைமுறைகளை வகுத்துக்கொள்ளும் இயக்க இயல் முறையைக் கருத்தில்கொள்ளாது விட்டுவிடுகின்றது.


சரி, ஏன் எங்கெல்ஸ் இயக்க இயலை நவீன இயற்கை அறிவியல் கண்டுபிடிப்புகள் மெய்ப்பிக் கின்றன என்று வாதிடுகின்றார். இதற்கான எங்கெல்சின் பதில் பின்வருமாறு:

'கற்றறிந்த'.. வாசகர்களுக்கு [ஜெர்மன் பூர்ஷ்வா வரலாற்றியலாளர்களுக்கு], சோஷலிசத்தின் வளர்ச்சி வரலாற்று விவரணையில் கான்ட்-லாப்ளாஸ் அண்ட வியலையும், நவீன இயற்கை அறிவியலையும் டார்வினையும், ஜெர்மன் செவ்வியல் தத்துவத்தையும் ஹெகலையும் பற்றி குறிப்பிடுவது ஆச்சரியம் அளிப் பதாக இருக்கும். ஆனால் அறிவு இயல் சோஷலிசம் என்பது ஜெர்மனியில் உயிரோட்டமாக உள்ள பிரக்ஞை பூர்வமான இயக்க இயல் மரபில் வாழ்ந்துகொண் டிருக்கின்ற செவ்வியல் தத்துவக் கருத்தமைவிலிருந்து மட்டுமே தோன்ற முடிகிற, அடிப்படையில் ஒரு ஜெர்மன் விளைபொருளே ஆகும். வரலாறு பற்றிய பொருள் முதல்வாதக் கருத்தாக்கம், பாட்டாளி களுக்கும் பூர்ஷ்வாக்களுக்கும் இடையேயான வர்க்கப் போராட்டத்தில் அதனுடைய கையாளுகை இயக்க இயல் பற்றிய சிந்தனை வழியாக மட்டுமே சாத்தியப்பட முடியும். மாபெரும் ஜெர்மன் தத்துவவாதிகள் பற்றியும் இயக்கஇயல் பற்றியுமான நினைவு அழிந்துபோய்விட்ட, வெற்றுப் புலமைப்பாட்டுச் சதுப்பு நிலத்தில் பிழைத் திருக்கின்ற ஜெர்மன் பூர்ஷ்வா பள்ளிக்கூட ஆசிரியர் களுக்காகவே, இயக்கஇயல் மெய்மையின் உறுதிப் பாட்டிற்கான சான்றாக நவீன இயற்கை அறிவியலைக் கொண்டுவந்து காட்ட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியுள்ளோம்.

இந்தக் கூற்று "கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்" என்ற நூலின் முதலாம் ஜெர்மன் மொழிப் பதிப்பின் முன்னுரையில் எங்கெல்ஸ் எழுதியது. இது நவீன இயற்கை அறிவியல் கண்டு பிடிப்புகள் குறித்து எங்கெல்ஸ் ஆர்வம் காட்டி யதற்கான காரணத்தை இன்னும் தெளிவாகக் கூறுகின்றது. ஆகவே நவீன சோசலிசத்தை, அதாவது மார்க்சியத்தை நவீன இயற்கை அறிவியல் துறை நிலைக்குக் கிழிறக்குவது கொச்சைப்படுத்துவது ஆகும்; மார்க்சியத்தை அறிவு இயலாகக் கற்பதற்குத் தீங்கிழைப்பதும் ஆகும். முதலாளிய சமூக அமைப்பின் சமூக, இயற்கை அறிவு இயல்களுக்கு மாறான, எதிரான ஒரு அறிவு இயல் மார்க்சியம் ஆகும்.

சிமோன், ஃபூரியே, ஓவன் ஆகிய "மாபெரும் மெய்யான மனிதர்"களின் கற்பனையாக இருந்த சோசலிசத்தை, மார்க்ஸ் ஒரு புதுயுக அறிவு இயலாக மாற்றினார். இந்த வரலாற்றையே, "கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்" என்ற எங்கெல்சின் நூல் கூறுகின்றது.

●





# தேய்ந்து வரும் ஒரு நெடுங்காலக் கலை

பொன்னீலன்

கிட்டத்தட்டப் பத்து ஆண்டுகள் இருக்கலாம். தஞ்சை சிறப்பு மருத்துவர் ச.மருது துரை அவர்களின் மகன் சிபி சம்மந்தன் சிறுவனாக இருந்த காலம் அது. பேச்சுவாக்கில் ஒருநாள் கடிதம் எழுதுவது பற்றி அவனிடம் கேட்டேன். இதுவரை யாருக்கும் தான் கடிதம் எழுதியது இல்லை என்றான் அவன், என் தொடர்புக்கு அலைபேசி இருக்கிறதே என்றும் சொன்னான். “அவனைக் கடிதம் எழுத வைப்பதற் காகவே அவனுக்கொரு என் முகவரியிட்ட உறையை எழுதி, காகிதத்துடன் அனுப்பி, இதில் இன்னென்ன மாதிரி எழுதிக் கடிதமாக எனக்கு அனுப்பு என வற்புறுத்தினேன். அதன்படி எனக்கு அவன் கடிதம் எழுதினான். இப்பொழுது டாக்டர் மருது துரையிடம் நான் கேட்டபோது, சிபி எழுதிய முதல் கடிதம் அது, கடைசிக் கடிதமும் அதுதான் என்றார்.

செ. காமராசு என்று ஒரு நண்பர் ஒரு ஹைகூ கவிதை எழுதினார்.

"பெப்சி குடித்துச்
செத்துப்போனது - எங்கள்
கோலிச் சோடா"

இதே கதைதான் இன்று கடிதத்துக்கும் ஏற் பட்டிருக்கிறது. கணினியும், அலைபேசியும், தொலை பேசியுமாக மின்னனுத் தொடர்புக்கருவிகள் வந்து, கையால் எழுதும் கடிதங்களைக் கொன்றுவிட்டன!

ஆனாலும் நான் தொடர்ந்து கடிதங்கள் எழுதித் தான் வருகிறேன். மாதம் ரூபாய் ஐந்நூறு முதல் எழுநூறு வரை அஞ்சல் வில்லை வாங்க எனக்குச் செலவாகுது. ஆனாலும் கடிதம் எழுதுவதில் இருக்கக்கூடிய சுகம், அன்னியோன்னியம் அலைபேசியில் கிடைப்பதில்லையே.

கடித இலக்கியம் என்னும் தலைப்பில் முனைவர் இரா.காமராசுவின் நூலைப் பார்த்ததும், எனக்கு முதலில் நினைவுக்கு வந்தது 1988-ல் வாசிக்கக் கிடைத்த "ஆயன் கடிதங்கள்" என்னும் நூல். ஆயன் தூத்துக்குடி மாவட்டம் வேப்பலோடைக்காரர். என்னைப் போன்றோருக் கெல்லாம் அன்று நெருங்கிய கசை இலக்கிய நண்பர் அவர். நல்ல ஓவியர். தான் பார்த்த, கேட்ட, அனுபவித்த எல்லாவற்றையும் அவர் ரசனையோடு கடிதங்களாகப் பலருக்கு எழுதினார்.

உதாரணமாக, லாரியில் பயணம் செய்த அனுபவத்தை எழுதிய போது, லாரி டிரைவர் எவ்வளவு அந்நியோன்னியமானவராக இருக்கிறார், வழியில் சாப்பிடுவதற்கு நுங்கு முதற்கொண்டு எல்லாவற்றையும் அவரே வாங்கிக் கொடுத்தார் எனச் சின்னச்சின்ன அனுபவத்தையெல்லாம் தன் கடிதங்களில் எழுதி யிருந்தார் அவர்.

அந்த ஆயன் கடிதங்களை நாங்கள் மிக அரிய செல்வமாய்ப் பாதுகாத்து வைத்திருந்தோம். எப்படியோ என்னிடமிருந்த நூல் தொலைந்துவிட்டது. அதை வாசித்துவிட்டுத்தான் காமராசுவின் நூலுக்குள் நுழைய வேண்டும் என்ற ஒரு பிடிவாதம் எனக்கு ஏற்பட்டது. பலரைத் தொடர்பு கொண்டேன். கடைசியில் அதன் நகல் ஒன்று கவிஞர் இளசை அருணாவிடம் இருப்பதாகக் கலைஞர் கைலாசமூர்த்தி சொன்னார். இளசை அருணாவிடம் தொடர்புகொண்டு அதை வாங்கி வாசித்தப் பிறகுதான் மனநிறைவு ஏற்பட்டது. ஆயன் கடிதங்களா? அவை அல்வாத் துண்டுகள் அல்லவா! இளமைக் காலத்தில் மனதோடு ஒட்டிக்கொண்டவை எல்லாமே அப்படித்தான்.

இரா. காமராசுவின் 'கடித இலக்கியம்' ஒரு வகையில் கல்விப் புலம் சார்ந்தது என்று சொல்ல வேண்டும். கடித இலக்கியம் என்றால் என்ன? கடிதம் என்பதைக் குறிக்கும் பிற சொற்கள் எவை? இலக்கிய வரலாற்றில் கடிதங்கள் எங்கெங்கெல்லாம் இடம் பெற்றிருக்கின்றன? என்றெல்லாம் அடையாளப்படுத்து கிறார் காமராசு. ஜவகர்லால் நேரு தன் மகள் இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்கள், காந்தியடிகள் எழுதிய கடிதங்கள், விவேகானந்தர் எழுதிய கடிதங்கள், சுபாஷ் சந்திரபோஸ் எழுதிய கடிதங்கள் எனப் பலர் எழுதிய கடிதங்களை நினைவு கூர்கிறார்.

தொடர்ந்து கடிதங்களை இனம் பிரித்தும் காட்டுகிறார் காமராசு. கடிதத்தில் இருக்கவேண்டிய ஏழு உறுப்புகளைச் சொல்லுகிறார். இவற்றையெல்லாம் விளக்கிய பின் அண்மைக் காலத்தில் எழுதப்பட்ட இலக்கிய ஆளுமைகள் பலரின் கடிதங்களைப் பதிவு செய்கிறார். பாரதியார் கடிதங்கள், பாரதிதாசன் கடிதங்கள், புதுமைப்பித்தன் கடிதங்கள் எனத் தஞ்சை பிரகாஷ் கடிதங்கள் வரை தொட்டுத் தொட்டுக் காட்டி, அவற்றின் சிறப்பம்சங்களைச் சொல்லுகிறார்.

இந்தக் கடிதங்கள் வெறும் கடித நகல் அல்ல. பெரும் பெரும் இலக்கிய ஆளுமைகளின் வாழ்வியல் உணர்வுப் பதிவுகள் இவை. அவர்களுடைய அனுபவங்கள், நெருக்கடிகள், வாழ்வியல் நோக்கங்கள், இவை யெல்லாம் கடிதங்களில் வெளிப்படுகின்றன.

எடுத்துக்காட்டாகப் புதுமைபித்தன் கடிதங்கள். அவை பு.பிக்கு அவருடைய துணைவியாரின் மீது இருக்கும் அளவில்லாத அன்பை வெளிப்படுத்தும் வகையில் கடிதத்தைத் தொடங்குகிறார். பாரதியும் தன் மனைவிக்குரிய கடிதத்தை "எனதருமைக் காதலி செல்லம்மாளுக்கு" என்றே தொடங்குகிறார். கணவன் மனைவி பாசம் மட்டுமல்ல, நண்பர்களுக்கிடையேயும், தோழர்களுக்கிடையேயும், உறவினர்களுக்கிடையேயும் எழுதும் கடிதங்களும் அவர்களின் உறவு நிலை ஆழங்களைக் குறிக்கின்றன.

வெள்ளியங்காட்டான் கடிதத்தில், சமூக உணர்வுகள் பல பதிவாகியுள்ளன. அதில் ஒரு வரி. (உடல் மேல் கதராடைகளை அணிந்துகொண்டு) உள்ளத்தைச் சுயநிலை அந்தகாரர் எமனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டவர்களைக் காட்டிலும், கோட்சே ஒரு காலத்தில் நல்லவனாகக் கருதப்பட்டு விடலாம் என வருகிறது. யார் காலத்தை முன்நிறுத்தி, யாரை அந்தக்கால எமன் என்று குறிப்பிடுகிறார் இந்த வெள்ளியங்காட்டான்?

கவிஞராக வாழ்வது எத்தனை கடினம் என்பதையும் வெள்ளியங்காட்டானின் கடிதத்திலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. "இன்று இந்த உலகில் ஒரு கவிஞனாக வாழ்வதைக்காட்டிலும் ஒரு பணக் காரணாவது மிகவும் சுலபம். ஆனால், ஒரு கவிஞனாக வாழ்வதைக் காட்டிலும் உயர்ந்த வாழ்க்கை உண்மை

யிலேயே இல்லை. இந்த வார்த்தைகளுக்குள்ளே கவிஞருடைய வாழ்க்கையின் தவிப்பு துலங்குகிறது, பொருளாதாரத் தவிப்புக்கும், கவிதைத் தவிப்புக்கும் இடையில் அவர் படும் பாடும் அருமையாகப் பதிவாகியிருக்கிறது.

ரசிகமணி டி.கே.சி அவர்களின் கடிதங்கள் முழுமையுமே அவருடைய ரசனையின் வெளிப்பாடுகள். எடுத்துக்காட்டாக கலிங்கத்துப்பரணி ஆசிரியர் சிருங்காரச் சுவைப்படப் பாடுவதில் வெகு சமர்த்தர். ஆனாலும் பேய்களையும் அவைகளின் ஸ்வரூபங் களையும் வர்ணிப்பதில் அவரை இணையில்லாதவர் என்றே சொல்லிவிடலாம். அவ்வளவு அழகாய் இருக்கும் கோர வருணனை.

"கோம்பி பாம்பிடை
கோத்தணி தாலிய"

(கோம்பி: பச்சோந்தி)




**கடித இலக்கியம்**

ஆசிரியர்: இரா.காமராசு

**வெளியீடு: சாகித்ய அகாதமி**

**குணா பில்டிங்ஸ், 443, அண்ணாசாலை,**

**தேனாம்பேட்டை, சென்னை - 600 018**

**விலை: ₹ 200/.**

தாலியை எப்படி அற்புதமாக வர்ணித்து விட்டார்! கவிஞர்.

மனக் கண்ணால் பேயையும் தாலியையும் பார்த்தார். அந்த உண்மையைப் பாடிவிட்டார் பரணி ஆசிரியர்.

ரகுநாதனுக்கு விந்தன் எழுதிய கடிதத்தில், ரகுநாதனின் இலக்கிய மேதைமையை விந்தன் வியந்து பாராட்டுவதைக் காணமுடிகிறது. ரகுநாதன் தான் நடத்திய பத்திரிக்கையில் விந்தனைக் காதல் கதை எழுதச் சொன்னார் போல, அதற்கு பதிலாக விந்தன் எழுதுகிறார்.

"இன்னொரு சந்தேகம் எனக்கு, என்னால் காதல் கதை தங்களுக்குப் பிடித்தமான முறையில் எழுத முடியுமா என்பதே அந்த சந்தேகம். தங்கள் கன்னிகா வுக்குப் பிறகுதான் எனக்கு அந்தச் சந்தேகம் தோன்றி யிருக்கிறது. ஆம், கதை முடிவைத்தவிர மற்றவை அனைத்தும் என்னை பிரம்மிக்க வைத்தன." ஒரு படைப்பாளி இன்னொருவர் படைப்பில் தனக்கு பிடித்ததையும் பிடிக்காததையும் எவ்வளவு நாசுக்காக பதிவு செய்கிறார்!

காமராசுவும், தனுஷ்கோடியும் ஈருடல் ஓருயிராகத் திரிந்தவர்கள். தனுஷ்கோடி ராமசாமி எப்போதுமே நெகிழ்ச்சியானவர். அன்பில் குழைந்து போகிறவர். அவருடைய கடிதத்தில் அதை நன்றாகக் காண முடியும். அவர் கடிதம் ஒன்று இப்படித் தொடங்கு கிறது. "மேலும் மேலும் சந்தோஷங்களை என் மீது கொட்டுகிறீர்கள். வாழ்வதன் அர்த்தத்தை மேலும் மேலும் வளப்படுத்துகிறீர்கள். அறமும் பல நேரங்களில் அப்படித்தான். ஞானக்குயில் அப்படியே செய்யட்டும். எவ்வளவு வளம் மிக்க அன்பு மனம் இருக்கவேண்டும். இப்படியெல்லாம் எழுத!


இவ்வாறு கிட்டத்தட்ட இருபதாம் நூற்றாண்டின் சிறந்த படைப்பாளிகள் மிகப் பலரின் கடிதங்களைப் பதிவு செய்வதன் மூலம், அவர்களின் அக புற உணர்வு களை மிக அருமையாக இந்தக் கடிதங்கள் வழியே வெளிப்படுத்தியிருக்கிறார் இரா. காமராசு.

கடிதங்கள் என்பவையே ஒரு வகையில் அந்தரங்கத் தன்மை கொண்டவைதானே! அந்தரங்கத்தைத் தெரிந்து கொள்ளத்தானே மனித மனம் துடிக்கும். ஆக, இந்தக் கடித நூல் ஈர்ப்பு மிக்கது. அந்தரங்கத் தன்மை கொண்டது. படைப்பாளிகளின் வாழ்வைப் புரிந்து கொள்ள வழி திறப்பது.

மிகுந்த பொறுமையோடும் கவனத்தோடும் கடிதங் களைத் தொகுத்து நூலாக்கியிருக்கிறார் இரா. காமராசு. அவருடைய இனிய முயற்சிக்கு என் அன்பு வாழ்த்துக்கள்.

●

# நியூ செஞ்சுரியின் ஜனவரி வெளியீடு




## இரண்டு பாகங்கள் 1300 பக்கங்களுக்கு மேல் இரண்டு புத்தகங்களாக...



# மானுடம் பாடிய மக்கள் கவிஞர்

இன்குலாப் (1944-2016)

ம.பழனி

புரட்சி என்ற சொல்லின் பொருளான இன்குலாப் என்ற பெயரையே தன் புனைப்பெயராகக் கொண்ட கவிஞர் இன்குலாப் அவர்கள் கடந்த 2016 டிசம்பர் 6ம் தேதி காலமானார். மக்கள் கவிஞர், மக்கள் பாவலர், பேராசிரியர், நாடக ஆசிரியர், சிறுகதை ஆசிரியர், இதழ் பொறுப்பாசிரியர், பத்தி எழுத்தாளர் எனப் பல தளங்களில் இயங்கிய கவிஞர் இன்குலாப் அவர்களின் மறைவு தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் பிறந்த இன்குலாபின் இயற்பெயர் சாகுல் அமீது. சித்த மருத்துவத்தைத் தொழிலாகக் கொண்ட சீனி முகமது ஆயிஷா உம்மா ஆகியோர்களின் மகனாவார். எளிய இசுலாமியக் குடும்பத்தில் பிறந்தவராயினும் மத அடையாளங்களைத் துறந்த மனிதநேய சிந்தனையாளர்.

*1965ல் தமிழ்நாட்டில் உச்சத்திலிருந்த இந்தி எதிர்ப்புப் போராட்டமே இன்குலாபை மக்களிடம் அறிமுகப்படுத்தியுள்ளது. மதுரை தியாகராசர் கல்லூரியில் மாணவனாக இருந்த இன்குலாப் இப் போராட்டத்தில் கலந்து கொண்டதால் தடியடிபட்டு சிறையும் சென்றுள்ளார். பின்னர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் உதவியோடு சென்னையில் உள்ள புதுக் கல்லூரியில் 1966ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டு வரை 36 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.*

*ஆரம்ப காலத்தில் அவசர நிலையின் போது 'விடியல்' என்ற தொடர் நாடகத்தை எழுதியுள்ளார். பின்னர் துடி, மீட்சி, குரல்கள், ஔவை, மணிமேகலை, குறிஞ்சிப்பாட்டு ஆகிய நாடகங்களை எழுதியுள்ளார். தமிழக அரசு, கலைப் பண்பாட்டுத் துறை மூலமாக 2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22, 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் இன்குலாப் நாடக விழாவினை நடத்தியது. இந்த விழாவில் ஔவை, மணிமேகலை, குறிஞ்சிப் பாட்டு ஆகிய நாடகங்கள் சென்னையில் உள்ள பி.டி.தியாகராயர் கலையரங்கில் அரங்கேற்றப்பட்டன. மௌனக்குறம், மரப்பாச்சி ஆகிய நாடகங்களை நாடக இயக்கங்கள் வாயிலாக பேராசிரியர் மங்கை அவர்கள் இயக்கினார். இம்மூன்று நாடகங்களும் இவ்விருவரின் கூட்டு முயற்சி எனலாம். மேலும் ஒவ்வொரு புல்லையும், பொன்னிக் குருதி, புலிநகச் சுவடுகள், காந்தள் நாட்கள் ஆகிய கவிதைத் தொகுப்பு களையும் எழுதியுள்ளார்.*

*மார்க்சிய, அம்பேத்கரிய மற்றும் பெரியாரிய சிந்தனைகளில் தன்னைக் கரைத்துக் கொண்டவர் கவிஞர் இன்குலாப். அவரது ஆரம்பகால ஈடுபாடுகள் திராவிட லட்சியத்தின் மீதிருந்தாலும் பின்னாட்களில் இடதுசாரி இலக்கியங்களில் ஈடுபாடு உடையவராகவும் தலித் விடுதலையை நேசித்தவராகவும் அறியப்பட்டார். மாணவப் பருவத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தானும் ஒருவராக இணைந்து எந்த அளவுக்குப் போராடினாரோ அந்தப் போர்க்குணம் சிறிதும் குறையாமல் அவர் பேராசிரியரான காலங்களிலும் போராடியுள்ளார். அவரது போராட்டக்கால அனுபவங் களை 'காக்கைச் சிறகினிலே' என்னும் மாத இதழில் கல்லூரிக் காலம், புல்வெளியில் செம்பூக்கள் என்னும் தலைப்பில் தொடராக எழுதி வந்தார். ஈழத்தில் கொன்று குவிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டி 2013ல் தமிழகம் முழுவதும் கல்லூரி மாணவர்கள் தன்னெழுச்சி யாகத் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது புதுக் கல்லூரி முன்பாகக் கூடியிருந்த மாணவர்களிடம் சென்று போராட்டத்தின் அவசியத்தை உணர்த்தி அவர்களை ஊக்கப்படுத்தினார்.*

*கவிஞர் இன்குலாபின் கவிதைகளில் வரும் சொற்களும் சொல்லாட்சியும் இலக்கிய உத்திகளும் சிறப்புடையனவாக இருக்கின்றன. பெண்களின் நிலை, அரசியல், சமூகம், பொருளாதாரம், அடிமைத்தன எதிர்ப்பு, இன ஒடுக்குமுறைகளுக்கு எதிர்ப்பு என பல விசயங்களைப் பற்றி தன் படைப்புக்களில் பதிவு செய்துள்ளார். படிப்பதற்கு எளிமை, புரிந்து கொள்வதில் தடையின்மை மற்றும் நிகழ்காலத்தின் சம்பவங்கள் ஆகியவற்றால் இவரது கவிதைகள் எல்லோருக்கும் உரியதாகிவிடுகின்றன. "நாங்கள் தாங்க வேண்டிய ஆயுதங்களை எங்கள் எதிரிகளே தீர்மானிக்கிறார்கள்" என்ற கார்ல் மார்க்சின் வரிகளுக்கு ஏற்ப அதிகாரத்திற்கு எதிராகவே இவரது கவிதைகள் பிறந்துள்ளன.*

*அரியலூர் மாவட்டத்தில் உள்ள குளம்பாடி கிராமத்துக் கிணற்றில் தாழ்த்தப்பட்ட சிறுவர்கள் குளித்தபோது, கிணறு தீட்டுப்பட்டது என ஆதிக்கச் சாதியினர் கிணற்றில் மின்சாரம் பாய்ச்சியுள்ளனர். அதனால் நான்கு சிறுவர்கள் இறந்துள்ளனர். இச் சம்பவத்தின் கோபமும் வேதனையும் தாங்காமல் எழுதிய "மனுசங்கடா நாங்க மனுசங்கடா" என்னும் கவிதையும் இராஜராஜ சோழனுக்கு எதிராக எழுதிய "கண்மணி ராஜா" என்ற கவிதையும் இராஜராஜ சோழனின் ஆயிரமாவது பிறந்த நாளை தமிழக அரசு விமரிசையாகக் கொண்டாட நினைத்தபோது அதை விமர்சித்து எழுதிய "ராஜராஜேச்சுவரம்" என்ற கவிதையும் என இப்படி யாகப் பல கவிதைகளும் ஆளும் வர்க்கத்திற்கு எதிராகவே எழுதப்பட்டுள்ளன.*

**"சதையும் எலும்பும்**
**நீங்க வச்ச தீயில் வேகுதே**
**ஒங்க சர்க்காரும் கோர்ட்டும்**
**அதுல எண்ணெய் ஊத்துது**
**எதை எதையோ சலுகையின்னு**
**அறிவிக்கிறீங்க**
**நாங்க எரியுறப்போ**
**எவன் மசுரைப் புடுங்கப்போனீங்க"**

*என்ற கவிதை தமிழ்ச் சமூகத்தின் மனசாட்சியை உலுக்கிய கவிதையாகும். இந்தக் கவிதை முனைவர் கே.ஏ.குணசேகரன் அவர்களால் பல மேடைகளில் பாடலாகப் பாடப்பட்டது. அப்பாடலைக் கேட்டு நெஞ்சம் பதறாதவர்கள் யாருமே இல்லை எனலாம். இப்பாடல் இடதுசாரி இயக்கங்களாலும் தலித் இயக்கங்களாலும் பெரிதும் போற்றிப் பாடப்பட்டது. எங்கெல்லாம் அதிகாரத்திற்கு எதிராக அடக்குமுறைக்கு எதிராக அடிமைத்தனத்திற்கு எதிராக போராட்டம்*

நடக்கிறதோ அங்கெல்லாம் இவரது கவிதைகள் போர்ப் பாடலாக ஒலித்தது. ஆயுதம் தாங்கி போர் செய்யும் புரட்சியாளர்களைப் போல சமூகத்தில் நடக்கும் அவலங்களைக் கண்டு தன் கவிதை என்னும் எழுத்தாயுதத்தால் போர் செய்தவர் கவிஞர் இன்குலாப்.

தமிழ் இலக்கியத்தில் புலம்பெயர்வின் வலியைச் சொல்லும் முதல் பதிவான குறிஞ்சிப்பாட்டை கவிஞர் நாடகமாக்கினார். ஈழத்தில் நடந்த போருக்கு அஞ்சி மக்கள் புலம் பெயர்ந்து சென்ற போது அவர்கள் எதிர் கொண்ட வலியை, பாரி மக்கள் பறம்பு மலையை விட்டுச் சென்ற காலத்தில் அவர்கள் பட்ட தவிப்பு களோடு இணைத்துச் சொல்லப்படுவதாக இருந்தது. ஔவை நாடகத்தில் ஔவையை இளம் பெண்ணாகவும் அதியமானின் காதலியாகவும் காட்டினார். தமிழ்ச் சூழலில் பயிலப்படும் ஔவைகளில் இவளே முதல் ஔவை எனவும் பிற ஔவைகளெல்லாம் பிற்கால ஔவைகள் எனவும் ஔவைகளைப் பற்றிய புரிதல் களாக காட்சிகள் வழி காண நேர்ந்தது. மேலும் ஆண் பெண் சமத்துவத்தையும் ஆண் பெண்ணுக்களித்த மரியாதையும் பெண்ணின் சுதந்திரத்தையும் அந் நாடகத்தின் வாயிலாகப் பார்க்க முடிந்தது. இவ்விரு நாடகங்களைப் போல மணிமேகலை நாடகமும் மணிமேகலையை அற தேவதையாக அன்பின் உருவமாக கருணையின் கடலாகக் காட்சிப்படுத்தியது. ஒரு படைப்பாளியாக அவர் நிகழ்த்திய சாதனைகள் என்றென்றைக்கும் இந்நாடகங்களைக் கண்ட பார்வை யாளர்களின் மனங்களை விட்டு அகலாதவை ஆகும்.

கிருஷ்ணகிரியில், கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரியும் மைசூர் பல்கலைக்கழகமும் இணைந்து 2013ம் ஆண்டு பிப்ரவரியில் பயிலரங்கம் ஒன்றை நடத்தியது. அப்பயிலரங்கில் தற்காலத் தமிழிலக்கியப் போக்குகள் குறித்துப் பேசிய முனைவர் கி.பார்த்திபராஜா அவர்கள் "நானும் கோவை ஞானியும் தற்காலத் தமிழ்க் கவிதைகளைப் பற்றி நீண்ட நேரம் பேசிக்கொண்டோம். பேச்சின் முடிவில் நான் ஞானியிடம் பாரதிக்குப் பிறகு தமிழ்க் கவிஞர்களில் யாரை மகாகவி என்று குறிப்பிடலாம்; யார் அதற்குப் பொருத்தமானவராக இருப்பார் என்று கேட்டேன். அதற்கு அவர், சட்டென்று இன்குலாப்தான் பொருத்த மானவர், அவரை மகாகவி என்று அழைப்பதே மிகச் சரியாக இருக்கும் என்று கூறினார்" என கோவை ஞானி கூறியதாகப் பேசினார்.

கவிஞர் இன்குலாப் அவர்களுக்கு இந்த உரை யாடல்கள் எல்லாம் தெரியுமா என்பதை அரிய இயல வில்லை. ஒரு வேளை அவருக்குத் தெரிந்திருக்குமானால் இந்தப் பட்டங்களை எல்லாம் கேட்டு நகைத்திருப்பார். ஏனெனில், 2006ம் ஆண்டு தமிழக அரசு அவருக்கு கலைமாமணி விருதினை வழங்கியது. தமிழீழ மக்களைக் காக்க தமிழக அரசு தவறிவிட்டது என்று அரசின் மீது குற்றஞ்சாட்டி தனக்களித்த விருதினை தமிழக அரசுக்கே திருப்பி அளித்தார். விருதுகளையோ, பட்டங்களையோ மற்றும் பாராட்டுக்களையோ எதிர்பார்த்து அவர் எழுதியதில்லை. அதனால் தான் தமிழ்க் கவிஞர்களில் அவர் அசலான கவிஞராக, மக்கள் பாவலராக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார்.

இன்குலாபின் படைப்புக்கள் அனைத்தும் அன்றாடம் நடைபெறும் சமூக அவலங்களிலிருந்தே உருப்பெற்றுள்ளன. அக்கவிதைகள் அதிகாரத்திற்கு எதிராகவே இருந்துள்ளன. அதை அவர் தெரிந்தே தான் எழுதியுள்ளார். அதன் பொருட்டு எழுந்த விமர்சனங் களுக்கு ஓரிரு வார்த்தைகளையே பதிலாகவும் தந்துள்ளார்.

"தொடங்கும் நாளின்
ஒவ்வொரு நொடியிலும்
வாழ்க்கையை நிரப்பு.
சிரித்து...
போராடி....
சேர்ந்து...
விடுதலை வெளியில்
மானுடம் விரியும்
காலம் விரியும்
தூரம் வரையும்"


என்று மானுட விடுதலையை ஓயாமல் எழுதிய கவிஞர் இன்குலாப் எழுதுவதிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டார். "உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு" என்று பாடிய பாரதிதாசனைப் போல இவரும் "உயிர் தமிழுக்கு உடல் மக்களுக்கு" என்று வாழ்ந்து காட்டியுள்ளார். அதனால் தான் இறந்த பிறகும் அவரது உடல் செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு ஆராய்ச்சிக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. மானுட விடுதலையை நேசிப் பவர்கள் செல்லும் திசையெல்லாம் கவிஞர் இன்குலாபின் கவிதைகள் அவர்களை கரம் பிடித்து அழைத்துச் செல்லும். ஒரு மாணவனாக முதுகலைத் தமிழிலக்கிய வகுப்பில் அவரிடம் பாடம் கேட்டு உள்ளேன். அந்த நாட்களை இப்பொழுது நினைக்கும் போது அவர் மேலும் மதிப்புக்குரியவராகத் திகழ்கிறார். அவர் இல்லை என்பது மனதிற்கு கனமாகவே உள்ளது. ஆயினும் இத்தகைய மகத்தான மக்கள் கவிஞருக்கு செவ்வணக்கம் செலுத்துவதே அவரைப் பின்பற்று பவர்கள் அவருக்குச் செய்யும் மரியாதையாக இருக்கும். ●

# ஜனவரி வெளியீடு

## எஸ்.வி.ராஜதுரை – வ.கீதா எழுதிய

# பெரியார் சுயமரியாதை சமதர்மம்

## புதிய பதிப்பு




நமது சொந்தப்
பிரச்சினைகளிலிருந்து
தொடங்கவேண்டும்.
எந்தப் பிரச்சினைகள்
வரலாறு நெடுக
நம்மைத்
தாங்க முடியாமல்
வருத்தி வருகின்றனவோ
அவற்றை
அடையாளம் கண்டு
விவாதிப்பதிலிருந்து,
அவற்றுக்கானத் தீர்வுகளை
முன்வைப்பதன்மூலம்
நமக்கான சமதர்மத்தை
எட்டவேண்டும்.

இந்த நூலில்
தோழர் எஸ். வி. ராஜதுரையும்
தோழியர் வ. கீதா அவர்களும்
ஒரு வரலாற்று முக்கியத்துவம்
வாய்ந்த பணியைத்
தமிழுக்கும் மார்க்சியத்துக்கும்
செய்து தந்துள்ளனர்.

– ந.முத்துமோகன்

₹ 900/-



# கற்பனையின் உச்சம் : கம்போடிய இராமாயணம்

இராமசாமி வெங்கடேசன்

இராமாயணம் மொத்தம் எத்தனை என்பதை முழுமையாகச் சொல்லிவிடமுடியாது. இந்தியாவில் வால்மீகி, கம்பன், துளசிதாஸ், எழுத்தச்சன், அஸ்ஸாமிய, வங்காளி, சமண இராமாயணங்களே பல கிடைக்கின்றன. இந்திய பெரும்பான்மையான மொழிகளில் இராமாயணங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. 300 இராமாயணம் என்று ஆங்கிலத்தில் ஏ.கே.இராமானுஜம் கட்டுரை எழுதிய காலத்திற்குப் பின்னர்ப் பல இராமாயண நூல்கள் பழைய நூலகங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. அப்படியாகவே மாத்தளைசோமு கம்போடியா போயிருந்தபோது புத்தகக்கடையில் PREAH REAM PREAH LEAK என்ற புத்தகத்தைப் பார்த்தபோது அது வடமொழி இராமாயணத்தைத் தழுவிய இராமாயண நூலாக இருந்திருக்கிறது. அந்த நூலை எழுதியவர் பெயர் கொடுக்கப்படவில்லை. தொகுத்தவர் பெயர் VANSOPHEAK என்று கொடுக்கப்பட்டிருந்தது. இந்த இராமாயணம் கம்போடிய கெடரு மொழியில் எழுதப் பட்டுள்ளது. வடமொழியிலும் தமிழிலும் இருப்பதைப் போலக் காவியமாக இன்றி நெடுங்கதையாக மட்டுமே இருக்கிறது.

கம்போடியா, இந்தோனேசியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளைத் தென்னக மன்னர்கள் கைப்பற்றிவிட்டு அங்குக் கோயில்களை எழுப்பினர். அக்கோயில்களில் இராமாயணக்கதைகளைச் சிற்பமாகச் செதுக்கினர். இராமாயணக்கதைகள் வாய்மொழி வழியாகவே இந்நாடுகளில் பரவியிருக்கின்றன. அப்படி யாகவே கம்போடியாவிலும் இராமாயணம் பரவி யிருக்கிறது. ஆனால் அங்கு வழங்கும் இராமாயணக் கதையில் பெயர்கள், நிகழ்வுகள் அவர்களின் கலாச்சாரச் சூழலுக்கு ஏற்ப வடிவம் பெற்றிருக்கின்றன. ரீம், லீக், பிரேபைரட், சத்ருட், ஜானுக், சீதா, சூர்ப்பனகா, குரோங்ரீப், சுக்ரீப், அனுமான், பீயலி, கும்பாகர், இந்திரஜிட், மண்டோல்கிரிட், ரீம்லீக், ஜுப்லிக் என்று வரக்கூடிய பாத்திரங்கள் முறையே இராமன், இலக்குமன், பரதன், சத்ருக்கன், ஜனகன், சீதா, சூர்ப்பனகை, இராவணன், சுக்ரீவன், அனுமன், வாலி, கும்பகர்ணன், இந்திரஜித், மண்டோதரி, லவ, குசா என வழங்கப்படுகின்றன.

கம்போடிய இராமாயணம் வால்மீகி இராமாயணத் தோடு பல இடங்களில் ஒத்துப்போகின்றது. தசரதனுக்கு மூன்று மனைவியர், விசுவாமித்திரர், இராமனையும் இலக்குவனையும் காட்டிற்கு அழைத்துச் சென்று, அரக்கர்களைக் கொல்லுதல், சீதையை வில்லைத் தூக்கி மணத்தல், பலராமனை எதிர்த்தல், பரதன் காட்சி, இராணவன் சீதையைக் கவர்ந்து செல்லுதல், குகன் சந்திப்பு, மாயமான், அனுமன் சுக்ரீவன் சந்திப்பு, வாலியைக் கொல்லுதல், இலங்கை செல்லல், மீட்டல், லவகுசா போர் அவர்களை மகனாக ஏற்றல் என்று இராமாயணத்தைத் தழுவியே நின்றாலும் பல இடங்களில் முரண்பாடும் வேறுபாடான கதை மாறல்களையும் கொண்டதாக அமைந்திருக்கிறது.

இந்திய நாட்டிற்குள் வழங்கப்படும் இராமாயணக் கதைகள் பெரும்பாலும் வேறுபடவில்லை. கம்போடிய நாட்டில் வழங்கப்படும் இராமாயணம் பல புதுமை களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. அந்த இடங்கள் சுவாரஸ்யமாக இருக்கின்றன. கம்போடிய இராமா யணத்தில் இராவணனுக்கு இரண்டு மனைவிகள் முதல் மனைவி மண்டோல்கிரிட், இரண்டாவது மனைவி அகிநட்? தியா. சீதை இராவணனுக்கு மகளாகப் பிறந்தவளாகவே காட்டப்படுகிறாள். அக்குழந்தையால் அழிவு வரும் என்றவுடன் பானையில் வைத்துக் கடலில் விடப்படுகிறாள் என்று கதை வருகிறது.

மண்டோதரிக்கு அண்ணனாகக் குரோங்கர் என்பவன் வருகிறான். இராவணனுக்குத் தங்கையாகச் சூர்ப்பனகை காட்டப்படவில்லை. மாறாக (குரோங்ரிப்) உறவுக்காரியாக வருகிறாள். இலங்கையில் சீதையைத் தேடிச் செல்லும் அனுமனின் வாலில் நெருப்பு பற்ற வைக்கப்படுகிறது. வாலில் பிடித்த நெருப்பை அணைக்கத் தெரியாத அனுமன் ஒரு துறவியிடம் சென்று தன் வாலில் உள்ள நெருப்பை எப்படி அணைப்பது என்று கேட்க அவர் புன்னகைத்துவிட்டு ‘உன் வாயின் உள்ளே வாலின் நுனியை வைத்தால் நெருப்பு அணையும்’ என்றார் (ப.19). அவர் சொற்படியே அனுமனின் வாலிலுள்ள நெருப்பு அணைக்கப்படுகிறது.

அரசவைக் கூட்டத்தில் இராணவனுக்கு அறிவுரை கூறிய விபீஷணனை இராவணன் செருப்பால் அடிக் கிறான் (ப.20). பலர் அமர்ந்திருக்கும் அவையில் அண்ணன் தன்னைச் செருப்பால் அடித்து அவமானப் படுத்திவிட்டானே என்று நினைத்து இராமனிடம் சேர்கிறான்.




**கம்போடிய இராமாயணம்**

ஆசிரியர்: மாத்தளை சோமு

***வெளியீடு: அறிவு பதிப்பகம் (பி) லிட்.,***

***16 (142) ஜானி ஜான் கான் சாலை,***

***இராயப்பேட்டை, சென்னை - 600 014***

***தொடர்புக்கு : 044 - 28482441***

***விலை: ₹ 70.00***

இராமனைத் திசைதிருப்ப மாயசீதை விடப் படுகிறாள். மாயசீதாவாக வருபவள் விபீஷணனின் மகள் புன்காய். மாயசீதாவை எரித்தபோது அதனுள் இருந்த புன்காய் வெளிப்படுகிறாள். அவளின்மீது அனுமன் காதல் கொள்கிறான். அதன் விளைவாக அவள் கர்ப்ப மாகிறாள்.

இலங்கைக்குப் பாலம் அமைக்கும்போது கடலில் கற்கள் போடப்படுகின்றன. இந்தக் கற்களைச் சோவனமச்சா கடலுக்குள் இழுத்துச் செல்கிறாள். போடப்பட்ட கற்களைத் தேடி அனுமன் கடலுக்குள் சென்று அதற்குக் காரணமான சோவனமச்சாவைக் காண்கிறான். அவர்களுக்குள் காதல் நிகழ்கிறது. சோவனமச்சா கர்ப்பமுற்றுக் குரங்கு உடலும் மீன் உடலுமான குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். இதற்கு மச்சானுப் எனப் பெயர் வைக்கின்றனர்.

போர்க்களம் செல்லும்முன் கும்பகர்ணன் தியானம் செய்கிறான். அதனை அனுமன் பெண் உருக்கொண்டு கலைக்கின்றான் (ப.30)

இறந்துபோன அரக்கர்களை எழுப்ப மண்டோதரி தவம் செய்யப்போகும் நேரத்தில் இராவணனைப் போல மாறிய அனுமன் மண்டோதரியோடு காதல் மொழி பேசுகிறான். தியானம் செய்யும் மண்டபம் சிதைக்கப் பட்டதைக் கண்ட இராவணன் நடந்தது குறித்துக் கேட்க மண்டோதரி உங்களைப் போல ஒருவன் வந்தான் எனக் கூறுகிறாள். அப்போது உன்மீது எந்தக் குற்றமும் இல்லை எனக் கூறுகிறான். மண்டோதரியை இராவணன் சந்தேகப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (ப.43)

இராவணனின் உயிர் துறவியிடம் இருப்பதாகக் காட்டுதல் (ப.45).

அனுமன் வைப்பாட்டிகளோடு அரச பூங்காவிற்குச் செல்வதாகக் காட்டப்பட்டுள்ளது (ப.51).

மீட்கப்பட்டு அயோத்திவந்த சீதையிடம் இராவணனைப் பற்றிப் பணிப்பெண்கள் கேட்க ஒரு சிறிய பலகையில் இராவணனை வரைகிறாள். அதனைப் பார்த்த பணிப்பெண்கள் வியக்கிறார்கள். அதனை அழிக் கிறாள் சீதை. அது அழியவில்லை. வேறு வழியின்றித் தன் படுக்கை அறையில் தன் தலையணைக்குக் கீழ் வைக்கிறாள். அதனைச் சோதித்த இலக்குவன் இராவணனின் உருவத்தைப் பார்க்கிறான். சீதையின்மேல் சந்தேகப்பட்ட இராமன் சீதையை வாளால் வெட்டிக் கொல்ல ஆணையிடுகிறான். இலக்குவன் சீதையை வெட்டப்போகும்போது வாள் மாலையாக மாறுகிறது. சீதையை உயிரோடு விடுகிறான் (ப.55).

மாயவேலைக்காக இராவணனிடம் சேர்ந்த அனுமனுக்குக் குரங்குப்படையை வென்றதற்காக இறந்துபோன தனது மகன் இந்திரசித்தின் மனைவி சோவன்கன்யுமாவைக் கொடுக்கிறான் (ப.46).

கோபித்துக்கொண்டு சென்ற சீதையைத் தேடி இராமன் செல்லுதல். இராமனைச் சீதை ஏற்க மறுத்தல். பழைய நிகழ்ச்சிகளையெல்லாம் நினைத்துப்பார்த்த சீதா நான் அயோத்தி மாளிகைக்கு வரவேண்டுமானால் இராமன் செத்திருக்க வேண்டும் எனக் கூறுகிறாள் (ப.68).

மீண்டும் சீதாவோடு சேரவேண்டும் என இராமன் விரும்பியபோது தன்னை மீண்டும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனக் கூறித் திருமணம் நடக்கிறது. மகன்களோடு ஆட்சியை நடத்துகிறான் இராமன் என நிறைவுபெறுகிறது கம்போடிய இராமாயணம்.

இந்திய இராமாயணங்களுக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாததாகக் கம்போடிய இராமாயணம் இருக்கிறது. பண்பாடு சார்ந்த நுட்பங்கள் இந்த இராமாயணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பண்பாட்டின் வேறுபாடு காரணமாகக் கற்பனைகள் சேர்த்துக் கதை வேறுவிதமாகச் சொல்லப்பட்டுள்ளது. இராமாயணக் கதையைத் தழுவி எழுதப்பட்டது என்றாலும் கம்போடிய மக்களின் வாழ்முறைகளைப் பதிவுசெய்துள்ளது. இந்த இராமாயணம் பல இடங்களில் மாறுபட்டு இருந்தாலும் மூன்று இடங்கள் தனித்தன்மையோடு விளங்குகிறது.


1. இந்திய இராமாயணங்களைப் போல இராமனைச் சித்தரிக்காமல் இராமனைக் குற்றம் உடைய வனாகக் காட்டுகிறது. அவன் நல்லவன் எனக் காட்டவில்லை.

2. இராவணன் தன் மனைவி அனுமனோடு இருந்தாள் எனத் தெரிந்தும் மண்டோதரியின் மேல் தவறு இல்லை என வெளிப்படையாகத் தெரிவிக்கிறான்.


3. அனுமன் பல பெண்களைத் திருமணம் செய்கிறான். அவர்களுக்குக் குழந்தைகளும் பிறக்கின்றனர். கம்போடிய ராமாயணத்தைப் பொறுத்தவரை அனுமன் அதிகமான பெண் களை மணந்தவனாகக் காட்டப்படுகிறான்.

இந்தப் புதுமைகள் கம்போடிய இராமாயணத்தைப் புதிதாகக் காட்டுகின்றன. மனத்திற்கு நெருக்கமான மொழிபெயர்ப்பாக இருக்கிறது. மொழிநடை கதை சொல்முறை இயல்பாக இருக்கிறது. இன்னும் நாடுகளில் வழங்கும் இராமாயணங்கள் இனிமேல் வெளிவரும் என்ற நம்பிக்கையை கம்போடிய இராமாயணம் வெளிப் படுத்தியிருக்கிறது. கம்போடிய நாட்டார்சார் மரபினை வெளிப்படுத்துவதாக இந்நூல் அமைந்திருப்பது முக்கிய விடயமாகும். ●

# நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்





₹ 100/-





₹ 140/-





₹ 150/-




₹ 155/-




₹ 250/-




₹ 150/-

# தமிழ் மரபுக் கலை பயிற்சிப் பட்டறை





காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் சிங்கப்பூர் ஏ.கே. நாடகக் கழகமும் இணைந்து 21.11.2017 முதல் 28.11.2017 வரை - எட்டு நாள்கள், தமிழ் மரபுக்கலைகள் பயிற்சிப்பட்டறை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. 28.11.2017 அன்று பல்கலைக்கழக வெள்ளிவிழா அரங்கில் மாலை 3 மணிக்கு நடைபெற்ற நிறைவு விழாவில், தமிழ்த்துறைத் தலைவரும் சாகித்திய அகாதெமி எழுத்தாளருமான பேரா. பா.ஆனந்தகுமார் வரவேற்றுப் பேசினார். துணைவேந்தர் பேரா. சு.நடராசன் அவர்கள் தலைமையேற்றுப் பயிற்சி பெற்றோருக்குச் சான்றிதழ் வழங்கினார். அவர் பேசுகையில், "குரலிசை, தவில், நாதசுரம், கரகம் போன்ற நாட்டுப்புறக் கலைகளுக்கான சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகள் வெளிநாட்டவரும் கற்கும்வகையில் நம் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்படும்; புதிய நாடக அரங்கம் தமிழ்த்துறையுடன் இணைந்து உருவாக்கப்படும்" என்று குறிப்பிட்டார். இப்பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்ட ஏ.கே. நாடகக்கழக மாணாக்கர் அனைவரும் தாம் கற்றுக்கொண்ட கலைகளை (கரகம், களியல், ஒயில், பறை) மேடையில் அரங்கேற்றம் செய்தனர்.

பல்கலைக்கழகப் பதிவாளர் பேரா. வி.பி.ஆர்.சிவக்குமார், தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக்கலைகள் புலத்தலைவர் பேரா. வ.இராசரத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மதுரை கூடல் கலைக்கூடம் கலைப்பயிற்றுநர் முனைவர் ஆ.அழகுசெல்வம், ஏ.கே. நாடகக்கழக இயக்குநர் திருமதி ராணி கண்ணன் மற்றும் பயிற்சி பெற்றோர் அனைவரும் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.


தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக நாடகவியல் துறையின் மேனாள் தலைவரும் மதுரை நிஜநாடக இயக்கத்தின் நிறுவனருமான பேரா. மு.இராமசாமி அவர்கள் நிறைவுப்பேருரை ஆற்றினார். அப்போது அவர், 1978இல் இப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நாடகப்பயிற்சிப்பட்டறைதான் தன்னை நாடகக்காரராக மாற்றியது என்றும் இந்தப் பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டு கற்றுக்கொண்ட சிங்கப்பூர் மண்ணின் மைந்தர்கள் தேர்ந்த கலைஞர்களாக உருவாவார்கள் என்றும் அவர்களின்வழி இக்கலைகள் உலகமெங்கும் பரவலாகும் என்றும் உரையாற்றினார்.

ஏ.கே.நாடகக்கழகத்தின் மற்றொரு இயக்குநரான திருமதி கலா ராமசாமி அவர்கள் நன்றி கூறினார்.

# நியூ செஞ்சுரியின் ரொமிலா தாப்பர் நூல்கள்




₹ 300/-




₹ 750/-

இந்து ராஷ்டிர
பெருங்கனவில்
தலைகால் புரியாமல்,
ஆட்சியும் அதிகாரமும்
கையிலிருக்கின்றது
என்ற மமதையில்
அடாவடித்தனமான
கதையாடல்களைப்
பொதுவெளியெங்கும்
நிரப்பும்
வெறிக் கூச்சலுக்கு எதிரான,
ரொமிலா தாப்பரின் சிறந்த
அறிவார்ந்த நூல்கள் இவை.
ஜனநாயகச் சக்திகள்
ஒவ்வொருவரின் கரங்களில்
இருக்க வேண்டிய
நூல்கள் இவை.
சமகாலப்
போராட்டங்களுக்குப்
பயன்படுகின்ற
நூல்கள் இவை.

# சாதியச் சமூகம்: குடிப்பிள்ளை (சாதிப்பிள்ளை) தோற்றம் வரலாறு ஓர் ஒப்பீட்டு ஆய்வு

தீ. ஹேமமாலினி



ஒவ்வொரு சாதியச் சமூகமும் தன்னை வரலாற்றில் நிலைநிறுத்திக் கொள்ளவும், தன் சாதியப் பெருமைகளை தக்க வைத்துக் கொள்ளவும் காலந்தோறும் புராணங்கள், இதிகாசங்கள் மூலம் தன் சமூகத்தை கட்டமைத்துக் கொள்கிறது. இந்த முறையானது ஒரே சாதி என்று இல்லாமல் எல்லா சமூகத்திற்கும் பொருந்தி வருவதை நம்மால் காணமுடிகிறது. அதாவது உயர் சமூகமான பிராமணர்கள் முதல் அடித்தட்டு சமூகமான சூத்திரர் சமூகம் வரை ஏதோ ஒரு புராணத்தின் வழி தன்னைத் தக்க வைத்துக் கொள்வதோடு அதை காலந்தோறும் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்கிறது.

இந்தப் புராணங்கள் அனைத்தும் கடவுள் சார்ந்தோ அல்லது மூதாதையர்கள் சார்ந்தோ அமையும். இதை காலந்தோறும் நிலைநிறுத்திக் கொள்ள ஒவ்வொரு சாதியும் தன் சாதியைச் சேர்ந்த அனைவரும் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படுகிறது. இதற்கு மிக முக்கிய காரணம் என்னவெனில் இந்த குடும்பத்தில் உள்ளவர்கள் மட்டும் தான் அந்த சாதியின் புராணம் மற்றும் இதிகாசங்களை தொடர்ந்து வாய் மொழி மூலமாக அந்த சமுகத்தைப் போற்றிப் புகழ்ந்து பாடிக் கொண்டு வருவார்கள். இதன் முக்கிய நோக்கம் என்னவெனில் அவர்களின் சாதியையும், சாதிப் பெருமையும் அழியாமல் கண்ணும் கருத்துமாய் கட்டிக் காத்து வந்தனர். இக்குடும்பத்தின் வேலை என்னவெனில் ஒரு ஆண்டில் குறிப்பிட்ட மாதம் தோறும் அந்த சாதியின் புகழைப் போற்றிப் பாடுதல் இதன் நோக்கம். அந்த வீட்டினர் அவர்களுக்கு முன்பு காலத்தில் நெல் வகைகள், தானியம் கொடுத்தனர். காலப்போக்கில் இன்று பணம், அல்லது வேறு பொருட்கள் வாங்கிக் கொள்கின்றனர். முக்கியமாகக் குடிப் பிள்ளைகள் நாடோடியின மக்களாக வாழும் கலைமரபினர் இவர்கள் தெலுங்கில் ‘சாதிக்கீர்த்தலு’ என்றும் தமிழில் ‘சாதிப் பிள்ளை’ என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் சார்ந்த சாதியும், சாதிப்பிள்ளைகள் பற்றிய விவரங்கள் பற்றி மானிடவியலார் பக்தவத்சலபாரதி வழி காணலாம். இனி ஒவ்வொரு சாதிக்கான குடிப்பிள்ளை என்பதைக் காண்போம்.

| | சாதி | - | சாதிப்பிள்ளை |
|---|---|---|---|
| 1. | கொங்கு வேளாளர் | - | வேளாளர் முடவாண்டி |
| 2. | வன்னியர் | - | நோக்கர் |
| 3. | கோமட்டி | - | மைலாரி |
| 4. | பேரிச்செட்டி | - | வீரமுஷ்டி |
| 5. | கைக்கோளர் | - | நட்டுக்கட்டாத நாயன்மார் (பொன்னம்பலத்தார்) |
| 6. | பத்மசாலே | - | இசைருக்கு பட்ராசு |
| 7. | பிராமணர் | - | பீதாம்பர் ஐயர் |
| 8. | ரெட்டி | - | பட்ராசு |
| 9. | முதலியார் | - | சுக்கிலவன் |
| 10. | யாதவர் | - | இடக்கூத்தாடி |
| 11. | சக்கிலி | - | பொம்மநாயுடு |
| 12. | பறையர் | - | பறைத்தொம்பன் |
| 13. | மாதிகர் | - | மாதிகமாஸ்தி (ஜங்கம்) |
| 14. | மாலா | - | மாலமங்கி |
| 15. | இசுலாமியர் | - | பக்கீர் |

குறிப்பாக, இங்கு இரண்டு சாதிப்பிள்ளைகளின் தோற்றத் தொன்மங்களை ஒப்பீட்டு ஆய்வு செய்யப் படுகிறது. ஒன்று ‘அருந்ததியர் சாதிப்பிள்ளை’ மற்றொன்று ‘வன்னியர் சாதிப்பிள்ளை’ இவர்களுடைய தோற்றத் தொன்மத்தை ஆய்வு செய்யும் போது இவருடைய தோற்றம் ஒரு சில பெயர் மாற்றங்களோடு மட்டுமே காணப்படுகிறது. மற்றபடி இவ்விரண்டும் ஒரே மாதிரியாக இருப்பதை காணமுடிகிறது.

### அருந்ததியர் சாதிகளின் சாதிப்பிள்ளை தோற்றத் தொன்மம்

‘கத்தளவார்’ என்று அழைக்கப்படும் ஒரு சாதியே அருந்ததியர்களின் சாதிப்பிள்ளை. இவர்கள் குடும்பமாக அருந்ததியர் வாழும் தெருவுக்கு வந்து அங்குள்ள சத்திரத்திலோ அல்லது மரத்தடியிலோ தங்குகின்றனர். உணவு வேளையில் அருந்ததியர் வீடுகளுக்குச் சென்று உரிமையுடனும், அதிகாரத்துடனும் உணவு கேட்கின்றனர். உணவு இல்லை என்று எந்த அருந்ததியக் குடும்பத் தினரும் சொல்வதில்லை. உணவு கொடுக்கின்றனர். ‘சமைக்கிறோம் சிறிது நேரம் கழித்து வா’ என்று சொன்னால் கூட, ‘சமைக்க ஏன் இவ்வளவு நேரம். நீ வெளியே போ. நான் சமைக்கிறேன்’ என்று அதிகாரத் தோரணையில் கூறுகின்றனர்.

இவர்களின் வாகனம் எருமை மாடு. இதன் மீதே வருவார்கள். ஒரு சில வாரங்கள் அந்தக் கிராமத்தில் தங்கி வித்தை காட்டுவர். பின் அடுத்த ஊருக்குச் செல்கின்றனர். அவ்வாறு செல்வதற்கு முன்பாக அவ்வூர் நாட்டாண்மை ஒவ்வொரு வீட்டிலும் குடும்பத்திற்கு இவ்வளவு என்று ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயம் செய்து, அதை வசூலித்துக் கத்தளவார்களிடம் கொடுக்க, அவர்கள் அத் தொகையைப் பெற்றுக் கொண்டு அடுத்த அருந்ததியர் கிராமத்திற்குச் செல்கின்றனர்.

### கத்தளவார் சாதிப்பிள்ளை தோற்றத் தொன்ம கதைகள்

ஒரு முறை திருமலைநாயக்கர் மதுரையில் ரதத்தில் சென்ற போது ஒரு குறிப்பிட்ட இடத்தில் வீதியின் நடுவில் ரதம் நின்றுவிட்டது. எவ்வளவோ முயற்சி செய்தும் ரதம் ஓடவில்லை. எனவே சோதிடர்களை அழைத்து ரதம் ஓடாததற்குக் காரணம் கேட்டார். அப்போது சோதிடர்கள் அரசரிடம் அந்த இடத்தில் ஒரு முனி இருப்பதாகவும், அந்த முனிதான் தேர் ஓடுவதைத் தடுப்பதாகவும், அந்த முனியை விரட்ட வேண்டும் என்றால் தலைக்கர்ப்பம் அதுவும் நிறைமாதக் கர்ப்பமாக இருக்கும் ஒரு பெண்ணை நரபலியிட வேண்டும் என்றும், அப்படிப் பலியிட்டால் தேர் ஓடும் என்றும் கூறினார்கள்.

உடனே திருமலை நாயக்கர், தலைக்கர்ப்பமாக இருக்கும் அருந்ததியப் பெண்ணைப் பிடித்து வந்து நரபலி கொடுக்கும்படி காவலர்களுக்குக் கட்டளை

யிட்டார். இந்த உத்தரவைக் கேட்ட அருந்ததியர்கள் பயந்து நகரத்தை விட்டே ஓடிவிட்டனர். ஓட முடியாத சிலர் பயத்தில் ஒளிந்து கொண்டனர். காவலர்கள் நிறை மாதக் கர்ப்பிணிப் பெண்ணைப் பிடிக்க முடியாமல் திகைத்தனர். அப்போது ஒரு கூத்தாடி தனது நிறைமாதக் கர்ப்பிணி மகளுடன் வந்தார். அவளைத் தேருக்கு முன்பாகப் பலியிட்டு, அவள் ரத்தத்தைத் தேரைச் சுற்றித் தெளித்தார் உடனே தேர் ஓடியது.

மகிழ்ந்த திருமலை நாயக்கர், அந்தக் கூத்தாடியைப் பார்த்து என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர் தலைமுறை தலைமுறையாய் அருந்ததியர்கள் தங்களுக்கு உணவுக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். அதோடு பணமும் கொடுக்க வேண்டும். அப்படியே யாராவது கொடுக்கவில்லை என்றால் அவர்களுக்குக் காராமணிப் பசுவின் கழுத்தை அறுத்த பாவமும், தலைப்பிள்ளை சூலியைக் கொன்ற பாவமும் சேரும் என்றார். கூத்தாடியின் விருப்பப்படியே திருமலை நாயக்கர் பட்டயம் எழுதிக் கொடுத்துவிட்டார். எனவே தான் அவர்கள் பரம்பரை பரம்பரையாய் அருந்ததியர் களிடம் வந்து உரிமையுடன் உணவும், பணமும் கேட்டுப் பெறுகின்றனர். இந்தக் கூத்தாடிகள் தான் கத்தளவார்கள்.

ஒரு காலத்தில் கத்தாளவார்கள் பிணம் எரிப்பது, புதைப்பது, செத்த மாட்டைத் தூக்குவது, களம் புடைப்பது போன்ற காணி வேலைகளைச் செய்தனர். இந்தக் காணி உரிமையை அருந்ததியர்கள் கத்தளவார் களிடமிருந்து பெற்றனர். தங்களது காணி உரிமையை விட்டுக் கொடுத்ததற்குப் பிரதிபலனாகக் கத்தளவார்கள் உணவும், பணமும் அருந்ததியர்களிடமிருந்து பெறு கின்றனர் என்ற கதையும் உண்டு.

முற்காலத்தில் அருந்ததியருக்கு மகனாகக் கத்தளவார் பிறந்தார். சிறிது காலம் மகனை வளர்த்து விட்டு, அவனை அனாதையாக அருந்ததியர் தெருவில் விட்டுவிட்டார். எனவே, மகனுக்கு உரிய உரிமையைப் பெறுவதற்காகக் கத்தளவார்கள் வந்து அருந்ததியர் களிடம் உணவும், பணமும் உரிமையுடன் கேட்டுப் பெறுகின்றனர். கொடுக்காவிட்டால் வீட்டில் நுழைந்து தேவைப்படுவதை எடுத்துச் செல்கின்றனர். மேலும் இவர்கள் மகன் என்ற பட்டயத்தைக் கத்தளவார்கள் வைத்திருப்பதாக அருந்ததியர்கள் நம்புகின்றனர்.

கத்தளவார்கள் பற்றி வெவ்வேறு கதைகள் இருந்தாலும் இவர்களின் வாழ்க்கை முறை ஒன்று போல இருக்கிறது. கத்தளவார்கள் தங்களுக்குள் குறிப்பிட்ட பகுதியைப் பிரித்துக் கொள்கின்றனர். அந்தப் பகுதிக்கு என்று குறிக்கப்பட்டவர்கள் வருடம் ஒரு முறை குடும்பத்துடன் சென்று காணி வசூலிக்கின்றனர். இடம் மாறிச் சென்று வசூலிக்கக் கூடாது என்று தங்களுக்குள் கட்டுப்பாடு வைத்திருந்தனர்.

இவர்கள் அருந்ததியக் குடும்பங்களில் மட்டுமே உண்கின்றனர். பறையர்கள், தேவேந்திர குல வேளாளர்கள் போன்ற மற்ற சாதியினரிடம் செல்வதில்லை, உணவும் உட்கொள்வதில்லை. இவர்கள் காலில் செருப்பு அணி வதில்லை. பாயில் அமர்வதோ, படுப்பதோ இல்லை. துணியைத் தான் பயன்படுத்துகின்றனர். அருந்ததியர்கள் வாழும் தெருவில் உள்ள சத்திரம், சாவடி, மரத்தடி போன்ற இடங்களில் தங்குகின்றனர். காணி வாங்க வரும் சமயத்தில் ஏதாவது வேலை செய்யச் சொன்னால் செய்கின்றனர். இவர்களின் தொழில் வித்தை காட்டுவது, அதற்கான பணத்தை அருந்ததியர்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர். அடுத்து சுருக்குப்பையை தைத்து விற்கின்றனர். அருந்ததியர்கள் சம்சாரிகளை 'சாமி' என்று அழைக்கின்றனர். அதே போலக் கத்தளவாளர்கள் அருந்ததியர்களைச் 'சாமி' என்று அழைக்கின்றனர். இவர்கள் தெலுங்கு பேசும் அருந்ததியர்கள்.

கத்தளவார்களது இனம் பற்றியும், இவர்களுக்கு அருந்ததியர்கள் செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும் மூன்று செப்புப் பட்டயங்களில் பொறிக்கப் பட்டிருப்ப தாகவும், அந்தப் பட்டயங்களில் ஈரோடு பக்கத்தில் உள்ள கவுந்தம்பாடி என்ற ஊரில் வித்தைக்காரன் மகாலிங்கம் வீட்டில் இருப்பதாகவும் கூறுகின்றனர். அருந்ததியர்களைப் போன்று தாசரி - ஜான என்ற கிளைகள் இவர்களுக்கு உண்டு. குலத் தெய்வம் சக்கம்மாள், மதுரை வீரன். கத்தளவார்கள் எங்கெங்கு இருந்தாலும் மாசிப்படைப்பிற்கு கவுந்தம்பாடிக்கு வந்து சக்கம்மாளை வழிபடுவர். இந்நிகழ்வில் தான் பெண் பார்ப்பது, நிச்சயம் செய்வது, திருமணம் நடத்துவது போன்ற சமூகச் செயல்களையும் செய்கின்றனர். மதுரை வீரன் நினைவாக மதுரை வீரன் பந்தயம் கட்டி வீர விளையாட்டு விளையாடுகின்றனர்.

### வன்னியர் சாதிக் குடிப்பிள்ளை தோற்றமும் வரலாறும்

வன்னியர்களின் சாதிய உயர்வினைச் சொல்லிக் கொண்டும் அவர்களின் வாழ்வியல் சடங்குகளில் பங்கெடுத்துக் கொண்டும் வாழும் நாடோடிகளே வன்னியச் சாதிப்பிள்ளைகள். இவர்கள் ஆண்டு தோறும் வன்னியர்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று தங்கள் பிழைப்பிற்குத் தேவையான நெல், தானியங்கள், பணம், பிற பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் என எழுதி வைக்கப்பட்ட செப்புப் பட்டயத்தின்படி வன்னியர் வீடுகளுக்கு சென்று வரும்படி பெற்று வாழ்கின்றனர். 'வன்னிய ஆடவனுக்கும் தெலுங்குச் சாதிப் பெண்ணுக்கும் பிறந்த இவர்களை, வன்னியர்கள் முதலில் சாதி விலக்குச் செய்து சொத்துரிமைகளை மறுத்து, அதன் பின்னர் தேர்த் திருவிழாவின் போது வன்னியரின் மானத்தைக்

காப்பாற்றியதால் தம் பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டு 'சாதிப்பிள்ளை' என அழைத்து வருகின்றனர்.

வன்னியர்களுக்கான சாதிப்பிள்ளைகள் 'நோக்கர்கள், சாதிப்பிள்ளைகள்' என அழைக்கப்படுகிறார்கள். கடலூர் வட்டாரப் பகுதியில் வாழும் இவர்கள் திருமணம் போன்ற சடங்குகளின் அழைப்பிதழ்களில் தங்களது பெயருக்குப் பின்னால் 'சாதிப்பிள்ளை' எனும் பெயரைச் சுருக்கி பிள்ளை என அச்சிட்டிருக்கிறார்கள். வன்னியர்கள் இவர்களைச் சாதிப்பிள்ளை, நோக்கர், குடிப்பிள்ளை, முன்னோடும் பிள்ளை, ஒண்டிப்பிலி (ஒண்டி புலி) என அழைக்கின்றனர். கடலூர், சேலம், தருமபுரி, தஞ்சாவூர் மாவட்டப் பகுதிகளில் இவர்கள் சாதிப்பிள்ளை என்றும் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னைப் பகுதிகளில் 'நோக்கர்' என்றும் அழைக்கப்படுகின்றனர்.

வன்னியச் சாதிப்பிள்ளைகளை பற்றி நான் களப் பணியின் மூலம் சேகரித்த செய்திகள் இன்னும் சில: இவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கென்று தனித்தனியே சில கிராமங்களை தேர்ந்தெடுத்துக் கொண்டு அதன் முலம் வருவாயை ஈட்டிக் கொள்கின்றனர். உதாரணமாக திண்டிவனம் அடுத்த பகுதியில் உள்ள ஏதாநெமிலி எனும் ஊரில் சந்தித்த வன்னியக் குடிப்பிள்ளை கூறிய செய்தி பின்வருமாறு: எங்கள் வீட்டிற்கு என்று 36 ஊர்கள் பிரித்து கொடுத்துள்ளனர். எங்கள் முன்னோர் கூறியபடி, நாங்கள் அறுவடைக் காலங்களில் சாதிப் பிள்ளை வேடம் அணிந்து குதிரையின் மீது பயணம் செய்து எங்களுக்கு பிரித்துக் கொடுத்த பகுதியில் வருடத்திற்கு ஒரு முறை சென்று தானியம், அல்லது பணம் வாங்கி கொண்டும் வித்தை காட்டுவதும் எங்கள் பழக்கம். முக்கியமாக வன்னிய சாதியின் புராண இதிகாசங்களை புகழ்ந்து பாடுவது வழக்கம். மேலும் இவர்கள் வன்னியர் வீட்டில் திருமணம் மற்றும் சாவு நிகழ்வுகளில் கூத்தாடிச் செல்வது இவர்களின் முக்கிய தொழிலாகும். கீழே கொடுக்கப்பட்ட கதைகளில் சில மாற்றங்களோடு அப்படியே கூறினார்கள். இவர்கள் இறந்த பின்பு இவர்களின் மகன்கள் தொடர்ந்து இந்த தொழிலை தொடர்ந்து செய்து வருவார்கள். மற்ற காலங் களில் துணைத் தொழிலான பித்தளை பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவதை தொழிலாகச் செய்து வருவார்கள். இவர்கள் கூறுகையில் நாங்கள் இல்லையெனில் இன்று வன்னியர் என்ற சாதி கிடையாது. எங்கள் மூதாதையர் களால் தான் வன்னியர் குலம் தழைத்தது என்கின்றனர். அவர்களுக்கும் வன்னியர்களும் திருமண உறவை பற்றி கேட்கையில் சாதிப்பிள்ளையாகிய நாங்கள் 'இந்த சாதிக்கு உரிய பிள்ளை' ஆகையால் பங்காளி உறவை கொண்டவர்கள் வன்னியர்கள். பெண் எடுத்து கொடுக்கும் பழக்கம் இல்லை என்றனர் (சுந்தரம்: வயது: 61).

வன்னியர்களின் தோற்றத் தொன்மக் கதை வாய் மொழி வழக்காறு இரத்தின புகழேந்தி எழுதிய கட்டுரையைத் தொடர்ந்து எழுதிய விஷ்ணு தாசர் எழுத்தில் இருந்து மீண்டும் அப்படியே இங்கு கையாளப் பட்டுள்ளது. வன்னிய சாதிப்பிள்ளைகளின் தோற்றத் தொன்மம் சில மாற்றங்களுடன் காணப்பட்டாலும் பொதுத் தன்மையில் ஒன்றிணைவதாகும். இவர்களின் வரலாறு பற்றி அறியப்படும் கருத்துகள் வருமாறு:

வாதாபி எனும் அசுரன் தேவர்களைச் சிறைபிடித்து துன்புறுத்தியதால் அவனை அழிப்பதற்கு சிவன் ஒரு மகனை உற்பத்தி செய்வதற்காக சம்பு முனிவரை அழைத்து வேள்வியைச் செய்தார். வேள்வியின் வெப்பத்தால் சிவனுக்கு வியர்வை தோன்றியது. அந்த வியர்வையைக் கையால் அள்ளி வேள்வியில் முனிவர் போட்டார். அதிலிருந்து வீரவன்னியன் குதிரையோடு உதித்தான். அவனுக்கும் இந்திரனின் மகள் மந்திர மாலைக்கும் திருமணம் செய்விக்கப்பட்டது. அவர் களுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் தான் அக்னி வன்னியன், கிருஷ்ண வன்னியன், பிரம்ம வன்னியன், சம்பு வன்னியன்.

மேற்குறிப்பிட்ட நான்கு வன்னியர்களில் அக்னி வன்னியன் தெலுங்கு பேசும் நாயக்கப் பெண்ணைச் சேர்த்துக் கொண்டான். சேர்ந்த வயிற்றுப் பிள்ளைகள் (வைப்பாட்டி மக்கள்) என்பதால் இவர்களுக்குச் சொத்தில் பங்கு தரவில்லை. சொத்தில் பங்கு கிடைக்காத இவன் கொச்சி மலையாளம் போய் மாந்திரிகம் கற்றுக்கொண்டு ஊமை ராஜாவிடம் மந்திரியாக இருந்தான். அங்கேயே ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு வாழத் தொடங்கினான். அதன்பின் அவள் நிறைமாத கர்ப்பிணியாக இருந்தாள்.

இத்தருணத்தில் காஞ்சிபுரம் காமாட்சியம்மனுக்கு வன்னியர், முதலியார், ஆரிய வைசியர், தேவேந்திரப் பள்ளர் எல்லோரும் சேர்ந்து தேரோட்டம் நடத்தினர். இதில் வன்னியர்கள் தேரோட்டம் நடத்தும் பொழுது அவர்களின் எல்லையான 18 வீதியைத் தாண்டி தேர் சேணியர் வாழும் வீதிக்குச் சென்ற பொழுது சேணியன் சிம்மபுலி அனுமந்தன் தனது மந்திர சக்தியால் தேரை நிறுத்திவிடுகிறான். வன்னியர்கள் எல்லோரும் சேர்ந்து தேரை இழுத்துப் பார்க்க தேர் நகரவே இல்லை. யானைகளைக் கட்டித் தேரை இழுத்தனர். என்ன செய்தும் தேர் நகரவே இல்லை. சேணியர்கள் தேர் தங்கள் தெருவில் நின்று விட்டதால் அவர்களுக்குத் தொந்தரவாக இருக்கிறதென்று முறையிட்டனர். அப்போது ஒரு சின்ன பெண்ணுக்குச் சாமி வந்து, 'ஒங்க இனத்துல ஒருத்தன் கொச்சி மலையாள தேசத்துல இருக்கான்: அவன் மந்திர, தந்திரமெல்லாம் கத்துருக்கான்: அவன அழச்சிக்கிட்டு வந்தீங்கன்னா, அவனாலதான்

இந்த தேர ஓட்ட முடியும்"ன்னு சொல்ல, கொச்சி மலையாளம் போயி ஊமராஜாவின் மந்திரியான ஒண்டுபுலி அனுமந்தனை அழைத்து வருகின்றனர்.

அவன் புலியின் வாயைக் கட்டி, அதன் மேல் தன் நிறை மாதமாக இருக்கும் தன் மனைவியை ஏற்றிக் கொண்டு வருகிறான். வந்து பார்த்தால் தேர்ச் சக்கரங்கள் பூதங்களால் கட்டு போட்டிருப்பதை அறிந்தான். இவன் எல்லா வகையாக மந்திரங்களையும் செய்து பார்த்தான். ஒன்றும் முடியவில்லை. என்ன செய்வதென்று அறியாமல் படுத்துத் தூங்கி விட்டான். அப்போது காமாட்சியம்மன் கனவில் வந்து பூதங்களை ஓட்ட வேண்டுமானால் நிறைமாத கர்ப்பிணியை (தலைச்சன் பிள்ளைக்காரி) பலியிட்டால் தான் தேரை நகர்த்த முடியும் என்று கூற, இதனை யார் ஒத்துக் கொள்வார்கள் என்று யோசித்தான். பிறகு, தன் மனைவியையே பலி கொடுக்கிறேன் என்று முடிவு செய்து தன் மனைவியிடம் கேட்கிறான். அவளும் ஒத்துக்கொண்டு ஒரு நிபந்தனையைக் கூறுகிறாள். 'நிறைமாத கர்ப்பிணையைப் பலி கொடுக்க நான் சம்மத்திக்கிறேன். ஆனால் பலி கொடுத்தபின் என்னை நடுவீட்டுத் தெய்வமாக (காமாட்சியம்மனாக) விளக்கேற்றி வைத்து வணங்க வேண்டும் என்று கேட்டாள். எல்லோரும் சரி என்று ஒத்துக் கொண்டனர். வன்னியர்களுக்குக் காமாட்சி அம்மன் விளக்கைக் கொடுத்ததே நாங்கள் தான். அதனால் ஒவ்வொரு வீட்டிலும் காமாட்சி அம்மன் விளக்கு இருக்கிறது. பெண்களுக்குக் காமாட்சியம்மன் விளக்கு சீர் வரிசையாகக் கட்டாயம் கொடுப்பார்கள் என்கின்றனர் சாதிப்பிள்ளைகள்.

அதன் பின் அவளைக் காவு (பலி) கொடுத்தான். பலி கொடுத்தவுடன் பூதங்கள் எல்லாம் விலகி ஒடி விட்டன. அந்தத் தேரை அவன் ஒருவனே இழுத்து வந்து சேர்த்தான். வன்னியர்கள் எல்லோருமாக எங்கள் மானத்தைக் காப்பாற்றிய உனக்கு எது வேண்டுமோ அதைக் கேள் நாங்கள் தருகிறோம் என்று கூறினார்கள். எனக்கு எதுவும் வேண்டாம். என்னை உங்கள் சாதியில் ஒருவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என கூறினான். அன்றிலிருந்து வன்னியர்கள் இவன் நமது 'சாதிப்பிள்ளை' என ஏற்றுக்கொண்டு, வன்னியர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் சென்று வரும்படி (வசூல்) வாங்கிக் கொள்ளலாம் என்று அறிவித்தார்கள். சாதிப்பிள்ளைகள் வரும்படி அரிசி, 1/4 வராகன் பணம், வேட்டி, துண்டு எல்லாம் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்கள். இதன்படியே பட்டயமும் எழுதிக் கொடுத்தார்கள். அன்றிலிருந்து அவர்கள் கொடுத்த 32 விருதுகளுடன் அவர்களுடைய 18 பட்டங்களையும் சேவித்து வருவதாகக் கூறுகிறார்கள்.

முதலில் இரண்டு கதைகளுக்கும் ஒற்றுமை என்று பார்த்தால் தேர் ஓடாமல் இருப்பது தான். இரண்டாவது ஒற்றுமையை பார்த்தால் கர்ப்பிணி பெண்ணை பலி கொடுத்தல் பிறகு இரத்தத்தை தேர் மீது தெளித்து தேர் நகர்ந்து செல்லுதல், பலி கொடுத்த பின் தன் சாதியோடு மீண்டும் இணைதல், தன் சாதியச் சமுகத்தோடு ஒன்றிணைந்து ஆண்டுதோறும் அந்தந்த சாதியின் புகழைப்பாடி வித்தை காட்டுதல், அவர்களிடமிருந்து மட்டுமே தானியம், உணவை பெற்றுக் கொள்ளுதல் மற்ற சாதியிடமிருந்து நீர், உணவைத் தவிர்த்தல், அவர்களின் உரிமை மற்றும் கடமைகளை பட்டயம் மூலம் எழுதி வாங்குதல் இன்னும் பல ஒற்றுமை இருப்பதை காணமுடிகிறது.

இவற்றை பார்க்கும்பொழுது ஒரு சாதியச் சமூகம் மற்ற சமூகத்தை பார்த்து கற்றுக் கொள்ளல் (போலச் செய்தல்) என்ற நிகழ்வை தெளிவாக்குகிறது. ஒட்டு மொத்தமாக பார்க்கும் பொழுது கதைகளில் சாதியக் கலப்பு நிகழ்ந்ததால் சாதியக் கலப்பு நிகழ்ந்தவர்களை சாதியை விட்டு வெளியே அனுப்பியும் பிறகு தன் சாதியில் மீண்டும் சேர்த்துக் கொண்டும் அவர்களின் வாயிலாகவே சாதியின் இதிகாசங்களையும் புராணக் கதைகளும் பரப்ப சொல்லுகின்றன. மேலும் தங்கள் சாதியை வலிமையாக்கிக் கொள்ளவும் இவர்களை காலந் தோறும் அந்தந்த சாதி மக்களிடம் மனதில் பதிய வைத்துக் கொள்ள புராணம், இதிகாசங்களை மீண்டும் நிகழ்த்திக் காட்டுகின்றன. இதில் சாதியத் தன்மையை மேலும் மேலும் வலிமை அடையும் நிகழ்ச்சியாக பார்க்க முடிகிறது.

இது ஒருபுறம் சாதியக் கலப்பு செய்தவர்களை தண்டிக்கவும், மறுபுறம் அவர்களால் மீண்டும் தங்கள் சாதிய பெருமையை நிலைநாட்டிக் கொள்ளவும் ஏற்பட்ட நிகழ்வு தான் சாதிப்பிள்ளைகளின் வரலாறாக பார்க்க முடிகிறது. குறிப்பாக கீழ்நிலையில் இருக்கும் சாதிப்பிள்ளைகள் கூட மற்ற உயர் சாதிகளிடமிருந்து தண்ணீர், உணவை வாங்குவது தடை செய்ய பட்டிருக்கிறது. இது சாதிய தூய்மையை தக்க வைத்துக் கொள்ள விழைகிறது. மீண்டும் சாதியக் கலப்பு ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்கிறது. இது சாதியத்தை கூர்மையாக்குகிறது என்பது மிகவும் தெளிவாகிறது. சாதிக் கலப்பு செய்தால் நிகழும் தண்டணையாக வெளிப்படையாக உணர்த்துகிறது. இது சாதியில் இருப்பவர்களுக்கு தங்களும் குற்றம் செய்தால் இதே தண்டனை என்பதை வெளிப்படையாக மற்றவர் களுக்கு உதாரணமாக காட்டப்படுகிறது. தற்காலத்தில் சாதிப்பிள்ளைகள் சிலர் தங்கள் குலத் தொழிலை கைவிட்டு காலப்போக்கில் வேறு பல தொழில்களில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது. ●



# இதிகாச மறுவாசிப்புகள்!

சித்தார்த்தன் சுந்தரம்

**ந**ம் நாட்டின் ஆதி இதிகாசங்களான ராமாயணம், மகாபாரதம் இன்றைக்கு 'மறு உருவம்' பெற்று புத்தகச் சந்தையில், குறிப்பாக ஆங்கிலப் புத்தகங்கள், சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கின்றன. வால்மீகி, வியாசரால் இந்த இதிகாசங்கள் எழுதப்பட்டிருந்தாலும் வால்மீகி ராமாயணம் பல நாடுகளில் அந்தந்த நாட்டு கலாச்சாரத்திற்கேற்ப சில இடைச்செருகல்களைக் கொண்டு பலரால் எழுதப்பட்டும், நடிக்கப்பட்டும் வருகின்றன. அது போல மதம்/சமயத்திற்கேற்றவாறு ஜெயின் ராமாயணம், சீக்கிய ராமாயணம் எனப் பல வகைகளிலும் இந்த இதிகாசங்கள் உலா வந்து கொண்டிருக்கின்றன.

'ஏற்கனவே சொல்லப்பட்ட கதையை மீண்டும் மீண்டும் படித்து அக்கதை மாந்தர்கள் பேசிய, பேசாமல் விட்ட விஷயங்களை வைத்து அக்கதையை ஒட்டி வேறொரு கதையை எழுதுவது மறுகூறல் (எழுத்தாளர் பார்வையில்) / மறுவாசிப்பு (வாசகரின் பார்வையில்) என அழைக்கப்படுகிறது.

'புத்தகம் பேசுது' என்கிற மாத இதழில் வெளிவந்த 17 கட்டுரைகள் புத்தக வடிவத்திற்கென்று சற்றே விரிவாக எழுதப்பட்டு இந்நூலில் தரப்பட்டுள்ளது. 'புராண வியாபாரம்' என்கிற வணிகமயமாதலில் ஆரம்பித்து உஷா நாராயணனின் 'பிரத்யும்னா - சன் ஆஃப் கிருஷ்ணா' புத்தகத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட 'ஒரு அரசர்... இரு மனைவிகள்... இரு புதல்வர்கள்" என்கிற கட்டுரையோடு இப்புத்தகம் முடிகிறது.

தமிழில் வெளிவந்த, பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு வந்த, ஆங்கிலத்தில் வெளிவந்து கொண்டிருக்கிற பல மறுவாசிப்பு நூல்களைப் பற்றியும், அதில் தங்கள் திறமைக்கும், கற்பனாசக்திக்கும் ஏற்ப நூலாசிரியர்கள் செய்யக்கூடிய இடைச்செருகல்களையும் ஆசிரியர் கோடிட்டுக் காட்டி விமர்சித்துச் செல்கிறார்.

மறுகூறல் அல்லது மறுவாசிப்பில் இரு வகைப் போக்குகள் இருக்கின்றன. முதலாவதாக, கதையைச் சொல்லிச் செல்லும்போதே இதிகாச கதாபாத்திரத்தின் சிறப்பியல்புகளைக் கூறிச் செல்வது. இதற்கு உதாரணம் அசோக் பாங்கர் என்கிற எழுத்தாளர் ராமாயண கதையை Prince of Ayodhya, Siege of Mythila, Demons of Chitrdkot, Armies of Hanuman, Bridge of Rama, King of Ayodhya, Vengence of Ravana, Sons of Sita என எட்டுத் தலைப்புகளிலும், மகாபாரத்தை The seeds of war, The children of midnight, As the blind king watched என்கிற தலைப்புகளிலும் எழுதியிருக்கிறார். அது போல கிருஷ்ணனது கதைகளை ஒன்பது புத்தகங்களாக எழுதியிருக்கிறார்.

இரண்டாவதாக, புராணக்கதையை உள்ளபடியே கூறிவிட்டு, ஒவ்வொரு அத்தியாயத்தின் பின்குறிப்பாக இது இப்படி நடந்திருக்கலாம், இப்படி நடந்திருக்க முடியாது, ஒரு சம்பவம் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் எப்படியெல்லாம் பார்க்கப்படுகிறது என்று தனது 'படைப்பாற்றலோடு கூடிய ஊகத்தை'க் கூறுவது. முன்னதை விட பின்னது அருமையானது என்பது இந்நூலாசிரியரின் கருத்து. இந்த வகையான கதை கூறலில் முன்னனியில் இருப்பவர் மருத்துவர், எழுத்தாளர், நிர்வாகயியல் ஆலோசகர் தேவதத் பட்நாயக் ஆவார். இவருடைய 'சீதா' என்கிற மறுவாசிப்பு நூல் சீதாவின் பார்வையில் சொல்லப்பட்ட ராமாயணம் ஆகும். அதோடு 'லட்சுமண் கோடு' என்பது வால்மீகி ராமாயணத்தில் இல்லையென்றும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட தெலுங்கு, வங்காள நாவல்களில்தான் இந்த 'இடைச்செருகல்' செய்யப்பட்டது என்றும் கூறுகிறார்.

அசோக் பாங்கர் போல அமிஷ் திரிபாதி, அஸ்வின் சாங்கி, கிரிஸ்டோஃபர் டாயில், சித்ரா பானர்ஜி திவாகருணி போன்றவர்கள் புராண காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்து இரு காலங்களில் மாறி மாறி பயணிக்கும் கதைகளை எழுதி வருகிறார்கள்.

இன்றைய இளைஞர்கள் வால்மீகியும், வியாசரும் எழுதியதைப் படிக்கிறார்களோ, இல்லையோ மறு வாசிப்பு நூல்களைப் படிக்கிறார்கள் என்பதற்கு பல லட்சம் பிரதிகள் விற்பதே சாட்சியாகும்.


இந்த தொழில்நுட்ப பரவலாக்க யுகத்தில் நமது வீடுகளில் கதை சொல்வதும், கதை கேட்பதும் மிகவும் அரிதாகி விட்டது. இதை அற்புதமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் இந்த 'மெத்தப்படித்த' எழுத்தாளர்கள். இவர்களில் சிலர், ஐஐஎம், ஐஐடி போன்ற கல்விக் கூடங்களில் படித்து, பன்னாட்டு நிறுவனங்களில் சில ஆண்டுகள் வேலை பார்த்துவிட்டு பின் அவ்வேலையை உதறித் தள்ளிவிட்டு முழு நேர எழுத்தாளர்களாக ஆகியிருக்கிறார்கள். இதிலிருந்தே புராணம் எந்த அளவுக்கு வணிகமயமாக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும்.

இப்படி எழுதப்படும் மறுவாசிப்பு நூல்களில் பல நமது கற்பனைகளுக்கு சவால் விடுவதோடு 'ஹாரி பாட்டர்' போன்ற 'ஃபேண்டஸி' நாவல்களையே விஞ்சி விடும் அளவுக்கு ஏகப்பட்ட'ரீல்'கள் (கட்டுக்கதைகள்) கொண்டதாக இருக்கின்றன. இதற்கு நூலாசிரியர் பல உதாரணங்களைச் சுட்டிக் காட்டினாலும், அஸ்வின் சாங்கியின் 'ரோஸாபால் லைன்' என்கிற 'பெஸ்ட் செல்லரை' மிகவும் மோசம் என்கிறார். அதற்குக் காரணம்: 'கிருஸ்துவம் போதிப்பது அனைத்தும் இந்துமதத்திலிருந்து பௌத்தம் வழி அங்கு சென்றது தான். ஏசுநாதர் சிலுவையிலிருந்து தப்பி இந்தியா வந்து காஷ்மீரில் பல ஆண்டுகள் இருந்து மாண்டார். மேரி மக்தலீன் அவரது மனைவி, அவள் மகத நாட்டு இளவரசி (அதானால் தான் அவளுக்கு அந்தப் பெயராம்!)..." இப்படியாக அந்த நாவல் வாசகர்கள் காதில் நன்றாக பூ சுற்றுகிறது எனக் குறிப்பிடுகிறார்.

'ஹரப்பாவில் அட்டாச்ட் பாத்ரூம்' என்கிற தலைப்பில் ஒரு கட்டுரை. இதில் அமிஷ் திரிபாதியின் 'ஷிவா ட்ரிலாஜி' (Shiva Trilogy) என்கிற 'சிவன் பற்றிய முத்தொகுதி நூல்கள்" குறித்து எழுதியிருக்கிறார். இதில் ஒரு புத்தகத்தில் தான் இன்றைய அரசியல் தலைவர்களும் சொல்லத் தயங்கும் விஷயத்தை- ஹரப்பாவில் அட்டாச்ட் பாத்ரூம் - 'தைரியத்துடன்' சொல்லியிருக்கிறார். பிள்ளையாருக்கு ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்டது உண்மையென்றால், இதுவும் உண்மை தானோ?! புராணக் கதையில் விறுவிறுப்பையும், அளவுக்கு மீறிய கற்பனையையும் ஏற்றி எழுதிவரும்

அமிஷ் திரிபாதியின் புத்தகங்கள் இதுவரை சுமார் 20 லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்று கிட்டத்தட்ட ரூ 50 கோடி வருமானம் ஈட்டியிருக்கிறது. ஷிவாவுக்கு கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து அவர் இப்போது 'ராமனை' மையமாக கொண்டு ஒரு தொடரை ஆரம்பித் திருக்கிறார். அவர் எழுதத் திட்டமிட்டிருந்த நான்கு புத்தகங்களில் இரண்டு ஏற்கனவே வெளிவந்து விட்டது!

இந்நூலாசிரியர் சிலாகித்துப் பேசியிருப்பது அவரது அபிமான எழுத்தாளரான தேவ்தத் பட்நாயக்கின் 'சிகண்டியும் அவர்கள் சொல்ல மறுக்கும் வேறு கதைகளும்' - `Shikandi and other tales they don't tell you' - என்கிற புத்தகத்தைத் தான். வழக்கம்போல, ஆழமான பின் குறிப்புகளுடன் எழுதப்பட்டிருக்கும் புத்தகம் இது.




**மீண்டெழும் மறுவாசிப்புகள்**

ஆசிரியர்: சு.சுப்பாராவ்

**வெளியீடு: *பாரதி புத்தகாலயம்***

***7, இளங்கோ சாலை,***

**தேனாம்பேட்டை, சென்னை - *600 018***

**விலை: *₹ 90.00***

சரி, ஆங்கிலத்தில் தான் மறுவாசிப்பு நூல்கள் வருகிறதா? இல்லை. தமிழில் இதற்கு விதை போட்டவர் புதுமைப்பித்தன். அவரது 'சாப விமோசனம்' தமிழின் முதல் மறுவாசிப்புக் கதையாகக் கொள்ளலாம் என்கிறார் நூலாசிரியர். அவரைத் தொடர்ந்து எம்.வி. வெங்கட் ராம் எழுதிய 'அகலிகை முதலிய அழகிகள்', 'நித்திய கன்னி', சோலை சுந்தர பெருமாளின் 'தாண்டவபுரம்', ப. ஜீவகாருண்யனின் 'கிருஷ்ணன் என்றொரு மானுடன்', இந்திரா பார்த்தசாரதியின் 'கிருஷ்ணா', எஸ்.ராம கிருஷ்ணனின் 'உப பாண்டவம்' ஆகியவையும் இந்த வகையைச் சேர்ந்தவையாகும்.

பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு காண்டேகரின் 'யயாதி', எம்.டி. வாசுதேவன் நாயரின் 'ரெண்டாம் முழம்' தமிழில் 'ரெண்டாம் இடம்' என்கிற பெயரிலும், பைரப்பாவின் 'பருவா' தமிழில் பாவண்ணன் மொழி பெயர்ப்பில் 'பருவம்' ஆகவும் பல மறுவாசிப்பு நூல்கள் இலக்கிய நோக்கத்துடன் வெளிவந்திருப்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆங்கிலத்தில் வெளிவரும் மறுவாசிப்பு நூல்கள் பெரும்பாலும் வணிக நோக்கத்தை முன் வைத்தே எழுதப்படுகின்றன.

இது தவிர மறுவாசிப்பாக இல்லாமல், முழு இதிகாசத்தையும் தனது நடையில் அப்படியே எழுதிச் செல்லும் போக்கு எழுத்தாளர் ஜெயமோகனால் முன்னெடுக்கப்பட்டு வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

பொருளாதார, அரசியல் காரணங்களுக்காக திடீரென்று இந்த மறுவாசிப்புக் கதைகள் ஆங்கிலத்தில் வெளிவர ஆரம்பித்திருப்பது ஒரு புதிய இலக்கிய வகைமை என்றாலும் அதில் கலந்திருக்கும் பொய்யிலும், புரட்டிலும் இந்தத் தலைமுறையினர் மயங்கிவிட்டால் என்ன ஆகும் என்கிற கவலையும், பதட்டமும் ஏற்படத்தான் செய்கிறது.

ஆங்கிலத்தில் மறுவாசிப்புக்காக எழுதப்பட்டு இது வரை வெளிவந்திருக்கிற பெரும்பாலான புத்தகங்களைப் படித்து நேரத்தை வீணாக்குவதற்குப் பதிலாக எளிய நடையில், நகைச்சுவையுடன், நறுக்கென்று, அப் புத்தகங்களில் இருக்கும் நிறை, குறைகளை சுட்டிக் காட்டி எழுதப்பட்டிருக்கும் 'மீண்டெழும் மறு வாசிப்புகள்' என்கிற இந்தப் புத்தகத்தை வாசகர்களாகிய நீங்கள் படிப்பதன் மூலம் உங்கள் நேரத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தலாம்.

'மீண்டெழும் மறுவாசிப்புகள்' என்கிற இப் புத்தகம் இதிகாசங்களின் அடிப்படையில் எழுதப்பட்டு இது வரை வெளிவந்திருக்கும் பல புத்தகங்கள் குறித்த ஒரு விமர்சனம் என்றால் மிகையில்லை!

●